Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

அதிக பக்கங்களுடன் ...

- வன்னியில் அண்ணா சிலை படும் பாடு. - பக். 06
- தமிழர் எழுச்சி தினம்... . - பக். 03
- மூக்கு மயிர் பிடுங்கலாமா ? - பக். 16

விலை : ரூபா 20.00

செய்தி - 52 செப். 24-30, 2016 பக்கம் - 24



## யாழ்ப்பாண மக்கள் எதிர் நோக்கும் பேராபத்து

யாழில் உள்ள ஒரு பகுதி ஆண், பெண்களில் பலர் கடந்த இரண்டு இன்றேல் மூன்று தசாப்த காலமாக எந்தவித வேலை வெட்டியும் இல்லாது வாழ்ந்து வருகின்ற போதிலும், ஆடம்பரமாகவும் சொகுசாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால் இவர்களின் ஆடம்பர வாழ்க்கைக்கு விரைவில் வருகின்றது ஆப்பு.

இது சம்பந்தமாக தெரியவருவது -

யாழில் பொதுவாக, வடபகுதியில் உள்ள குடும்பங்களில் அநேகமாக ஒருவராவது வெளிநாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். இவ்வாறு வெளிநாடுகளில் வாழும் உறவுகள், இங்குள்ள அவர்களின் சொந்தங்கள் மற்றும் நண்பர்களுக்கு மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தை அனுப்பி வருகிறார்கள்.

இவ்வாறு வெளிநாடுகளில் வாழ்கின்றவர்கள் அனுப்பும் பணத்தை வைத்துக் கொண்டு, இங்குள்ளவர்கள் தாம்.தூம் என்று வாழ்ந்து வரும் வாழ்க்கை விரைவில் முடிவு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடபகுதி சொந்தங்களைச் சேர்ந்தவர்கள், நாட்டை விட்டு 1970 களின் கடைசிப் பகுதியில் அகதித் தஞ்சம் கோரி வெளிநாடுகளுக்கு சென்றவர்களின் வயது அனேகம் பேர் இன்று 50, 60 களை தாண்டிவிட்டது.

02 இல்

## பொட்டு அம்மான் எங்கே?



பொட்டம்மான் எங்கே இருக்கிறார்? இறந்து விட்டாரா இல்லையா? எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கின்றது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ம் திகதிக்கு பின்னர் வெளிவந்த தகவல்கள் எல்லாமே பொட்டு அம்மான் என்று அழைக்கப்படும் சன்முகலிங்கம் சிவசங்கர் பற்றிய குழப்பமான தகவல்களாகவே இருக்கின்றன.

2009ஆம் ஆண்டு மே மாதம் கொழும்பு மேல் நீதிமன் றத்தில் சொலிசிற்றர் ஜெனரல் கப்பில வைத்தியரட்ண குறிப்பிடும் போது, பிரபாகரனும் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் தலைவரான பொட்டு அம்மானும் இறந்து விட்டார்கள் என்றும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை வழக்கில் இருந்து அவர்கள் இருவரின் பெயர்களையும் நீக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

02 இல்

## விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்தது தவறு




(பிறெஷல்ஸ்)

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத பட்டியலில் சேர்த்தது தவறு. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்க வேண்டும் என்று இடித்துக் கூறுகிறார் ஒன்றிய நீதிமன்றங்களின் சட்டமா அதிபர்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கவாத செயற்பாடுகளில் ஈடுபட்டார்களா என்று போதிய ஆதாரங்களை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்காத படியினால், ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகள், புலிகளை அவர்களது பயங்கரவாத பட்டியலில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் என்று ஐரோப்பிய நீதிமன்றின் சட்டமா அதிபர் எடுத்துக் கூறியுள்ளார்.

02 இல்



# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk

## ஒரு நாள் 'எழுக தமிழ்' கூத்து முடிந்தது

ஒரு நாள் 'எழுக தமிழ்' கூத்து, பயங்கரத் தோல்வியில் முடிவடைந்திருக்கிறது. அரிதாரப் பூச்சைக் கலைக்கும் முன்னர் வேஷம் கலைந்து விட்டது. இது ஒரு எதிர்ப்பு ஊர்வலம். ஆனால் இது ஒரு நாள் எழுக தமிழ் கூத்தாக மாறியிருந்தது.

இதனை தமிழ் மக்கள் பேரவை என்றொரு அமைப்பு ஆரம்பித்து வைத்தது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு வடக்கு முதல்வர் சி.வி விக்கினேஸ்வரன் தலைமை வகித்தார். இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இந்த சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தின் இரு இடங்களிலிருந்து ஆரம்பமானது. முதலாவது யாழ் பல்கலைக்கழக முன்றல், மற்றையது யாழ் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றல்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையடுத்து வடக்கில் அனேகமான கடைகள் மூடப்பட்டிருந்தன. தனியார் பேருந்துகள் இயங்கவில்லை. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, அத்துடன் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி எனப்படும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவைகள் கலந்து கொண்டிருந்தன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏழு பிரதான கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டார்கள். அவைகளில் முக்கியமானவை சுயாட்சிக் கோரிக்கை, வடக்கு -கிழக்கு மாகாண இணைப்பு, ஒற்றையாட்சிக்கு எதிரான கோரிக்கை என்பவையாகும்.

இதனைவிட இந்த ஏழு கோரிக்கைகளில், - புதிய அரசியலமைப்பில் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை உள்ளடக்குதல், யுத்த கால போர்க்குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணை, சிறைகளில் உள்ள தமிழ்ப் போராளிகளை விடுதலை செய்தல், தமிழ்ப் பகுதிகளில் இடம்பெறும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல் என்பவையாகும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியும் ரெலோவும் பங்குபற்றவில்லை. இது சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட எம்.பியுமான எம்.ஏ சுமந்திரனிடம் கேட்டபோது, தமிழரசுக் கட்சி இந்த ஊர்வலத்தை எதிர்க்கவில்லை. ஆனால் ஊர்வலம் நடத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட காலப்பகுதியைதான் தாங்கள் எதிர்ப்பதாக தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் தாங்கள் அரசாங்கத்துடன் பேச்சு நடத்திக் கொண்டிருப்பதாகவும் இதற்கு இந்த ஆர்ப்பாட்டம் ஊறுவிளைப்பதாக இருக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார். இதே கருத்தைத் தான் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் கூறினார்.

மேலும் அன்று இராணுவத்துடன் இருந்து செயற்பட்ட ஈ.பி.டி.பி.யுடன் இவர்கள் எவ்வாறு இணைந்து செயற்படுவர்கள் என்றும் மாவை சேனாதிராஜா கேள்வியெழுப்பினார்.

முதல்வர் விக்கினேஸ்வரன் 2013ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு முதல்வராக தெரிவு செய்யப்பட்டார். இதனையடுத்து 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி மாகாண முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்ட கடிதத்தை அன்றைய ஆளுனர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் இருந்து பெற்றுக் கொண்டார். எழுகதமிழ் நிகழ்வில் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் பேசும் போது,தமிழ் மக்களினால் தெரிவான பிரதிநிதிகளை பலப்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தார். இதே கோரிக்கையை ஏற்கனவே புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்ததால், கிட்டத்தட்ட 32,000 இளைஞர்கள் செத்துமடிய நேரிட்டது.

விக்கினேஸ்வரன் வடக்கு முதல்வராகி 3 வருடங்கள் ஆகியும் இன்று வரை மத்திய அரசினால் வழங்கப்படும் நிதி திறைசேரிக்கு திரும்பிச் செல்லாமல் இருப்பதை தடுக்கமுடியவில்லை.

இவரின் இரண்டு ஆண் பிள்ளைகளும் தென்பகுதியில் சிங்களப் பெண்களையே திருமணம் செய்துள்ளார்கள். இவ்வாறு தமது இரு பிள்ளைகளையும் தென் பகுதிக்கு அர்ப்பணித்த ஒருவர், ஏன் சிங்கள மக்களுக்கு எதிராக போர்க்கொடி தூக்குகின்றார் என்பது அதிர்ச்சியளிக்கும் விடயமாகவே உள்ளது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பொட்டு அம்மான் எங்...

அதனையடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க பொட்டு அம்மான் இறந்து விட்டார் என்றும் உறுதிப்படுத்தினார். மேலும் பொட்டம்மானின் பெயரை மேல் நீதிமன்ற நீதிபதி நீக்கி உத்தரவிட்டார்.

மேலும் மார்ச் 2010ல் பொட்டு அம்மானின் பெயரை இன்ரப்போல் ( INTERPOL) என அழைக்கப்படும் சர்வதேச பொலிஸ் நிறுவனத்திடம், பொட்டு அம்மானின் பெயரை நீக்குமாறு இலங்கை அரசு கேட்டுக் கொண்டது.

அது மாத்திரமல்லாமல், ஒக்ரோபர் மாதம் 2010ல் பொட்டு அம்மானும் பிரபாகரனும் இறந்து விட்டார்கள் என்றும் ரஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து அவர்களின் பெயர்களை நீக்குமாறும் சி.பி.ஐ எனப்படும் CENTREL BUREAU INVESTIGATION கேட்டுக் கொண்டதையடுத்து, ரஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து இந்த இருவரின் பெயர்களை இந்திய அரசு நீக்கிவிட்டது.

ஸ்ரீலங்கா அரசு பொட்டு அம்மானின் இறந்த உடலை அடையாளம் காட்டத் தவறியதை அடுத்து பொட்டம்மான் தப்பிச் சென்று கனடாவில் வாழ்வதாக வதந்திகள் கிளம்பின. செப்ரெம்பர் மாதம் 2014 ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு செய்தியில், பொட்டம்மான் ஹொங்ஹொங்கில் வைத்து கைது செய்யப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக கூறப்பட்டது.

அத்தோடு 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 'தினமின' எனும் சிங்களப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியில், தமிழகத்தில் 'குருத்து 'என்னும் பெயரில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் 2012 ஆம் ஆண்டு "Gota's war" எனும் புத்தகம் அன்றைய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் சார்பில் சி.ஏ சந்திரப்பிரேம என்பவரால் எழுதப்பட்டது.இந்தப் புத்தகம் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் அங்கீகாரத்துடன் வெளியிடப்பட்டது.

இந்தப் புத்தகத்தின் 486 வது பக்கத்தின் 2வது பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயமாக ' Pottu Amman had been killed a short while earlier," என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே 2012 ல் கோத்தபாய ராஜபக்ஷவின் சார்பில் உத்தியோகபூர்வமாக வெளிவந்த புத்தகத்தில் பொட்டு அம்மான் கொல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் அண்மையில் கடந்த செப்ரெம்பர் 6ஆம் திகதி முன்னாள் இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண எழுதி வெளியிட்ட ' நந்திக் கடலுக்கான பாதை' என்ற புத்தகத்தில் அவர் புதிய சந்தேகத்தை கிளப்பியுள்ளார்.அதில் 739 வது பக்கத்தில் எழுதுகின்ற போது "

The only person we had jet to find was Pirabaharan's closest ally and leader of the LTTE intelligence wing, Pottu Amman ,as per the information received, it was said Pottu Amman,his wife and their two sons who close LTTE cadre, had all died in one of our attacks. Though we recovered the bodies of his wife and the two sons, we could not

(தொடர்ச்சி...06 இல்)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில்...

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றங்களின் சட்டமா அதிபரின் கருத்து நீதிமன்றங்களை கட்டுப் படுத்தாத போதிலும் , அவரின் கருத்தை ஏற்றுக் கொண்டால் பலஸ்தீன விடுதலை இயக்கங்களில் ஒன்றான ஹமாஸ் மற்றும் இலங்கையைச் சேர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகள் சம்பந்தமாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அரசாங்கங்களுக்கு இடையில் நிலவும் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு ஏற்படும்.

2014 ஆம் ஆண்டு, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அதிகாரம் பெற்ற நீதிமன்றம் புலிகளையும் ஹமாஸ் இயக்கத்தையும், ஐரோப்பிய நாடுகளில் உள்ள தங்கள் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்று, இரண்டு தனித்தனியான தீர்ப்புக்களை நீதிபதிகள் குறிப்பிட்டிருந்தார்கள்.

அந்த நீதிமன்றம் தனது கருத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஹமாஸ் விடுதலை இயக்கம் பற்றி குறிப்பிடும் போது, அந்த இரண்டு அமைப்புக்களையும் தடை செய்ய வேண்டும் என்ற தீர்மானம் ஆதாரங்களை அடிப்படையாக வைத்து எடுக்கவில்லை. ஆனால் பத்திரிகைகளிலும் இணையத் தளங்களிலும் உள்ள செய்திகளை அடிப்படையாக வைத்தே முடிவுகளை எடுத்தன என்று குறிப்படப்பட்டுள்ளது.

அதனையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டங்களை உருவாக்கும் பொறுப்பில் உள்ள ஐரோப்பிய கவுன்ஸில், வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யும் போது 2001ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியம்(பிரித்தானியா) ஹமாஸையும், புலிகளையும் பயங்கரவாதிகள் என்று முடிவெடுத்த தீர்மானத்தையும் அதே போல அமெரிக்கா இந்த இரண்டு அமைப்புக்களையும் பயங்கர வாதிகள் அமைப்பில் சேர்த்துக் கொண்டதை வைத்தே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்தார்

மேலும், ஐரோப்பிய யூனியனின் அட்வகேட் ஜெனரல் எல்நோர் ஷாப்ரன் (Elenor Sherphton) குறிப்பிடும் போது, 2014 நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு எதிராக செய்யப்பட்ட மேன்முறையீட்டில் பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்களிலும் வந்த தகவல்களை அடிப்படையாக வைத்து ஐரோப்பிய கவுன்ஸில் நம்பிக்கை வைக்க முடிந்தது என்று குறிப்பிட்டார்.

மேலும், இது சம்பந்தமாக எல்நோர் ஷாப்ரன் தெரிவிக்கும் போது, புலிகளும் மற்ற பலஸ்தீன இயக்கங்களும் செய்த தாக்குதல்கள் சம்பந்தமான தகவல்களை நீதிமன்றத்திற்கு தரவேண்டுமே தவிர, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு வெளியே உள்ள நாடுகள் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை வைத்து எடுத்திருக்க கூடாது.

இந்த இரண்டு அமைப்புக்களையும் அந்த இரண்டு நாடுகளும் தடை செய்துவிட்டன என்ற குறிப்பை வைத்து, ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகள் இந்த இரண்டு அமைப்புக்களையும் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்க முன்வரக்கூடாது. இவ்வாறு சேர்க்க முன்வரும் போது மனித உரிமைகளுக்கு பாதுகாப்பு வழங்காமல் இவ்வாறு செய்வது தவறு என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் லக்ஸம்பேர்க்கில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் மேன்முறையீட்டு நீதிமன்றம், இந்த மேன் முறையீடு சம்பந்தமான முடிவை தீர்க்கமாக எடுப்பதற்கு பல மாதங்கள் ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## யாழ்ப்பாண மக்கள் எதிர் நோக்கும்...

அவர்கள் அந்த நாடுகளுக்கு சென்று 30-35 வருடங்கள் ஆகிவிட்டன. அவ்வாறு சென்றவர்கள் ஐரோப்பா, வடஅமெரிக்காவின் பனி படர்ந்த நாடுகளில் தினசரி 12 தொடக்கம் 16 மணித்தியால ங்கள் உழைத்தனர். அனேகமானவர்கள், கடுமையாக கால நேரம் பார்க்காமல். உழைத்து வேலை செய்தார்கள்.

இங்கு இருக்கும் அவர்களின் அக்கா, தங்கைகளுக்கும் திருமணம் செய்து வைத்தார்கள். வீடுகளைக் கட்டினார்கள். பல்வேறு சமூகப் பணிகளை செய்தார்கள். இவ்வாறு இவர்கள் செய்த சமூகப் பணிக்கு இங்குள்ள இந்துக் கோயில்கள் பளிச்சென்று மிளிர்ந்து நிற்பதற்கு இவர்களின் கடுமையான உழைப்பே காரணம்.

இவ்வாறு தமது வீட்டிற்கும், சமூகத்திற்கும் உழைத்த இவர்களில் பெரும்பாலானோர் தற்போது 55-60 வயதை எட்டி விட்டார்கள். பலர் தமது வேலைகளில் இருந்து ஓய்வும் பெற்று விட்டார்கள்.

ஆனால் இவர்களின் பிள்ளைகள் இரண்டாம் தலைமுறையினர். அநேகமாக தமிழே பேசமாட்டார்கள். ஸ்ரீலங்கா என்றால் எங்கே இருக்கின்றது எனக் கேட்பார்கள். இலங்கையில் தமக்கு உறவுகள் இருக்கின்றார்களா, இல்லையா என்பது கூடதெரியாது. இவர்களின் பெற்றோர் இங்குள்ள உறவுகளுக்கு பணம் அனுப்புகிறார்கள். ஆனால் இவர்களின் பிள்ளைகள் ஆகக்குறைந்தது 5 டொலர் கூட அனுப்ப மாட்டர்கள். இது தான் வடபகுதி எதிர்நோக்கும் பிரச்சினையாகும்.

பனிக் குளிர் நிறைந்த தேசங்களில் இவர்கள் தினமும் 16-18 மணித்தியாலங்களுக்கு மேலாக உழைத்து இங்கு அனுப்பும் பணத்தை இங்குள்ளவர்கள் ஆடம்பரமாக செலவழித்து நாசமாக்கி விட்டார்கள். எனவே வருங்காலத்தில் இந்தப் பணம் வராவிட்டால் இங்குள்ளவர்களின் நிலை என்ன? நினைக்கவே தலை சுற்றுகின்றது.

# எழுபத்து ஆறு இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வரவுள்ளனர்



(கொழும்பு)

76 இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இவர்களில் சுயவிருப்பின் பேரில் மூன்று குழுவினர்களாக 41 பேர் (18 குடும்பங்கள்) திருச்சியி லிருந்து 35 பேர் (13 குடும்பங்கள்) சென்னையிலிருந்து இலங்கை விமானசேவை செப்டெம்பர் மாதம் 29ம் திகதி இலங்கைக்கு வருகை தர உள்ளனர்.

அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் இவர்கள் வருகை தருகின்றார்கள்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம், மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் அவர்களின் முயற்சியால், தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சும் இலங்கை விமானசேவை நிறுவனமும் அவர்களது பயணப்பொதியின் அளவையும் அதிகரித்துள்ளது.

இவ் அகதிகள் 76 பேரில் 41 ஆண்களும் 35 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் வவுனியா, மன்னார், மாத்தளை, முல்லைத்தீவு, திருகோணமலை, மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக வருகை தருகின்றனர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலங்கையை வந்தடைவதற்கு இலவசமாக விமான பயணச்சீட்டு அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங்கப்படும். அத்துடன் மீள், சமூக ஒருங்கிணைப்பிற்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் அமெரிக்க டொலர் 75 உம் போக்குவரத்து நன் கொடையாக ஒவ்வொருவருக்கும் அமெரிக்க டொலர் 75 உம் போக்குவரத்து நன் கொடையாக ஒவ்வொருவருக்கும் அமெரிக்க டொலர் 19 உம் உணவு அல்லாத பண நன் கொடையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் அமெரிக்க டொலர் 75 உம் வழங்கப்படுவ தாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞான சோதி தெரிவித்தார்.

மேலும் 2011ம் ஆண்டிலிருந்து இதுவரை மொத்தமாக 5035 இலங்கை தமிழ் அகதிகள் (1,833 குடும்பங்கள்) தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். மேலும் இந்தியாவில் 6,4000 பேர் இந்தியாவிலுள்ள 109 முகாம்களில் இருக்கின்றனர். மொத்தமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் இந்தியாவில் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு,புனர்வாழ்வளிப்பு,மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதன் மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்ததன் பேரில் தற்போது அமைச்சினால் ஆகக்கூடிய தொகையாக 1,00,000 ரூபா தாயகம் திரும்பும் தமிழ் அகதிகள் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக வழங்கப்படுகின்றது.

மேலும் மீள்குடியமரும் மக்களுக்கு 6 மாத காலத்திற்கு உலர் உணவுகளை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம், மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சானது வீடுகள் மற்றும் தமது உறவினர்களை இழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நட்ட ஈடுகளை வழங்குமாறு ஆட்களையும், ஆதனங்களையும், கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபைக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது. வீடுகளை இழந்தவர்களுக்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் வீட்டுத்திட்டத்தின் கீழ், வீடுகள் வழங்கப்படுமென அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். அரசாங்கமானது இந்தியாவிலிருந்து கட்டம் கட்டமாக, சுயவிருப்பில் இலங்கைக்கு அகதிகளை அழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன் அதிகரித்த அக்திகளின் வருகையானது நிரந்தர சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான சமிஞ்சையாக காணப்படுவதாகவே. சிவஞானசோதி தெரிவித்தார்.

# 434 ஊழல் குற்றச்சாட்டுகள் விசாரணையில்

(கொழும்பு)

கோடிக்கணக்கான பணத்தை சென்ற அரசாங்கத்தில் உள்ளவர்கள் உழல் செய்துள்ளதாக குற்றம் சுமத்தி ஊழலுக்கு எதிரான செயலகம் 434 குற்றச்சாட்டுகளை பதிவு செய்துள்ளது.

இவ்வாறு பெறப்பட்ட குற்றச் சாட்டுகளில் 317 குற்றச்சாட்டுகள் நிதிமோசடி குற்ற விசாரணைப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டுவருவதாக ஊழலுக்கு எதிரான செயலகத்தின் பணிப்பாளர் ஆனந்த விஜயபால தெரிவிக்கின்றார்.

மேலும் 28 குற்றச்சாட்டுகள் குற்றப்புலனாய்வுப் பிரிவினராலும், 85 குற்றச்சாட்டுகள் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினாலும், 7 குற்றச்சாட்டுகள் மேலதிக விசாரணைக்காக பொலிஸ்மா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அநேகமான குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தினால் நடத்தப்படும் நிறுவனங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களிலும் நடைபெற்றுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், இத்தகைய நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் குற்றங்கள் குறித்து பொலிஸ் திணைக்களம் மூன்று வகையான விசாரணைப் பிரிவுகளை அமைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார். அரச திணைக்களங்களில் நடைபெற்ற இவ்வாறான நிதி மோசடிகள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ள அதிகாரியினால் வகைப்படுத்தப்பட்டு குறித்த நிறுவனங்கள் மீதான விசாரணைகள் சி.ஐ.டி எனப்படும் குற்றப்புலனாய்வு பிரிவினராலும், நிதிமோசடி, லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினராலும், நடத்தப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பணத்துடன் வாகனத்தையும் கடத்திச் சென்ற இராணுவ வீரர்கள் பொலிஸாரால் கைது



(க.கிஷாந்தன்)

மோட்டார் வண்டியொன்றில் சென்றுக் கொண்டிருந்த ஓய்வு பெற்ற இராணுவ வீரரொருவரை தாக்கி அவர் வசமிருந்த 43, 750.00 பணத்துடன் குறித்த வாகனத்தையும் கடத்திச் சென்ற இராணுவ வீரர்கள் இருவரை வெலிமடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹப்புத்தளை பகுதியிலிருந்து வெலிமடை நோக்கி வந்துகொண்டிருந்த குறித்த மோட்டார் வாகனத்தை பொரலந்தை ஹின்னாரங்கொல்ல பகுதியில் வைத்து வழிமறித்து தாக்குதலை நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த கடத்தல் நடவடிக்கைக்கு பயன்படுத்தியதாக கூறப்படும் முச்சக்கர வண்டியொன்றையும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சம்பவத்தில் தாக்கப்பட்டவர் பொலிஸ் அவசர அழைப்பு பிரிவிற்கு அறிவித்ததையடுத்து விரைந்த பொலிஸார் குறித்த சந்தேக நபர்களை, சம்பவம் நடந்து குறுகிய நேரத்தில் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைதானவர்கள் தியத்தலாவை இராணுவ முகாமில் கடமையாற்றி வரும் 31,39 வயதுடைய இராணுவ வீரர்கள் என பொலிஸ் ஆரம்பக்கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் வெலிமடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். வெலிமடை பொலிஸார் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஸ்ரீமா பண்டாரநாயக்காவின் 16வது நினைவு

## நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில்



இலங்கையின் காலம் சென்ற பிரதம மந்திரி ஸ்ரீமா பண்டாரநாயக்காவின் 16வது நினைவு தினத்தை யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

உலகின் முதலாவது பெண் பிரதமரான ஸ்ரீமா பண்டாரநாயக்க 1916 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17 ஆம் திகதி பிறந்தார். அவர் தனது ஆரம்பக் கல்வியை சென்ற். பிறிட்ஜ் கொன் வென்ற் மகளிர் கல்லூரியில் மேற் கொண் டார்.

1940 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யு.ஆர் டி பண்டாரநாயக்கவை திருமணம் செய்து கொண்டார். திரு பண்டாரநாயக்க பிரதம மந்திரியாக இருந்த போது பௌத்த பிக்கு ஒருவரினால் துப்பாக்கியினால் 1959 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

இவரது கொலையைத் தொடர்ந்து இடம் பெற்ற தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. தனது கணவனின் கொள்கைகளை தொடர்ந்தும் பின்பற்றுவேன் என்ற கோஷத்துடன் ஸ்ரீமா பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தார்.

இந்தத் தேர்தலின் பின்னர் ஸ்ரீமா செனட்டராக நியமிக்கப்பட்டு நாட்டின் முதல் பெண் பிரதமராக தெரிவானார்.

ஐந்து ஆண்டு களின் பின்னர் அதாவது 1965 ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெற்றி பெறவில்லை. பின்னர் 1970 ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1977 ஆம் ஆண்டு வரை நாட்டை ஆட்சி செய்தது.

பின்னர் இடம்பெற்ற தேர்தல்களில் வெற்றி பெற தவறியதையடுத்து 1977 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீமா பண்டாரநாயக்கவும் அரசியல் அநாதைகள் போல் ஒதுக்கப்பட்டு இருந்தார்கள்.

1994 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. இந்த சந்தர்ப்பத்தில் தான் ஸ்ரீமா - பண்டாரநாயக்க தம்பதிகளின் மகளான சந்திரிக்கா குமாரதுங்க நாட்டின் பிரதமராகவும், பின்னர் நாட்டின் ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்டார். சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாகியதுடன் நாட்டின் பிரதமராக ஸ்ரீமா பண்டாரநாயக்கா மீண்டும் பதவியேற்றார்.

மேலும் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பத்தாம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வாக்களித்து விட்டு வீடு திரும்பிய வேளை ஏற்பட்ட மாரடைப்பினால் அவர் இவ்வுலக வாழ்வில் இருந்து விடைபெற்றார். பதவியில் இருக்கும் போதே உயிர் நீத்த உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற புகழ் இவருக்கு உண்டு.

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவின் நினைவு தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக ஓர் பொதுக்கூட்டத்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இந்தப் பொதுக் கூட்டமானது எதிர்வரும் ஒக்ரோபர் 9ம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் 9ம் திகதி ஸ்ரீமாவின் 16வது நினைவு தினத்தை முன்னிட்டு யாழிலுள்ள சகல ஆலயங்களிலும் விசேட பூஜை நிகழ்வுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தேசிய அரசின் எதிர்காலம் ஊஞ்சலாடுகின்றது - ஆனந்த சங்கரி



தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு வீரசிங்கம் ஆனந்த சங்கரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா சம்பந்தன் அவர்களுக்கு சென்ற 22ஆம் திகதி விரிவான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.இந்தக் கடிதத்தில் அவர் தேசிய அரசின் எதிர்காலம் ஊசலாடுவதாக தெரிவித்துள்ளார்.

ஆனந்தசங்கரி எழுதிய கடிதத்தின் விபரத்தை கீழே தருகின்றோம்.

திரு சம்பந்தன் அவர்களுக்கு,

தேசிய அரசின் எதிர்காலம் ஊஞ்சலாடுகிறது.

கடந்த மாதம் 19ம் திகதி உங்களுக்கு வரிசைக் கிரமமாக இரண்டாவது கடிதத்தை எழுதியபோது மூன்றாவது கடிதத்தையும் இவ்வளவு சீக்கிரமாக எழுதவேண்டிவருமென நான் எண்ணவில்லை.

நீங்கள் உட்பட அக்கடிதத்தை வாசிப்பவர்கள் கனடாவின் ஒட்டாவா சமஷ்டி நீதிமன்றத்தில் கடந்த ஆகஸ்ட் 25ம் திகதி இலங்கையர் ஒருவருவருக்கு அரசியல் புகலிட கோரிக்கை அந்நாட்டு குடிவரவு இலாகாவால் நிராகரிக்கப்பட்டு மேல்முறையீடு செய்யப்பட்ட மேல்நீதிமன்ற விசாரணையில் அவரது விண்ணப்பத்தை நிராகரித்த நீதிபதி பிரவுண் அவர்களின் தீர்ப்பை உள்ளூர் பத்திரிகைகளில் படித்துவிட்டு இதனை எழுதியதாக நினைத்திருப்பீர்கள்.

இக்கடிதத்தைத்தான் அத்தீர்ப்பை படித்துவிட்டு எழுதுகிறேன். தமிழ் தேசிய கூட்டமைப்போடு இணைந்த உங்களுடைய பல நடவடிக்கைகள் நீங்கள் ஒரு சிறந்த அரசியல்வாதியென நல்லதொரு பெயரை முன்பு பெற்றிருக்கக்கூடும். அந்த உற்சாகத்தில் செயற்பட்ட நீங்கள் பல்வேறு நாடுகளில் அரசியல் புகலிடம் கோரி வாழும் தமிழ் மக்களுக்கு பெரும் இடைஞ்சலை ஏற்படுத்தியுள்ளீர்கள்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக தமிழ் தேசிய கூட்டமைப்பை முறையற்ற வகையில் உபயோகித்தமையானது ஒரு நாள் உங்களை திரும்பிவந்து கடுமையாக தாக்கக்கூடும் என்று நீங்கள் உணரவில்லை.

நீதிமன்றத்தின் தீர்ப்பு உங்களை அதேபோல் தமிழரசு கட்சியையும், தமிழ் தேசிய கூட்டமைப்பும் விடுதலைப் புலிகளாகிய பயங்கரவாத அமைப்பு ஒன்றுக்கு ஆதரவு வழங்கியதாக அத் தீர்ப்பு கூறுகின்றது என்பதை இன்றைக்காவது உணருகின்றீர்களா.?

அப்படி நான் கூறவில்லை. நீதிமன்றமே கூறியுள்ளது.உங்களை தலைவராக ஏற்று தமிழரசு கட்சியையும், தமிழ் தேசிய கூட்டமைப்பையும் ஆதரித்து வந்ததாக அகதி அந்தஸ்தஸ்து கோரியவர் கூறியதை காரணமாக காட்டியே நீதிபதியின் தீர்ப்பு அமைந்துள்ளது. இது சம்பந்தமாக நான் மேலும் ஆராய விரும்பவில்லை.

நீங்கள் ஒரு முதிர்ந்த சட்டத்தரணியாக இருப்பதால் இந்தத் தீர்ப்பு உலகின் பல்வேறு பகுதிகளை சென்றடையும்போது பல்வேறு விடயங்களில் எத்தகைய தாக்கத்தை இந்த தீர்ப்பு ஏற்படுத்தும் என்பதை அறிந்திருக்க வேண்டும். உள்ளூரில் இத் தீர்ப்பு பெரியளவில் அறியவரும் போது உங்கள் ஆதரவுடன் உருவாகிய தேசிய அரசாங்கம் என்று நீங்கள் தம்பட்டம் அடிக்கின்ற அந்த அரசுக்கு என்ன நடக்கும் என்பது அந்த கடவுளுக்குத்தான் தெரியும்.

திரு.சம்பந்தன் அவர்களே, எதிர்காலத்தில் என்ன நடக்கப்போகின்றது என்று முன்கூட்டியே அறியும் அளவிற்கு நானொரு தீர்க்கதரிசி அல்ல. ஆனால் ஒரு அமைப்பை பற்றியும் அதன் செயற்பாடுகளை பற்றியும் நன்கு அறிந்தவர்களுக்கு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை ஊகித்து அறிய அவர்களிடமுள்ள பொதுஅறிவு போதும். ஒன்றும் அறியாத ஒரு அப்பாவிகூட காலவோட்டத்தில் என்ன நடக்கும் என்பதை முன்கூட்டியே அறிந்துகொள்வார்.

ஆனால் மிகவும் வருத்தத்துக்குரிய விடயம் என்னவெனில் ஓர் மிக்க அனுபவமிக்க அரசியல்வாதியாகவும், முதிர்ந்த சட்டத்தரணியாகவும் இருந்துகொண்டு எதிர்காலத்தில் தமிழ் சமூகத்துக்கு என்ன நடக்கும் என்பதனை முன்கூட்டியே அறியாது பொறுப்பற்ற வகையில் தமிழ் சமூகத்தை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தக்கூடிய வகையில் ஒரு சிறந்த அதிகாரம் பெற்றவருக்கு உதவியிருக்கின்றீர்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது மிக அவதானமாக தெரிவு செய்யப்பட்ட நான்கு அரசியல் கட்சிகளை ஆறு சிறந்த தமிழ் முக்கியஸ்தர்கள் இணைந்து உருவாக்கினர்.

2001ம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஈட்டிய வெற்றி மிகப்பிரதானமானதாகும். நான்கூட 36,000 வாக்குகளை பெற்று பல்வேறு கட்சிகளாலும் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது பேரில் முதலாவதாக நான் தெரிவு செய்யப்பட்டேன்.

தமிழரசு கட்சியின் ஸ்தாபகர் கௌரவ எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அரச வழக்கறிஞர் 1972ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை ஸ்தாபித்து விட்டு தன்னால் உருவாக்கப்பட்ட தமிழரசு கட்சியை முடக்கி வைத்திருந்தார்.

அதனை மீள இயங்க வைக்க அவர் என்றும் எண்ணாமல் இருந்தபோதும் அவர் இறந்து 26 ஆண்டுகளுக்குப் பின் பதவி ஆசை பிடித்த ஒருவர் அதனை புதுப்பித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரை, அன்று என்னால் வகிக்கப்பட்ட தலைவர் பதவியை உங்களின் உதவியுடன் எதுவித நியாயமான காரணம் எதுவுமின்றி வன்னியில் உள்ள ஒருவருடைய உத்தரவின் பேரில் பதவி நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டார். இது பதவியை மோசடி மூலம் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சியென்பதை நீங்கள் நன்கு அறிந்திருந்தீர்கள்.

தமிழரசு கட்சியை புதுப்பிக்க அதன் ஸ்தாபகர் என்றும் விரும்பியதில்லை. தமிழரசு கட்சியின் ஆரம்பகால உறுப்பினராகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாகவும் செயற்பட்ட திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களும் அவ்வாறு என்றும் விரும்பியதில்லை.

அவரின் மனைவி மங்கையற்கரசி அம்மையார் இந்த நடவடிக்கையை வன்மையாக கண்டித்ததுடன் இதுவொரு படுபாதக செயலெனவும், எமது பெருந்தலைவர்களை அவமதிப்பதாகவும் கண்டித்திருந்தார். திரு.சம்பந்தன் அவர்களே திரு. செல்வநாயகம் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழரசு கட்சியில் நீங்கள் ஒருபோதும் அங்கத்தவராக இருக்கவில்லை என்பதை நான் உங்களுக்கு ஞாபகமூட்ட வேண்டுமா? நீங்கள் மோசடி மூலம் திரு.மாவை சேனாதிராஜா அவர்களால் மீள் உருவாக்கப்பட்ட தமிழரசு கட்சியில் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தீர்கள். தயவு செய்து இதனை ஒத்துக்கொள்ளுங்கள்.

இது சம்பந்தமாக நான் மேலும் இதுபற்றி கூற விரும்பவில்லை. முழு நாடும் மற்றும் பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற நம்மவர்களும் இவர்கள் எடுத்த முயற்சிகள் அத்தனையும் தமிழர் விடுதலைக் கூட்டணி பதவியிலிருந்து நீக்குவது முக்கிய காரணமாக இருந்தது. நியாயமான காரணங்களை காட்டி கோரிக்கை விடுத்திருந்தால் நானாக பதவியை துறப்பதாக கூறியிருந்தேன். ஆனால் அதற்கு எவரும் முன்வரவில்லை.

(தொடர்ச்சி 09 இல்)

# நடிகைகள் சைடுல என்ன செய்றாங்க தெரியுமா?

இப்போதெல்லாம் நடிகைகளின் கேரியர் என்பது ரொம்பவே சுருங்கிவிட்டது. மூன்று. நான்கு ஆண்டுகளுக்கு மேல் நீடிப்பதில்லை. அதற்குள் சினிமாவில் எவ்வளவு சம்பாதிக்க முடியுமோ அவ்வளவு சம்பாதித்து செட்டில் ஆகிவிட வேண்டும். இதற்கு நடிகைகள் தேர்ந்தெடுப்பது பார்ட் டைம் பிசினஸ். சினிமாவில் தங்களுக்கு இருக்கும் தொடர்புகள், புகழ் ஆகியவற்றை தங்களது பிசினஸ்களுக்கும் பயன்படுத்தி பிசினஸிலும் கொடி கட்டி பறக்கும் சில நடிகைகளின் விவரங்கள்.



## தமன்னா

தமன்னா தமிழ், தெலுங்கு, இந்தியில் பிஸியாக இருக்கும் நடிகை தமன்னா. தமிழில் இப்போதுகூட விஷாலுடன் கத்திச்சண்டையில் நடித்திருக்கிறார். இவ்வளவு பிஸி ஷெட்யூலிலும் ஒரு நகைக்கடை ஆரம்பித்து பிஸினஸிலும் பிஸியாக இருக்கிறார். விட் அண்ட் கோல்ட் என்ற இந்த ஜீவல்லரி முழுக்க முழுக்க ஆன்லைன் ஜீவல்லரி. இந்த கடையின் க்ரியேட்டிவ் டிசைனர் தமன்னா தான். ஆர்டர் தந்தால் அவரே டிசைன் பண்ணி நமக்கு அனுப்பி வைப்பார். தங்கம் மட்டும் தான் கிடைக்கும் என்பதால் வலுவான பர்ஸ் இருப்பவர்கள்.



## ரகுல்ப்ரீத்சிங்

ரகுல்ப்ரீத்சிங் தமிழில் சோபிக்காவிட்டாலும் தெலுங்கில் முன்னணி ஹீரோயினாகி விட்ட ரகுல்ப்ரீத் சிங் ஆரம்பித்திருப்பது ஒரு ஃபிட்னஸ் ஸ்டூடியோவை. அதாவது ஜிம். எஃப் 45 என்ற இந்த ஃபிட்னஸ் ஸ்டூடியோ அமைந்திருப்பது ஹைதராபாத்தில் இருக்கும் கச்சிபௌலி பகுதியில். விசிட்டர்களுக்கு நேரடியாகவே ஃபிட்னஸ் டிப்ஸ் கொடுத்து கவர்கிறார் ரகுல்.



## டாப்ஸி

டாப்ஸி பன்னு பின்க் படம் மூலம் மீண்டும் சினிமாவில் ஃபார்முக்கு வந்திருக்கும் டாப்ஸி ஆக்சுவலி ஒரு இஞ்சினியர். தன் தங்கை சகுன் பன்னு, நண்பர் ஃபாரா பர்வேஸ் ஆகியோருடன் இணைந்து "த வெட்டிங் ஃபேக்டரி" என்ற கம்பெனி நட்த்துகிறார். இதன் வேலை திருமணங்களை சீரும் சிறப்புமாக நட்த்தி வைப்பது. பிரம்மாண்டமாகவும், க்ரியேட்டிவ்வாகவும் நமது திருமணங்களை நடத்தி தருவார்கள். சார்ஜ் தான் கொஞ்சம் அதிகமாகும்.



## நிஷா அகர்வால்

நிஷா அகர்வால் நம்ம காஜல் அகர்வாலின் தங்கை. உன்னாலே உன்னாலே படத்தில் தன் குறும்பு நடிப்பால் நம்மை கவர்ந்த நிஷா அகர்வால் தன் அக்கா உதவியோடு ஒரு ஜீவல்லரி தொடங்கியிருக்கிறார். தொடக்க விழாவையே மும்பையில் ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடத்தி அசத்தினார்.



## ஸ்ரேயா சரண்

ஸ்ரேயா சரண் மற்றவர்கள் எல்லாம் லாபத்தை நோக்கமாக கொண்டு பிசினஸில் ஈடுபட்டாலும் இவர் மட்டும் வித்தியாசமாக சேவையை நோக்கமாக கொண்டு ஒரு ஸ்பா ஆரம்பித்திருக்கிறார். ஸ்ரீ என்ற இவரது ஸ்பாவில் தலை, முதுகு, உடல், கால் என அனைத்து உடல் பாகங்களுக்கும் மஸாஜ் செய்கிறார்கள். இதில் என்ன சேவை என்கிறீர்களா? ஸ்ரேயாவின் ஸ்பாவில் வேலை செய்பவர்கள் அனைவருமே மாற்றுத்திறனாளிகளாம். ஸ்ரேயா மேடம் உங்களுக்கு ரொம்ப நல்ல மனசு!

# அக்கராயன் மத்தியில் மீண்டும் அறிஞர் அண்ணா சிலை


தற்சமயம் உள்ள சேதமடைந்த அண்ணா சிலை

(கிளிநொச்சி)

அக்கராயன் மத்தியில் மீண்டும் அறிஞர் அண்ணாவின் சிலையை வைக்கவிடாமல் கரைச்சி பிரதேச சபை தடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அக்கராயன்-ஸ்கந்தபுரம்-அக்கராயன் வீதியில் 1982 ஆம் ஆண்டு முன்னாள் தமிழக முதல்வரும், தி.மு.கவின் ஸ்தாபகருமான அறிஞர் அண்ணாத்துரையின் சிலையை தனியார் காணியொன்றில் நிர்மாணித்து அப்பகுதி மக்கள் திறந்து வைத்தார்கள்.

அதனையடுத்து அந்த பகுதியை அண்ணாசிலைச் சந்தி என்று அழைக்கப்படத் தொடங்கியது. 1983 அம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போது , அந்தச் சிலை கடுமையாக சேதமடைந்தது. ஆனால் இந்தச் சிலை. இன்றும் அதே இடத்தில் இருக்கின்றது. யுத்தம் நிறைவடைந்து அமைதியான சூழல் நிலவுகின்ற நிலையில், அறிஞர் அண்ணாவின் சிலையை அந்தப்பகுதி மக்கள் மீண்டும் புதிதாகச் செய்து நிர்மாணிக்க விரும்புகின்றார்கள். அதன்படி சிலையை அக்கராயன் சந்தியில் உள்ள கோயிலின் அருகாமையில் உள்ள தனியார் காணியில் வைப்பதற்கு, கரைச்சி பிரதேச சபை அனுமதி மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து கரைச்சி பிரதேச சபைக்கு பொறுப்பான அதிகாரிகளிடம் 'தினச்செய்தி' தொடர்பு கொண்டு கேட்ட போது ,

இந்த சிலையை அதே இடத்தில் அமைப்பதற்கு வடமாகாண உள்ளுராட்சி அமைச்சரான முதலமைச்சர் சி.வி விக்கினேஸ்வரன் இன்னும் தங்களுக்கு அனுமதி வழங்கவில்லை என தெரிவித்தனர்.

இது குறித்து ஆராய்ந்தறிந்த 'தினச்செய்தி,' தனியார் காணில் சிலை அமைப்பதற்கு பிரதேச சபையின் அனுமதி பெறத் தேவையில்லை என பொதுமக்களுக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, அறிஞர் அண்ணாவின் சிலையை அக்கராயன் சந்திக்கு அருகிலுள்ள தனி யார் காணியில் அமைப்பதற்கு பிரதேச மக் கள் திட்டமிட்டுள்ளதாக தெரிகின்றது.


புதிதாக நிர்மானிக்க வடிவமைக்கப்படும் அண்ணா சிலை

# துள்ளுகுடியிருப்பு பாடசாலைக்கு விளையாட்டு மைதானம்


(பேசாலை)

மன்னார் பேசாலையை அடுத்துள்ள துள்ளுகுடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்து தருமாறு வடமாகாண ஆளுனர் றெஜினோல்ட் கூரே, விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகராவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

துள்ளுகுடியிருப்பு பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் ஒன்றை பெற்றுத் தருமாறு அந்த ஊரைச் சேர்ந்த மைக்கல் சேவியர் வில்வராஜா தலைமையிலான தூதுக்குழுவினர் அண்மையில் வடமாகாண ஆளுனர் றெஜினோல்ட் கூரேயை அவரது காரியாலயத்தில் சந்தித்து வேண்டுகோள் ஒன்றை விடுத்தனர்.

அவர்களின் வேண்டுகோளையடுத்து துள்ளுகுடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்து தரும்படி வடமகாண ஆளுனர் றெஜினோல்ட் கூரே விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் விளையாட்டு திறன்களை ஊக்குவிக்கும் நோக்கில், விளையாட்டுத்துறை அமைச்சர் தயசிறி ஜெயசேகர மிக விரைவில் இந்தப் பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் ஒன்றை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(02 ஆம் பக்க தொடர்ச்சி)

# பொட்டு அம்மான் எங்கே.

find the body of pottu Amman in the Nandikadal lagoon.

இந்தப் புத்தகத்தில் 53வது படைப்பிரிவிற்கு பொறுப்பாக இருந்த பிரிகேடியர் கமல் குணரட்ண 'நாங்கள் பிரபாகரன் உட்பட புலிகளின் சகல தளபதிகளையும் கொன்று விட்டோம். நாங்கள் இன்னும் கண்டு பிடிக்க வேண்டியது ஒருவர் மட்டும் தான். அவர் தான் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் தளபதி பொட்டு அம்மான். ஆனால் எமக்கு கிடைத்த தகவல்களின் படி, பொட்டு அம்மான் அவரது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள்- அவர்களும் புலிகள் இயக்கத்தில் தான் இருந்தார்கள்.

நாங்கள் யுத்தத்தின் முடிவில் பொட்டு அம்மானின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளின் சடலங்களை கைப்பற்றியிருந்த போதிலும், பொட்டு அம்மானின் சடலத்தை நந்திக் கடல் பகுதியில் கண்டுபிடிக்க முடியவில்லை,' என்று குறிப்பிட்டிருந்தார்.

பிரிகேடியர் கமல் குணரட்ண தனது நூலில் பொட்டு அம்மானின் சடலத்தை தாங்கள் கண்டுபிடிக்கவில்லை என்று தெரிவிக்கும் போது, இதற்கு முன்னர் வெளிவந்த கோத்தபாய ராபக்ஷவின் நூலில், "பொட்டு அம் மான் இறந்துவிட்டார்," என தெளிவாக கூறப்ப ட்டிருக்கின்றது.

அது மாத்திரம் இல்லாமல், 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி யுத்தத்தில் மே மாதம் 2009ல் யுத்தம் நிறைவு பெறும் வரை, இராணுவம் புலிகளின் வானொலி சம்பாஷணைகளை இடைமறித்துக் கேட்ட போது பொட்டு அம்மான் இறந்தது . தெரிய வந்துள்ளதாக இலங்கை இராணுவம் குறிப்பிடுகின்றது.

ஆனால் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கில்


பாதுகாப்பு அரன் நிறைந்த பொட்டம்மானின் வீடு

இருந்து பொட்டம்மானின் பெயரை நீக்குமாறு சொலிசிட்டர் ஜெனரல் கப்புல வைத்தியரட்ண விடுத்த கோரிக்கையை, ஏற்று நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க பொட்டு அம்மானின் இறப்பை உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் சந்தேகப்படவேண்டிய விடயம் ஒன்று உள்ளது.

அதாவது,2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவசரம் அவசரமாக சர்வதேச தேடுதல் சம்பந்தமாக அறிவிப்பை நீக்குமாறு சர்வதேச பொலிஸ் அமைப்பை (இன்ரப்போலை) ஏன் கேட்டுக் கொண்டார்கள் என்பதற்கு பதில் காணமுடியவில்லை. இலங்கை அரசு அவரை பயங்கரவாதியென சர்வதேச பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, அவரை பயங்கரவாதியென சர்வதேசப் பொலிஸாரும் அறிவித்தார்கள். ஆனால் திடீரென பொட்டம்மான் இறந்து விட்டார். அவரை பயங்கரவாத பட்டியலில் இருந்து நீக்குங்கள் என கேட்ட விடயம் மட்டும் மனதில் நெருடலாகவே இருக்கின்றது.

அதற்கு காரணம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் 18 ஆம் திகதிகளில், இராணுவத்திடம் சரணடையச் சென்ற சிலர், மக்களோடு மக்களாக பொட்டம்மான் ஜீன்ஸ், சேட் அணிந்திருந்தவாறும் அதற்கு மேல் மஞ்சள் நிற சாரம் கட்டியவாறு சென்றதாக மக்களில் பலர் நேரடியாக கண்டதாக கூறுகின்றனர்.

அதனைவிட, 2009 ஆம் ஆண்டு மே மாதம் 9 ம் திகதி யுத்தம் நிறைவடைந்த அதே வருடம், மே மாதம் 24 ம் திகதி பின்னர் மீண்டும் மல்லாவியில் புலிகளின் ஒரு குழு இராணுவத்தை தாக்கியது என்றும் இது ஒரு Staged fight என்றும் கூறப்பட்டது. இந்த தாக்குதலையடுத்து பொட்டம்மான் மாங்குளத்திற்கு தப்பிச் சென்று, அங்கிருந்து மாங்குளம் ஊடாக கொழும்பிற்கு சென்று, பின்னர் வெளிநாடு ஒன்றிற்கு தப்பிச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

இதற்கு இராணுவத்தின் ஒரு பிரிவும், அப்போதைய பாதுகாப்பு அமைச்சும் உதவியளித்ததாகவும் கூறப்படுகின்றது. எவ்வாறிருந்த போதிலும் பொட்டம்மானின் தற்போதைய நிலை பற்றி முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஒருவராலேயே பதில் கூற முடியும். அவர் இந்த விடயத்தில் பதில் கூறாது மழுப்புவாராக இருந்தால், இந்த விடயத்தில் யாராலும் உண்மையை கண்டுபிடிக்க முடியாமற் போகும்.

புலிகளின் எல்லாத் தலைவர்களிலும் பொட்ட[illegible]ன் (மிகவும் திடகாத்திரமானவ[illegible]me person) என அறியப்ப



'குருத்து 'என்னும் பெயரில் இந்தியாவில்




டுகின்றது. இவரை யாரும் அடையாளம் காண்பது மிகவும் கடினமானதென்றும் கூறப்படுகின்றது. இவரின் சகோதரர் ஒருவர் குடும்பத்துடன் லண்டனில் வாழ்ந்து வருவதாகவும், ஒரு வேளை அவரை அணுகினால் பொட்டம்மான் குறித்த உண்மை நிலை வெளிவரலாம் எனவும் நம்பப்படுகின்றது.

இதே வேளை சென்ற மார்ச் மாதம் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பொட்டு அம்மான் இறந்து விட்டார் என்பது இதுவரை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை என தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த விடயங்கள்ள எல்லாம் ஆராயும் பொது பொட்டு அம்மான் இறந்து விட்டாரா? இல்லையா என்ற மர்மம் நீடித்துக் கொண்டே செல்கின்றது.


பொட்டம்மான் குடும்பத்துடன்

# விடுதலைப் புலிகளின் கை ஓங்குகின்றது

## பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும்

அரசகேசரி

1987 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி பிரபாகரன் தமிழீழப் பிரகடனம் செய்வதற்குப் பதிலாக தமிழீழத்தில் உள்ள எல்லா மோட்டார் வாகனங்களும் லைசன்ஸ் வழங்கும் திட்டத்தை அறிவித்தார். இதன் மூலம் யாழ் மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்திருந்ததையடுத்து அம்மாவட்டத்தில் போக்குவரத்தை சீர்படுத்துவதற்காகவே அந்தத் திட்டத்தை பிரபாகரன் அறிவித்தார்.

இந்த அறிவித்தலையடுத்து புலிகளிடம் பயிற்சி பெற்ற காவலர்கள் போக்குவரத்தை சீர் செய்வதற்கு நியமிக்கப்பட்டார்கள். இவ்வாறு போக்குவரத்து சீரடைந்ததை அடுத்து வடக்கு, கிழக்கின் சிவில் நிர்வாகத்தை புலிகள் கையில் எடுத்துக் கொண்டார்கள்.



இதனையடுத்து ஜனவரி 02 ஆம் திகதி அரசாங்கம் பொருளாதாரத் தடையை வடபகுதிக்கு விதித்தது. வாகனங்களுக்கு தேவையான எரிபொருட்களையும் உணவுப் பொருட்களும் வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது. இதனால் மேலும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இலங்கை இராணுவத்தினர் தாக்குதல்களை தீவிரப்படுத்தினார்கள்.

அங்கே கொலைகளும் கொள்ளைகளும் அதிகரித்து வருவதாக கருதிய இந்திய அரசாங்கம், அதன் மத்தியஸ்த முயற்சிகளை கைவிடுவதாக அறிவித்தது.

மேலும் இராணுவத்தினர் தங்கியிருந்த யாழ் நகரின் மத்தியில் இருந்த 4 மாடிக் கட்டிடமான வீரசிங்கம் மண்டபத்தையும் அதன் அருகில் இருந்த தபால் நிலையத்தையும் விடுதலைப்புலிகள் ஜனவரி 20 ஆம் திகதி எரித்து நாசப்படுத்தினார்கள்.

அதனையடுத்து இலங்கையின் மன்னார் மாவட்டத்தில் அடம்பன் வைத்தியசாலை மீது இலங்கை விமானப்படையினர் குண்டுமாரி பொழிந்தார்கள். இவ்வாறு குண்டுகள் வீழ்ந்து வெடித்ததில் 50ற்கும் மேற்பட்ட நோயளிகளும் பொதுமக்களும் இறந்தார்கள்.

அதே நேரம், இராணுவத்தினர் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை வடக்கில் தீவிரப் படுத்தினார்கள். இதனால் வான் தாக்குதல்களின் உதவியுடன் ஆனையிறவு , வவுனியா போன்ற பகுதிகளை படையினர் கைப்பற்றினார்கள்.

மேலும் ஜனவரி 28 ஆம் திகதி மட்டக்களப்பில் விசேட அதிரடிப்படையினர் மீது புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை நடத்தினார்கள் இந்தத் தாக்குதல்களில் 12 விசேட அதிரடிப்படையினர் இறந்தார்கள்.

இதனையடுத்து, மட்டக்களப்பிற்கு அருகிலுள்ள நகருக்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் அங்கிருந்த 83 பொதுமக்களை கைது செய்து பிடித்துச் சென்றனர். இதில் 22 பேர் அருகிலுள்ள இறாழ் பண்ணை ஒன்றில் வேலை செய்தவர்கள். அவர்கள் அனைவரையும் கைவிடப்பட்ட தேவாலயம் ஒன்றிற்குள் அழைத்துச் சென்ற அவர்கள், அனைவரையும் சுட்டுக் கொன்றார்கள்.



அதனையடுத்து 1987 மார்ச் 09 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற மனிதவுரிமைகள் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட இந்திய அரசின் பிரதிநிதியான தமிழக அமைச்சர் பண்டிருட்டி இராமச்சந்திரன், இலங்கை அரசாங்கத்தின் மனிதவுரிமை மீறல், மற்றும் பயங்கரவாதச் செயற்பாடுகள் ஆகியன குறித்து கண்டனம் தெரிவித்தார்.

மேலும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சித்திரவதை, பயங்கரவாதம் ஆகியவற்றிற்கு பொறுப்பான அதிகாரிகள் இலங்கை அரசின் பயங்கரவாத செயற்பாடுகளை கண்டித்து தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

மேலும், மார்ச் 13 ஆம் திகதி இந்திய அரசின் விசேட தூதுவராக தினேஷ் சிங் கொழும்பிற்குச் சென்று ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவுடன் அந்தரங்கப் பேச்சுக்களில் ஈடுபட்டார். மேலும் சென்ற டிசெம்பர் மாதம் இலங்கை அரசு ஒப்புக் கொண்டபடி, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு நிர்வாக அதிகாரங்களை வழங்கும் திட்டம் பற்றி பேசியதாக தெரிகின்றது.

அதே நேரத்தில் 200ற்கும் மேற்பட்ட புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்த தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தை தாக்கினார்கள். அந்த தாக்குதலில் 5 இராணுவ வீரர்களும் மூன்று பொலிஸ் காரர்களும் புலிகளினால் உயிருடன் சிறைப்பிடிக்கப்பட்டார்கள். இந்த தாக்குதல்கள் 5 மணி நேரம் வரை நீடித்தது. இதில் 5 இராணுவத்தினரும் 6 புலிகளும் இறந்தார்கள்.

இந்த வெற்றிகரமான தாக்குதல்களை அடுத்து புலிகளின் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியாக இருந்த கிட்டு தனது வாகனத்தில் யாழ் 2ஆம் குறுக்குத் தெருவில் சென்றபோது கிட்டுவின் வாகனம் மீது கைக்குண்டு வீச்சும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இந்த தாக்குதலில் கிட்டுவின் மெய்ப்பாதுகாவலர்கள் இருவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளானார். இந்த தாக்குதலை அடுத்து கிட்டுவின் கால் ஒன்று பாதிக்கப்பட்டு அந்தக் காலை சத்திரசிகிச்சை செய்து அகற்ற வேண்டி ஏற்பட்டது. இதனையடுத்து கிட்டுவின் இராணுவ வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

புலிகளின் பலத்திற்கு எம்.ஜி.ஆரிடம் பிரபாரகரனுடன் கொண்ட நெருக்கமுமே காரணியாக அமைந்தது. இந்திய மத்திய அரசு புலிகளுக்கான உதவிகளை நிறுத்திய போதும் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் புலிகளுக்கு தாராளமாக தொடர்ந்தும் உதவி செய்து வந்தார்.

அது மாத்திரமல்லாமல், தமிழகத்தில் இருக்கும் புலிகளுக்கு எந்தவிதமான தொல்லைகளையும் கொடுக்க வேண்டாமெனவும் தமிழ்நாட்டுப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். அந்த நேரத்தில் இலங்கை-இந்திய உறவு மிகவும் பாதிக்கப்பட்டு இருந்த நிலையில், தமிழக முதலமைச்சர் எம்.ஜி ஆர் புலிகளுக்கு வழங்கிய 2.5 மில்லியன் டொலர் நன்கொடை உதவியை இந்திய மத்திய அரசு கண்டும் காணாமலும் விட்டது.

அந்த சந்தர்ப்பத்தில் தான் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரை, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவசரமாக அழைத்து இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆராய முன்வந்தார்.

முதல்வர் எம்.ஜி ஆருடன் அவரது நம்பிக்கைக்கு பாத்திரமானவரும் உணவு மற்றும் பொது விநியோகத்திற்கு பொறுப்பான அமைச்சர் பண்டிருட்டி ராமச்சந்திரனும் உடன் சென்றிருந்தார்.

இது தொடர்பான நிலைமைகள் ஆராயப்பட்டுக் கொண்டிருந்த போது, ஏப்பிரல் 6 ஆம் திகதி தமிழ் சிங்கள புது வருடப்பிறப்பை முன்னிட்டு பத்து நாள் யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிட்டது இலங்கை அரசு. அதே நேரத்தில் ஏப்பிரல் 17 ஆம் திகதி கொழும்பிலிருந்து திருமலைக்கு வந்த பஸ் வண்டியை நிறுத்திய புலிகள் அதில் பயணித்த 127 சிங்களவர்களை சுட்டுக் கொன்றார்கள். அத்துடன், கொழும்பு புறக்கோட்டை பேரூந்து நிலையத்தில் ஈரோஸ் அமைப்பு குண்டுவீச்சு ஒன்றை நிகழ்த்தியது. அந்தக் குண்டு வீச்சு தாக்குதலில் 113 பேர் மரணமானார்கள். 215 பேர் வரை காயமடைந்தார்கள்.

அப்போது வெலிக்கடை உள்ள பாதுகாப்புச் சிறைச்சாலைகளில் சிங்களக் கைதிகள் தாக்கியதில் 5 தமிழ்க் கைதிகள் வெட்டிக் கொல்லப்பட்டனர். 6 பேர் படுகாயம் அடைந்தார்கள். வெலிக்கடையில் மாத்திரம் அல்லாமல் மேலும் 3 சிறைச்சாலைகளில் தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்டார்கள்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருந்த போது இலங்கை இராணுவத்தினர் மே 26 ஆம் திகதி முதல் யூன் 2 ஆம் திகதி வரை வடமராட்சியில் 'ஒப்பிரேஷன் லிபரேஷன்' என்ற இராணுவ நடவடிக்கையை நடத்தினார்கள். இந்த தாக்குதல்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு மேலும் ஆயிரத்திற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டார்கள்.

இவ்வாறு வடக்கில் இராணுவ தாக்குதல்கள் நடைபெறும் போது, விடுதலைப் புலிகள் கிழக்கில் உள்ள அம்பாறை மாவட்டத்தில் யூன் மாதம் முதலாம் திகதி தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள். அந்த தாக்குதலில் 30 பௌத்த துறவிகள் கொல்லப்பட்டனர்.

வடபகுதியில் யுத்தம் தீவிரமடைந்தது. வடபகுதியில் இருந்து புலிகளை வெளியேற்றும் நடவடிக்கையில் வடமராட்சி பகுதியில் இருந்து இராணுவம் யாழ் நோக்கி முன்னேறியது. அந்தக் காலத்தில் பீப்பாக் குண்டுகளை விமானத்தில் இருந்து பொதுமக்கள் மீது குண்டுகளைப் போட்டார்கள். பீப்பாய் குண்டுகளில் ஆணிகள், மனித எச்சங்கள் எல்லாவற்றையும் சேர்த்து விமானங்களில் இருந்து குண்டுகளாக வீசினார்கள் .

இவ்வாறு விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது, இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கோய்த் நாத் டிக்ஸித் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ் ஹமீத் அவர்களை கொழும்பில் சந்தித்து வடக்கில் பசியாலும், பட்டினியாலும் இலங்கைத் தமிழர்கள் வாடுவது குறித்த இந்தியாவின் கவலைகள் அடங்கிய கடிதம் ஒன்றையும் வழங்கினார்.

இதனையடுத்து பட்டினியாலும், பசியாலும் வாடும் இலங்கைத் தமிழர்களுக்கு வள்ளங்கள் மூலமாக உணவுப் பொருட்களை அனுப்பி வைக்க இந்தியா திட்டமிட்டிருப்பதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் அவர் தெரிவித்தார்.

ஆனால் தங்களுடைய மக்களுக்கு தேவையான உணவு வகைகளை தங்களினால் வழங்க முடியும் என்று கூறி இந்தியா வழங்க முன்வந்த உதவியை இலங்கை அரசு நிராகரித்தது. ஆனால் 1987 ஆம் ஆண்டு ஜன் மாதம் 3 ஆம் திகதி இந்தியா 19 மீன்பிடித் தோணிகளில் 38 தொன் சின் செய் உணவுப் பொருட்களை ராமேஸ்வரத்தில் இருந்து செஞ்சிலுவைச் சங்க கொடிகளுடன் அனுப்பி வைத்தது. இதற்கு இந்திய கரையோர காவற்படையின் வள்ளங்கள் பாதுகாப்பு அளித்தன. பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்களும் அந்த வள்ளங்களில் வந்தார்கள்.


இந்த வள்ளங்களின் பின்னணியில் இந்திய கடற்படை வந்து கொண்டிருந்தது. ஒப்பிரேஷன் “பூமாலை” என இந்த நடவடிக்கைக்கு பெயர் சூட்டப்பட்டது. ஆனால், உணவு கொண்டுவந்த தோணிகளை இலங்கை எல்லைக்குள் வரவிடாமல் இலங்கை கடற்படை தடுத்து நிறுத்தியது. 6 மணித்தியாலங்களாக உணவு கொண்டு வந்த தோணிகளும் கப்பல்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அதனையடுத்து இந்தியாவின் தோணிகள் எல்லாம் ராமேஸ்வரம் திரும்பின. இவ்வாறு பிரபல்யப்படுத்தப்பட்ட இந்தியாவின் முயற்சி படுதோல்வியில் முடிந்தது. இந்த முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து அது இந்தியாவை பாதிக்கும் விடயமாக மாறியது. அதனால் நேரடியாக தாங்கள் தாக்குதல்களில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது என இலங்கைக்கு இந்தியா தகவல் அனுப்பியது.

அதனையடுத்து ஜன் மாதம் 04 ம் திகதி டெல்லியில் இருக்கும் இலங்கை உயர்ஸ்தானிகர் பேர்னாட் திலகரட்ணவை இந்திய வெளிவிவகார ராஜாங்க அமைச்சிற்கு அழைத்து , இந்திய வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் எழுத்து பூர்வமான செய்தியைக் கையளித்தார்.

அந்தச் செய்தியில் “மனிதாபிமான அடிப்படையில் எந்தவித பாதுகாப்பும் இன்றி நாங்கள் அனுப்பி வைத்த உணவுப் பொருட்களை இலங்கை திருப்பி அனுப்பியதை அடு

(தொடர்ச்சி... 17 இல்)

# கடந்த அட்சியில் எமக்கு சுதந்திரம் இருந்திருக்கவில்லை



## அமைச்சர் இராதாகிருஷ்ணன்

(க.கிஷாந்தன்)

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அறநெறியை பின்பற்ற வேண்டும். எவர் எந்த சமயத்தையும் சார்ந்தவராக இருந்தாலும் அவர் அவர்கள் மதத்தில் கூறப்பட்டவாறு சமய நல்லொழுக்கங்களை கடைபிடிக்க வேண்டும் என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட திருவள்ளுவர் சிலைகளில் முதல் சிலையை அட்டன் ஹைலண்ஸ் கல்லூரியில் பிரதிஷ்டை செய்ததன் பின் அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தனது உரையில் தெரிவித்தாவது.

கடந்த அரசாங்கத்தில் இவ்வாறான சிலை ஒன்றினை வைப்பதற்காக முற்பட்டிருந்தால் இனங்களுக்கிடையில் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கும். அதேவேளை இன்று நல்லாட்சி அரசாங்கத்தில் ஒற்றுமையை வழியுறுத்துவதனால் இன்றைய நாள் பொன்னான நாளாக இனங்களுக்கிடையில் மாறியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

பாடசாலை மாணவர்களுக்கிடையில் கல்வி முன்னேற்றத்தில் பல்வேறு மாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் துரித கல்வி அடிப்படையில் முன்னெடுக்கப்படும் பாடநெறிகளில் மாணவர்கள் அதிக அக்கறைகள் கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் கல்வி நடவடிக்கைகள் மந்தகதியில் முன்னெடுக்கப்பட்டாலும் பாட மனனாங்கள் மற்றும் செயற்பாடுகள் தாமதமா கவே செய்வதற்கு மாணவர்கள் மத்தியில் வளர்ச்சியின்மை காணப்பட்டது. ஆனால் தற்பொழுது மாணவர்கள் முயற்சியுடையவர்களாக மாற்றம் பெற்றுள்ளனர்.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் குறட்பாக்கள் ஒவ்வொன்றும் புனிதமானது. இவைகளை மனனம் செய்யும் பொழுது எழிதில் சுருக்கமாக விடைகளை அறிந்து கொள்ளும் மனபாங்கு வந்துவிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

இங்கு மதங்களுக்கிடையிலும் இனங்களுக்கிடையிலும் பாரிய ஒற்றுமை நிலவுகின்றது. இந்த வகையில் இந்த ஒற்றுமையை முன்னெடுத்து செல்ல அனைத்து இனங்களும் ஒன்றுபட வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் அதன் வேலைத் திட்டங்களில் ஒற்றுமையை கடைப்பிடிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அந்த வகையில் நாட்டில் அனைத்து பிரதேசங்களிலும் வாழ்கின்ற மக்களுக்கிடையில் ஒற்றுமையை வலுப்படுத்தினால் நாட்டின் எதிர்காலம் சுபிட்சம் அடையும் என இதன் போது அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நுவரெலியாவில் தெய்வீகக் கிராம நிகழ்வு



(க.கிஷாந்தன்)


ஹாவெலிய ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் தெய்வீகக் கிராம நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் நுவரெலியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2015ம் ஆண்டு அறநெறி பாடத்தை கல்வி கற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அத்தோடு மேற்படி தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களின் புனரமைப்புக்காக ஆலயம் ஒன்றுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் 25 ஆலயங்களுக்கும் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் இந்து சமயகலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. உமா மகேஷ்வரன் உதவி பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் மத்திய மாகாணசபை உறுப்பினர் இராஜாராம் மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தந்த பிரமுகர்கள் ஆலய குருக்கள்மார்கள் அறநெறி மாணவர்கள் ஆசிரியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை இங்கு குறிப்பிடதக்கது.

# இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்



(க.கிஷாந்தன்)

மலையக தமிழ் இளைஞர்களுக்கு எதிராக பொலிஸார்களால் அரங்கேற்றப்படும் அடிதடி அராஜகத்தை கண்டித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் இளைஞர்கள் வீதிக்கு வருவதற்கு அஞ்சப்படும் சூழ்நிலையை மீண்டும் இந்நாட்டில் அரங்கேற்ற இடம் கொடுக்க வேண்டாமென மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கணகராஜ் தெரிவித்துள்ளார்.

அட்டன் நகரில் 23ம் திகதி மாலை சிகையலங்கார நிலைய ஊழியர் ஒருவர் பொலிஸ் அதிகாரி ஒருவரால் தாக்கப்பட்டதை கண்டித்து அட்டன் நகரில் 24ஆம் திகதி பகல் 1.30 மணியளவில் இடம் பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடும் போது அன்று புஸ்ஸலாவ பொலிஸ் நிலையத்தில் தோட்டப்பகுதி தமிழ் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டு தூக்கிட்டு உயிரிழந்ந சம்பவம் மனதில் இருந்து அகன்று செல்வதற்க்கு முன் அட்டனில் இளைஞன் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த வேளையில் இவ் இரு சம்பவங்களையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வன்மையாக கண்டிப்பதோடு நடந்தேறிய தாக்குதல் சம்பவத்துக்கு உரித்தான அதிகாரிக்கெதிராக நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இதன் போது அவர் மேலும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

# ஹில் ஓய கிராம மக்கள் ஆர்ப்பாட்டம்



(க.கிஷாந்தன்)

உமா ஓய திட்டத்தினால் பாதிக்கப்பட்ட ஹில் ஓய கிராம மக்கள் எல்லை பிரதேச செயலக காரியாலயத்தினுள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த ஆர்ப் பாட்டம் 21 ஆம் திகதி காலை 10 மணியளவில் எல்லை பிரதேச செயலக காரியாலயத்தை முற்றுகையிட்டு முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்கப்படும் தண்ணீர் தாங்கி நீரானது 10 நாட்களு க்கு ஒரு முறை வழங்கப்படுவதாகவும் இதனால் தங்களின் அன்றாட செயற்பாடுகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியாமல் உள்ள தாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். குறித்த ஆர்ப்பாட்டம் காரண மாக எல்ல பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் சில மணி நேரங்கள் ஸ்தம்பிதம் அடைந் திருந்தமையும் குறிப்பிடதக்கது.

பின்னர் மக்களுக்கு 3 நாட்களுக்கு ஒரு முறை 1000 லிற்றர் நீரைப் பெற்றுத் தருவ தாக எல்ல பிரதேச செயலாளர் தெரிவித்ததை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றுள்ளனர்.

# முதல்வர் ஜெயலலிதா வீடு திரும்புவது எப்போது?



(தமிழகம்)

திடீர் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா சென்னை அப்பல்லோ, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். தீவிர சிகிச்சைக்கு பின் அவர் உடல்நலம் தேறியுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது.

"பூரண நலம் பெற்றுள்ள முதல்வர், தற்போது ஓய்வில் இருக்கிறார்.விரைவில் வீடு திரும்பு வார் என ஆளுங்கட்சி நிர்வாகிகள் பண்ருட்டிராமச்சந்திரன், பொன்னையன் ஆகியோர் தெரிவித்தனர். அதே நேரத்தில் முதல்வர் பூரண குணமடைய வேண்டி அ.தி.மு.க. வினர் சிறப்பு வழிபாடுகள் நடத்தி வருகின்றனர்.

**திடீர் உடல்நலக் குறைவு**

சென்னை போயஸ் கார்டன் வீட்டில் இருந்த ஜெயலலிதாவுக்கு இரவு 10:15 மணிக்கு திடீர் உடல்நலக் குறைவுஏற்பட்டது. உடனடியாக அப்பல்லோ மருத்துவர்கள், போயஸ் கார்டன் சென்றனர். முதல்வரின் உடல்நிலையை பரிசோதித்தனர். பின் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அவரை சேர்த்தனர்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். மருத்துவமனை சார்பில் அதிகாலை மருத்துவ அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் "காய்ச்சல் மற்றும் நீர்ச்சத்து குறைவு காரணமாக, முதல்வர் பாதிக்கப்பட்டார். தற்போது, நலமாக உள்ளார். எனினும், தொடர் மருத்துவ கண்காணிப்பில் உள்ளார்" என குறிப்பிடப்பட்டிருந்தது.

தகவல் அறிந்த, முதல்வர் அலுவலக அதிகாரிகள், தலைமைச் செயலர்,அரசு ஆலோசகர், போலீஸ் அதிகாரிகள், மற்றும் அரசு செயலர்கள்.மருத்துவமனைக்கு வந்தனர். போலீசார் குவிக்கப்பட்டு மருத்துவமனைசாலையில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்து மூன்றாவது தளத்தில் உள்ள அறைக்கு ஜெயலலிதா மாற்றப்பட்டார். அதன்பின், உயர் அதிகாரிகள் புறப்பட்டு சென்றனர். மருத்துவர்கள், இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை ஜெயலலிதா உடல்நிலையை பரிசோதித்தனர். முதல்வருக்கு உதவியாக, அவரதுதோழி சசிகலா உடனிருந்தனர்.

**மருத்துவ அறிக்கை :**

வெளியூர்களில் இருந்த அமைச்சர்கள், நேற்று அவசரமாகபுறப்பட்டு சென்னை வந்தனர். எம்.பி, எம்.எல்.ஏ.க்கள், மாவட்ட செயலர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளும், மருத்துவமனைக்கு திரண்டுவந்தனர்.

ஆனால், முதல்வரை பார்க்க, லோக்சபா துணை சபாநாயகர் தம்பிதுரை, அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், விஜயபாஸ்கர், சுகாதாரத் துறை செயலர் ராதாகிருஷ்ணன் மட்டுமே அனுமதிக்கப்பட்டதாக தகவல்வெளியானது. அதனையடுத்து மறுநாள் காலை அமைச்சர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களை,அவரவர் ஊருக்கு சென்று, உள்ளாட்சி தேர்தலை கவனிக்கும்படி, முதல்வர் உத்தர விட்டதாக தகவல் வெளியானது.

அதைத் தொடர்ந்து, 11:45 மணிக்கு, அமைச்சர்கள், மருத்துவமனையில் இருந்து புறப்பட்டுசென்றனர். மேலும் மதியம் 12:20 மணிக்கு, அப்பல்லோ மருத்துவமனைசார்பில், மருத்துவ அறிக்கை வெளியிடப்பட்டது.

அதில் "முதல்வருக்கு, தற்போது காய்ச்சல் இல்லை. வழக்கமான உணவுகளை சாப்பிட்டார். தொடர்ந்து கண்காணிப்பில் உள்ளார்" என தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும், எப்போது வீடு திரும்புவார் என்று தெரிவிக்கப்படவில்லை.

முதல்வருக்கு, 12 விதமான மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அவற்றின் முடிவுகள் வந்த பிறகே, அவர் வீடு திரும்புவது குறித்து, அறிவிப்பு வெளியிடப்படும் என, அதிகாரப்பூர்வமற்ற தகவல்கள் தெரிவித்தன.

மேலும், தமிழகம் முழுவதும், முதல்வர் நலம் பெறவேண்டி, கட்சியினர் சார்பில், அனைத்து வழிபாட்டு தலங்களிலும், சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## பஞ்சாப் பல்கலையில் பேராசிரியராகும் மன்மோகன்சிங்


(சண்டிகர்)

முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் தாம் படித்த பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியராக பணியாற்ற மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கின்றது.

கடந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது பத்துஆண்டுகளாக பிரதமராக இருந்தவர் மன்மோகன் சிங். 2014 ஆம் ஆண்டு லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் தோல்வியைத் தழுவியது. அதன்பின்னர் அஸ்ஸாம் மாநிலத்தில் இருந்து ராஜ்ய சபா எம்.பியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதே நேரத்தில் தனது ஆரம்ப காலத்தில் பேராசிரியராக பணியாற்றிய மன்மோகன் சிங். தற்போதுபஞ்சாபில் தான் படித்த பல்கலை கழகத்திலேயே பேராசிரியராக பணியாற்ற முடிவு செய்துள்ளார்.

பஞ்சாப் பல்கலைக்கழகத்தின் அழைப்பை மன்மோகன்சிங் ஏற்றுக் கொண்டுள்ளார். எம்.பிக்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் ஆதாயம் பெறும் பதவிகள் வகிக்க கூடாது என அரசியல்சாசனத்தில் கூறப்பட்டுள்ளதால், பஞ்சாப் பல்கலை கழகத்தில் கௌரவ பேராசிரியராக பணியாற்றுவது ஆதாயம் தரும் பணியா என மத்திய அமைச்சரவையிடம் அவர் கருத்து கேட்டிருந்தார்.



இது தொடர்பாக நாடாளுமன்ற நிலைக் குழு கூடி விவாதித்தது. அதில் முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் கௌரவ பேராசிரியர் பணியை ஏற்கலாம். அது ஆதாயம் தரும் பணிகளுக்குள் உள்ளடங்காதென நாடாளுமன்ற நிலைக்குழு தீர்மானித்தது.


மேலும் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் பேராசிரியராக பணியாற்ற தடையில்லை என மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன் பிரகாரம் பஞ்சாப் பல்கலையில் கௌரவ பேராசிரியராக மன்மோகன் சிங் தமது பணிகளை விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறார்.

## குடியரசுத் துணைத் தலைவர் ஆப்பிரிக்க நாடுகளில் சுற்றுப் பயணம்

(டெல்லி)

குடியரசு துணைத்தலைவர் ஹமீது அன்சாரி, ஐந்து நாள் அரசு முறை பயணமாக எதிர்வரும் திங்கள் கிழமை ஆப்பிரிக்காவின் நைஜீரியா, மாலி ஆகிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற் கொள்ளவுள்ளார். இது குறித்து வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப், வியாழக்கிழமை டெல்லியில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போது, டெல்லியிலிருந்து நைஜீரியாவுக்கு ஹமீது அன்சாரி எதிர்வரும் திங்கட்கிழமை புறப்பட்டுச் செல்கிறார். அங்கு தலைநகர் அபு ஜாவில் நைஜீரிய ஜனாதிபதி முஹமது புஹாரி, துணை அதிபர் யேமி ஒசின்பாஜோ உள்ளிட்டோரை அவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.



இதனையடுத்து, லாகோஸ் பல்கலைக்கழகத்திலும் அவர் உரையாற்ற உள்ள அவர், அபுஜாவில் உள்ள இந்தியத் தூதரக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தையும். அவர் திறந்து வைக்கவுள்ளார்.

மேலும் அங்கிருந்து மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மாலிக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி அன்சாரி செல்லவுள்ளார். இந்தியாவுடன் இந்த இரு நாடுகள் கொண்டிருக்கும் நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் குடியரசு துணைத்தலைவர் ஹமீது அன்சாரியின் பயணம் அமையும்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

(04 ஆம் பக்க தொடர்ச்சி)

## தேசிய அரசின் எதிர்காலம் ஊஞ்சலாடுகின்றது

உங்களுடையதும் திரு.மாவை சேனாதிராஜாவுடையதுமான தந்திரத்தால் என்னை தலைவர் பதவியிலிருந்து நீக்க முடியவில்லை. ஆனால் ஒரு ஜனநாயக கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணியை சிதைப்பதோடு என்னையும் எனது அணியினரையும் தேர்தலில் முற்று முழுதாக தோற்கடித்தீர்கள்.

உங்கள் இருவரினதும் மிகப்பெரும் சாதனையாதெனில் முற்று முழுதாக அஹிம்சையை கொள்கையாக கொண்டு இயங்கிய தமிழரசு கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகிய இரண்டினையும் பயங்கரவாத இயக்கங்களுடைய பட்டியலில் சேர்த்து வைத்தமையே.

இறுதியாக, நானொரு தீர்க்கதரிசி அல்ல. எனது கடைசி கடிதத்தில் தீர்க்க தரிசனமாக கூறப்பட்ட வார்த்தைகளை இங்கு தருகின்றேன். "நான் உங்களை விழிப்படைய செய்வது யாதெனில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வரலாறும் அது சம்பந்தமாக தற்போது ஏற்பட்டுள்ள சில முன்னேற்றங்கள் நீங்கள் கூறுகின்ற நல்லாட்சிக்கு பெரும் பங்கம் ஏற்படும் என்பதே"

சில விடயங்களை ஊகித்து அறிவதில் நான் சரியாக செயற்படுகின்றேன் என்பதனை அறிந்து கொள்ளுங்கள்.

வீ.ஆனந்தசங்கரி
செயலாளர் நாயகம்
தமிழர் விடுதலைக் கூட்டணி

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி : எழுக தமிழ் பேரணி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு ஏதேனும் அழுத்தங்களைக் கொடுக்குமா?**

சி.இருந்தன்,பம்பலப்பிட்டி.

பதில்: அதிகாரத்தில் விக்கினேஸ்வரன் தான் இன்று இருக்கிறார். அவரது தப்பான அரசியல் போக்கினால் தமிழ்மக்கள் தான் பாதிக்கப்படுவார்கள்.

**கேள்வி : தற்போது யாழில் பெண்கள் அணியும் நாகரீக உடைகளினால் அதிகம் பாதிக்கப்படுவது யார்?**

எம்.கேசவன்,யாழ்ப்பாணம்.

பதில் : அதே பெண்கள் தான்.

**கேள்வி : நம் நாட்டு அரசியலுக்கு கூட்டுக் குடித்தனமா அல்லது தனிக் குடித்தனமா சிறந்தது ?**

ஆர்.விஷ்ணுப்பிரியா,கூமாங்குளம்.

பதில் : அரசியலுக்கு எது சிறந்து என்று தெரியாது. ஆனால் வாழ்க்கைக்கு கூட்டுக் குடித்தனம் சிறந்தது.

**கேள்வி : ஒரு வேளை பிரபாகரன் மீண்டும் உயிரோடு வந்தால் ?**

ரி. ஜெனெற்,மன்னார்.

பதில் : உங்கள் கனவில் வந்தாராயின் வணக்கம் சொல்லி வரவேற்கவும்.

**கேள்வி : யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களில் ஒலிபெருக்கி கலாச்சாரத்தை ஒழிப்பதற்கு வழி கிடையாதா?**

வீ.சுப்பிரமணியம்,கோப்பாய்.

பதில் : நவீன தொழில்நுட்பத்தில் கோயில் அர்ச்சகரின் மந்திர உச்சாடனங்கள் ஒலிபெருக்கி மூலம் தெளிவாகக கேட்க முடிகின்றது. இந்த ஒலிபெருக்கிகளில் சினிமா பாடல்களை போடாமல் வழிபாடு சம்பந்தப்பட்ட விடயங்களை ஒலிபெருக்கினால் நல்லது.

**கேள்வி : இனி இந்தக் குயில் பாடாது என இசைக்குயில் எஸ்.ஜனாகி அம்மா அறிவித்திருக்கிறாரே?**

எல்.மலர்விழி,கேகாலை.

பதில் : இனிமையான பாடல்கள் வருங்காலத்தில் அருகிவிடும் என்பது இந்த அறிவிப்பால் தெரியவருகின்றது.

**கேள்வி : அண்மையில் மீளவும் நிறுவப்பட்ட தேசிய ஊடக மத்திய நிலையத்தினால் நாட்டின் ஊடகத்துறை முன்னேற்றகரமானதாக மாற்றமடையுமா?**

கி.வானதி,பருத்தித்துறை.

பதில் : அது இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு தான் வெளிச்சம்.

**கேள்வி : இந்திய கிரிக்கெட் அணியை வழி நடத்த விராட்ஹோலி தான் சரியான தலைவர் என முன்னாள் கப்டன் கபில்தேவ் கூறியிருக்கிறார். இந்தக் கூற்றுடன் நீங்கள் உடன் படுகிறீர்களா?**

ஆ.யோகேஸ்வரன்,திருகோணமலை.

பதில்: விராட் ஹோலிக்கு இன்னும் பக்குவம் வரவேண்டும்.

**கேள்வி : தமிழக முதல்வர் ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதும் தமிழக ஜனங்கள் துடியாய் துடிக்கிறார்களே?**

உ.மகேஸ்வரன்,கொடிகாமம்.

பதில் : அவரிடம் வாக்களிப்பதற்கு வேண்டித் தின்றவர்கள் துடிக்கத் தானே செய்வார்கள்.

**கேள்வி : இசைமேதை எஸ்.பி பாலசுப்பிரமணியம் இலங்கைக்கு வந்து பல இசை நிகழ்வுகளை நடத்தப் போவதாக செய்திகள் வந்தன. இப்போது அது பற்றிய தகவல்களைக் காணோம். என்ன நடந்தது?**

த.ராஇலன்,ஓமந்தை.


பதில் : இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு படுத்தியவர்களை கேட்கவேண்டிய கேள்வி இது. தவறான ஆளிடம் நீங்கள் கேள்வி கேட்கின்றீர்கள்.

**அரசியல், சினிமா, விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*

## உலகின் மிகப் பெரிய வானொலி தொலைநோக்கி



(சீனா)

சீனா அதிகாரபூர்வமாக தொடங்கி வைத்துள்ள உலகின் மிகப் பெரிய வானொலி தொலைநோக்கி தனது முதல் கவனிப்பாய்வுப் பணியினை செய்திருக்கிறது. பூமியிலிருந்து ஆயிரம் ஒளி ஆண்டுகளுக்கு மேலான தொலைவில் உள்ள ஒரு நட்சத்திரத்தில் இருந்து இந்த தொலைநோக்கி தகவல்கள் பெற்றிருக்கிறது. அண்டம் குறித்து விஞ்ஞானிகள் மேலும் புரிந்து கொள்வதற்கும் வேற்றுலக உயிர்கள் குறித்த புரிதல் மற்றும் பார்வைக்கும் இந்த தொலைநோக்கி உதவியாக இருக்குமென நம்பப்படுகின்றது. உலகின் மிகப்பெரிய தொலைநோக்கி அதிகாரபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் பல நூற்றுக்கணக்கான வானியலாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். இத்திட்டம் செயல்படுத்துவற்காக ஏறக்குறைய 8,000 பேர் அவர்களின் இருப்பிடங்களிலிருந்து வேறிடங்களுக்கு நகர்த் தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.




## யாஹூ வில் திருட்டு

தங்களின் 50 கோடி பயனாளர்களின் தகவல்கள் திருடப்பட்டுள்ளதாக பிரபல தேடுபொறி இயந்திரமான யாஹூ நிறுவனம் அறிவித்துள்ளது. கடந்த 2014ஆம் ஆண்டின் பிற்பகுதியில் குறித்த தகவல்கள் திருடப்பட்டுள்ளதாகவும், அரசு ஆதரவுடனேயே இந்தத் திருட்டு நடைபெற்றிருக்க வேண்டும் எனவும் யாஹூ குறிப்பிட்டுள்ளது.

குறித்த திருட்டில், பயனர்களின் பெயர்கள், மின்னஞ்சல் முகவரிகள் தொலைபேசி எண்கள், பிறந்த திகதி, கடவுச்சொற்கள், பாதுகாப்பு அம்ச கேள்வி பதில்கள் உள்ளிட்டவை திருடப்பட்டுள்ளன. ஆனால், பாதுகாக்கப்படாத கடவுச் சொற்கள், பண அட்டை விவரங்கள் அல்லது வங்கிக் கணக்கு விவரங்கள் ஆகியவை திருடப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசா ரணை நடைபெற்றுவருவதாகவும் யாஹூ நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## இணைய வேகத்தை

முந்தும் புதிய தொழில்நுட்பம் விரைவில்

## அறிமுகம்




தற்போது இணைய சேவையானது 4G தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னைய வேகத்தினை விடவும் அதிக வேகம் கொண்டதாக உலக நாடுகளில் வழங்கப்பட்டு வருகின்றன. இந் நிலையில் 5பு தொழில்நுட்பத்தினை அறிமுகம் செய்து இணைய வேகத்தினை மேலும் அதிகரிக்க பல்வேறு நிறுவனாங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

இம் முயற்சியின் பயனாக கூகுள் நிறுவனம் செக்கனுக்கு 1 ஜிகாபிட் (1Gbps) வேகத்தில் குறுகிய தூரத்திற்கு தரவுகளைக் கடத்தும் கூகுள் பைபர் எனும் இணையத் தொழில்நுட்பத்தினை உருவாக்கியிருந்தது.

தற்போது இந்த வேகத்தினையும் முறியடிக்கும் வகையில் ஜேர்மனைச் சேர்ந்த விஞ்ஞானிகள் புதிய இணையத் தொழில்நுட்பத்தினை உருவாக்கியுள்ளர். இத் தொழில்நுட்பமானது கூகுள் பைபர் இணைய வேகத்தினை விடவும் 1,000 மடங்கு வேகம் கூடியது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது ஒரு செக்கனில் 125 ஜிகா பைட் வரையிலான தரவுகளை தரவிறக்கம் செய்ய முடியும் எனவும், இது 5GB அளவுடைய 25 படங்களை தரவிறக்கம் செய்வதற்கு சமமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது Technical University of Munich> Nokia Bell Labs> மற்றும் Deutsche Telekom T-Labs இணைந்து இத் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுவருகின்றன. இதே வேளை பிரித்தானியாவை சேர்ந்த குழு ஒன்று கடந்த வருடம் 1 வுழிள தரவிறக்க வேகம் கொண்ட 5G தொழில்நுட்பத்தினை அறிமுகம் செய்திருந்தது.

## வெப் கமராவை சிசிடிவியாக மாற்ற முடியும்

வீட்டில் இருக்கும் பழைய ஸ்மார்ட்போன், டேப்ளெட் அல்லது கணனி வெப்கமரா போன்றவற்றைக் கொண்டு வீட்டை எங்கிருந்தும் கவனிக்க முடியும்.

வீட்டில் இருக்கும் கணனி வெப்கமராவை சிசிடிவி கேமரா போல் பயன்படுத்துவது எப்படி என்பதை பார்கலாம்.

வழிமுறைகள் (YAWCAM)

1. யாகேம் எனும் செயலியை பயன்படுத்தி கணினியுடன் இணைக்கப்பட்ட எவ்வித கேமராவையும் நேரலை வீடியோக்களை பார்க்க முடியும். இது இலவசமாகக் கிடைக்கும்.

2. வழக்கமாக மென்பொருளை இன்ஸ்டால் செய்யும் வழிமுறையைப் பின்பற்றி யாகேம் செயலியை இன்ஸ்டால் செய்ய வேண்டும். இதோடு வெப் கமராக்களை சரியாகப் பொருத்தியிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

3. இன்ஸ்டால் செய்த செயலியை ஓபன் செய்து நீங்கள் பயன்படுத்த இருக்கும் கேமராவை தேர்வு செய்ய வேண்டும். இன்டகிரேட்டெட் கேமரா ஆப்ஷன் இருந்தால் யாகேம் செயலி தானாக கமராவை தேர்வு செய்து கொள்ளும்.

4. அடுத்து விண்டோ மெனுவில் இருக்கும் மோஷன் - டிடெக்ஷன் அம்சத்தை தேர்வு செய்ய வேண்டும். இவ்வாறு தேர்வு செய்ததும் கமராவில் இருந்து பிரீவியூ மோஷன்களை பார்க்க முடியும்.

5. அடுத்து செட்டிங்ஸ் சென்று மோஷன்-டிடெக்ஷன் அம்சங்களைச் சரியாக மாற்றியமைக்க வேண்டும்.

6. யாரும் இல்லாத போது வேலை செய்யுமளவு கணினியில் செட்டப் செய்ததும் சீரான இடைவெளியில் மின்னஞ்சல்கள் வருவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

7. பின்னர், செட்டிங்ஸ் - ஆக்ஷன் - செக் சென்ட் மெயில் ஆப்ஷன்களை கிளிக் செய்தால் சீரான இடைவெளியில் ஸ்னாப்ஷாட் புகைப்படங்களை மின்னஞ்சல் மூலம் பெற முடியும்.

http://www.yawcam.com/download.php

# எம்.ஜி.ஆர் பற்றிய சில சுவையான தகவல்கள்

சினிமா, அரசியல் தாண்டி ஓர் ஆளுமையாக எம்.ஜி.ஆர். அனைவருக்குமான ரோல் மாடல். இன்னமும் அவரைப் பற்றி சிலாகித்துச் சொல்ல ஆயிரம் சங்கதிகள் உள்ளன-

•எம்.ஜி.ஆர் நடித்த மொத்தப் படங்கள் 136. முதல் படம் சதிலீலாவதி ( 1936). கடைசிப் படம் மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் (1977).

•பெரும்பாலும் (60 படங்கள்) தெலுங்குப் படங்களைத்தான் ரீ-மேக் செய்வார் எம்.ஜி. ஆர். அத்தனையும் என்.டி.ஆர். நடித்ததாகவே இருக்கும். 'உரிமைக்குரல்' மட்டும் விதிவிலக்கு. அது நாகேஸ்வர ராவ் நடித்த தெலுங்குப் படம் !

•எம்.ஜி.ஆரின் முதல் மனைவி தங்கமணி. இரண்டாவதாக சதானந்தவதியைத் திருமணம் செய்தார். அவரது மறைவுக்குப் பிறகு வி.என்.ஜானகி.

•எம்.ஜி.ஆர்.நடித்த 50 படங்களுக்குப் பாடல்கள் எழுதியவர் கண்ணதாசன்.

அவரின் 'அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிட உடைமையடா' பாட்டு எம்.ஜி. ஆரின் காரில் எப்போதும் ஒலிக்கும்.

• விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு 6 கோடியே 37 லட்சம் ரூபாய் பணம் கொடுத்து உதவியவர் எம்.ஜி.ஆர். அவருக்கு ஏ.கே.47 ரக துப்பாக்கியைப் பரிசாக அளித்தார் பிரபாகரன்.

• சிகரெட் பிடிப்பது மாதிரி நடிப்பதைத் தவிர்த்தார். 'நினைத்ததை முடிப்பவன் 'படத்தில் சிகரெட்டை வாயில் வைப்பார். இழுக்க மாட்டார். மலைக்கள்ளனில் 'ஹீக்கா' பிடித்தது மாதிரி வருவார். இந்தக் காட்சியை வைப்பதா, வேண்டாமா என்ற குழப்பத்திலேயே படம் ரிலீஸ் ஆவதில் தாமதம் ஏற்பட்டதாம் !

• முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டால் படப்பிடிப்பிற்கு போக முடியாது என்பதால், பதவியேற்பு விழாவையே 10 நாட்கள் தள்ளிப் போட்டு 'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்' படத்தை முடித்துக் கொடுத்தார்.

•'கர்ணன்' படத்தில் சிவாஜிக்கு முன்னதாக எம்.ஜி.ஆரைத்தான் கேட்டார்கள். 'புராணப் படம் பண்ண வேண்டாம் ' என்று அண்ணா சொன்னதால் மறுத்துவிட்டார் எம்.ஜி.ஆர் !

•நம்பியாரும் அசோகனும் தான் எம்.ஜி. ஆருக்குப் பிடித்த வில்லன்கள். பி.எஸ்.வீரப்பாவும்.ஜஸ்டினும் இருந்தால் சண்டைக் காட்சிகளில் குஷியாக நடிப்பார் !

•எம்.ஜி.ஆருடன் அதிக படங்களில் ஜோடியாக நடித்தவர் சரோஜா தேவி. அடுத்தது ஜெயலலிதா !

• எம்.ஜி.ஆர்-கருணாநிதி இணைந்து வெற்றி பெற்ற படம் 'மலைக்கள்ளன்'. ஜனாதிபதி விருது வாங்கிய முதல் தமிழ் சினிமா. இந்தியாவில் உள்ள பெரும்பாலான மொழிகளில் எடுக்கப்பட்ட படம்.

• காஞ்சித் தலைவனில் இருந்து தனது கட்டுமஸ்தான உடம்பைக் காண்பித்து நடிக்கத் தொடங்கினார். எண்ணெய் தேய்த்துக் குளிக்கும் 'உரிமைக்குரல்' காட்சி பெண்களை அவர் பக்கம் ஈர்ப்பதில் பெரும் பங்கு வகித்தது.

•நாடோடி மன்னன், உலகம் சுற்றும் வாலிபன்,மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் மூன்றும் எம்.ஜி.ஆர் டைரக்ஷன் செய்த படங்கள்.

•சினிமாவில் அதுவரை கட்சிக் கருத்துக்களைப் புகுத்துவார்கள்.ஆனால் எம்.ஜி.ஆர் காட்சிகளையே புகுத்தினார். தி.மு.க கொடி, உதயசூரியன் சின்னம், அண்ணா படம் இல்லாத படமே இல்லை என்ற அளவுக்கு வைத்தார்.

•எம்.ஜி.ஆர் எத்தனையோ குழந்தைகளுக்குப் பாதுகாவலராக இருந்து படிக்கவைத்தார். அதில் முக்கியமான இரண்டு பேர், அரசியலைக் கலக்கிய துரைமுருகன். சினிமாவில் வலம் வந்த கோவை சரளா.

•தமிழ் சினிமா ரசிகர்கள் பற்றி 1970 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அடித்த கமென்ட் இது தான்.'அந்தக் காலத்து ரசிகர்கள் மாதிரி இப்ப உள்ளவங்க இல்லை. 10 நிமிஷங்களுக்கு ஒரு க்ளைமாக்ஸ் கேட்குறாங்க. அப்படி வெச்சாத்தான் படம் ஓடும்.'

•'பொன்னியின் செல்வன்' கதையைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எடுக்க நினைத்தார் எம்.ஜி.ஆர். ஆங்கில வசனத்தை அண்ணாவை எழுதவும் கேட்டுக் கொண்டார். ஆனால், ஆசை நிறைவேறவில்லை.

•அறிமுகம் இல்லாதவராக இருந்தால், உடனே கை கொடுத்து 'நான் எம்.ஜி.ராமச்சந்திரன் சினிமா நடிகர்' என்று அறிமுகம் செய்துகொள்வார்.

•ராமாவரம் தோட்டத்தில் ஆடு, மாடு, கோழி, நாயுடன் ஒரு கரடியும், சிங்கமும் வளர்த்தார் எம்.ஜி.ஆர். இவற்றைக் கவனிக்க தனி டாக்டர் வைத்திருந்தார்.

• ரொம்பவும் நெருக்கமானவர்களை 'ஆண்டவனே !' என்றுதான் அழைப்பார்.

•அடிமைப் பெண் பட ஷீட்டிங்குக்காக ஜெய்ப்பூர் போன எம்.ஜி.ஆர்.குளிருக்காக வெள்ளைத் தொப்பி வைக்க ஆரம்பித்தார். பிடித்துப் போகவே அதைத் தொடர்ந்து பயன்படுத்த ஆரம்பித்தார்.

• எம்.ஜி.ஆர்.பகிரங்கமாகக் காலில் விழுந்து வணங்கிய பெருமை இரண்டு பேருக்கு உண்டு. ஒருவர், நடிகர் எம்.கே.ராதா. கத்திச் சண்டை, இரட்டை வேடங்களுக்கு இவர் தான் எம்.ஜி.ஆருக்கு இன்ஸ்பிரேஷன். இரண்டாமவர், ஹிந்தி டைரக்டர் சாந்தாராம். இவரது படங்களைத்தான் நிறையப் பின்பற்றினார் எம்.ஜி.ஆர்.

• முழுக்கை சில்க் சட்டை, லுங்கியுடன் தொப்பி, கண்ணாடி இல்லாமல் தன் காரை தானே டிரைவ் செய்து எப்போதாவது சென்னையை வலம் வருவது எம்.ஜி.ஆரின் வழக்கம். 'யாருக்கும் என்னைத் தெரியலை. தொப்பி, கண்ணாடி இருந்தாதான் கண்டு பிடிப்பாங்க போல' என்பாராம்.

•அன்னை சத்யாவை வணங்க ராமாவரம் தோட்டத்துக்குள்ளேயே கோயில் வைத்திருந்தார்.

வாழ்க்கைக் குறிப்பு.

இராமச்சந்திரன் இலங்கையின் கண்டிக்கு அருகேயுள்ள நாவலப்பட்டியில் மருதூர் கோபாலமேன்னுக்கும் சத்தியபாமாவுக்கும் மகனாகப் பிறந்தார். அவருடை தந்தையின் மறைக்குப் பின்னர் தமிழ்நாட்டின் கும்பகோணத்தில் குடியேறினார். குடும்ப சூழ்நிலைகளின் காரணமாக படிப்பைத் தொடர முடியாததால் இவர்

நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். நாடகத்துறையில் நன்கு அனுபவமான நிலைமையில் திரைப்படத்துறைக்குச் சென்றார். திரைப்படதுறையில் தனது அயரா உழைப்புக் காரணமாக முன்னேறி நடிகரானார். இவரது நடிப்பு பெரும் எண்ணிக்கையாலான மக்களைக் கவர்ந்தது. எம்.ஜி.ஆர் திரைப்பட இயக்குனரும் தயாரிப்பாளருமாவர். இவர் தங்கமணியை மணந்தார். இவர் நோய்க்காரணமாக இறந்தார். அதன்பிறகு சதானந்தவதியை மணந்தார். இவரும் நோய்க்காரணமாக இறந்தார். பின்னர் இவர் வி.என்.ஜானகியை மணந்து கொண்டார். இவருக்கு பிள்ளைகள் கிடையாது

திரைப்பட வாழ்க்கை.

1936 இல் சதிலீலாவதி என்னும் திரைப்படத்தில் முதலில் நடித்திருந்தும், 1947 ல் அவர் நடித்த ராஜகுமாரி படம் வெளிவரும்வரை அதிகம் புகழ் கிடைக்கவில்லை. தொடர்ந்து வந்த அடுத்த 25 ஆண்டுகள், தமிழ் திரைப்பட உலகில் மிக முக்கியமானவர்களில் ஒருவராக விளங்கினார். இவருடைய சக நடிகர்களுள் ஒருவரான எம். ஆர். ராதாவினால் சுடப்பட்டுத் தெளிவாகப் பேசும் திறனை இழந்தபோதும் அவருடைய நட்சத்திர வலிமை குறையவேயில்லை. நல்ல குணங்கள் நிறைந்த கதா பாத்திரங்களையே தேர்வு செய்து நடித்தார்



எம்.ஜி.ஆர் என்ற மனிதர், நடிகராகி, புரட்சி நடிகராக, மக்கள் திலகமரக, நடிக மன்னராக, வசூல் சக்கரவர்த்தியாக, மூன்றெழுத்து மந்திரமாக, எங்க வீட்டுப் பிள்ளையாக, தாய்க் குலத்தின் தாரக மந்திரமாக, புவி போற்றிடும் புரட்சித் தலைவராகப் படிப்படியாகத் தனது புகழ் எனும் ஏணிப்படிகளில் ஏறி, தனது நிலைகளை மெல்ல மெல்ல உயர்த்தி, இன்றுவரை இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த நடிகராலும் பெற இயலாத மக்கள் செல்வாக்கைப் பெற்று உயர்ந்தார்.

இலங்கையில் பிறந்து கும்பகோணத்தை வந்தடைந்து, சினிமா உலகில் 1936ம் ஆண்டில் அடியெடுத்து வைத்தார்.ஆனால் 1947ம் ஆண்டில் "ராஜகுமாரி" படத்தின் மூலம் தான் பிரபலமடைந்தார். அதன் பிறகு முப்பது வருடத்திற்கு திரை உலகின் முடிசூடா மன்னராக விளங்கினார்.இவருக்கு இசையில் மிகுந்த நாட்டம் இருந்தது.

மற்றவர்களுக்கு குறிப்பாக ஏழைகளுக்கு உதவும் குணம் இவரிடம் இயற்கையாகவே இருந்தது. இயற்கை பேரழிவுகள் மற்றும் தனி மனித துன்பங்களுக்கு உதவுவது என்பதை பல முறைகள் செய்திருக்கிறார். ராமதாசும் அவர் மகனும் இன்று ஒவ்வொரு நடிகராக சிகரட் மற்றும் குடிக்கும் காட்சிகளை படங்களில் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கெஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதை எம்.ஜி.யார் என்றோ கடைப்பிடித்தார் என்பதை நினைத்துப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது. எம். ஆர்.ராதாவால் சுடப் பட்ட போது அவருடைய போராடும் குணமும், தன்னம்பிக்கையும் வெளிப்பட்டது.








ஏழைப் பங்காளனாக சினிமாவில் அவர் வளர்த்து வந்த உருவம் பிற்காலத்தில் அரசியலில் அவருக்கு பெரும் உதவியாக இருந்தது. அண்ணாதுரையும் எம்.ஜி.யாரை நன்றாக பயன்படுத்திக் கொண்டார். 1967ம் ஆண்டிலிருந்து 25 ஆண்டுகளுக்கு தமிழகத்தில் நடந்த எல்லா பொதுத் தேர்தல் முடிவுகளையும் தீர்மானிக்கும் சக்தியாகத் திகழ்ந்தார். எம்.ஜி. ஆர். எம்.ஜி.ஆரின் அரசியல் மற்றும் ஆட்சி பல விதமான விமர்சனத்திற்கு உள்ளானது. அவருடைய அரசியல் எந்த குறிப்பிட்ட கொள்கையோ, நீண்ட கால திட்டத்தை அடிப்படையாக கொண்டதாகவோ இருக்கவில்லை.

கருணாநிதியை எதிர்க்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோள் தான். அதை இறுதி வரை அவரால் செய்ய முடிந்ததுதான் ஆச்சிரியம்.

தி.மு.கவில் இருந்து வெளியேற்றிய உடன் கருணாநிதியைப் பற்றி கடுமையானப் பிரசாரத்தை மேற்கொண்டார்.

1972ம் ஆண்டிலிருந்து 1977ம் ஆண்டு வரை இடை விடாமல் மக்களின் மத்தியில், குறிப்பாக கிராம மக்களிடையே கருணாநிதி மேல் ஒரு தீராத வெறுப்பை ஏற்படுத்தினார். அதனால் ஏழு ஆண்டு தண்டனை போதாதா, புறங்கையைத் தானே நக்கினோம் என்றெல்லாம் மன்றாடியும் கருணாநிதியால் எம்.ஜி.யார் இருந்த வரை சட்டசபை தேர்தலில் வெற்றி பெற முடியாமல் போனது.

அவர் ஆட்சியின் மிகச் சிறப்பான பகுதியாக கருத வேண்டுமென்றால், பொது விநியோக முறையை நிர்வகித்த விதம் தான்.

இலங்கையில் தமிழர்களின் மீது நடந்த கூட்டுக் கொலையின் போது இலங்கை தமிழர்களுக்கு செய்த உதவியை நினைத்துப்பார்க்காமல் இருக்க முடியவில்லை.

இன்னும் இரட்டை இலை சின்னத்திற்கு இருக்கும் ஆதரவு இன்றும் எம்.ஜி.ஆருக்கு மக்களிடையே இருக்கும் ஈர்ப்பு சக்தி தான் காரணம்.

(தொடரும்...)



## சூர்யாவுடன் நீது சந்திரா

யாவரும் நலம், ஆதிபகவன் படங்களில் நடித்த நீது சந்திரா, யுத்தம் செய் படத்தில் ஒரேயொரு பாடலுக்கு அமீருடன் ஆடினார். அதன் பிறகு தற்போது எஸ் 3 படத்துக்காக சூர்யாவுடன் ஆடியுள்ளார். பின்னி மில்லியில் இந்தப் பாடல் காட்சி நான்கு தினங்களுக்கு படமாக்கப்பட்டது. டிசம்பர் 16 எஸ் 3 திரைக்கு வருகிறது.

## அமலாபால் ஆர்யா திருமணமா!

நடிகை அமலா பால் இயக்குனர் விஜயை கருத்துவேறுபாடு காரணமாக விவாகரத்து செய்துள்ளார்.இந்நிலையில், நடிகை அமலாபாலை ஆர்யா திருமணம் செய்து கொண்டதாக செய்திகள் இணையதளங்களில் வெளியாகியுள்ளது.ஆனால், இவர்கள் இருவரும் தற்போது கதை திரைக்கதை வசனம் படத்தின் இரண்டாம் பாகத்தில் நடித்து வருவதாகவும், அந்த படத்தின் ஒரு காட்சியில் அமலாபால் கழுத்தில் ஆர்யா தாலி கட்டுவது போல் வரும் காட்சி தான் இணையதளத்தில் வெளியாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## பல கோடிகளை இழக்கத் தயாராகு

ஸ்ருதிஹாசன் நடிக்க வந்ததில் இருந்தே அவரை துரத்திய கேள்வி "அப்பாவுடன் இணைந்து நடிப்பீர்களா? என்பது தான். அவரும் அதற்காக தான் ஏங்கிக்கொண்டிருந்தார். அப்படி ஒரு வாய்ப்பு சபாஷ் நாயுடு மூலம் வந்தது. அதுவும் அப்பா இயக்கத்திலேயே... உற்சாகமாக போய்க்கொண்டிருந்தபோதே கமல்ஹாசனுக்கு எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டு ஓய்வில் இருக்க வேண்டியதாயிற்று. இதனால் படப்பிடிப்பும் தள்ளிப்போக இப்போது மகள் அப்பவிற்காக காத்திருக்க நேர்ந்தது.

இப்போது ஸ்ருதி எஸ்3 படப்பிடிப்பில் பிஸியாக இருப்பதால் சபாஷ் நாயுடுவுக்கு சிக்கல் ஏற்பட்டது. ஸ்ருதியோ சபாஷ் நாயுடுவுக்காக அடுத்த படம் கமிட் செய்துகொள்ளவில்லையாம். தன்னால் அப்பா படம் பாதிக்கப்பட கூடாது என்ற எண்ணத்தில் வருகின்ற வாய்ப்புகளை எல்லாம் தட்டிக்கழிக்கின்றாராம். மகளின் இந்த செயலால் அப்பாவுக்கு பெருமிதம்! எப்படியோ ஸ்ருதி அப்பாவின் செல்லப்பிள்ளை அல்லவா?

## அதிர்ச்சி த

சிவகார்த்திகேயன் நடிப்பில் அ
தேதி ரெமோ படம் திரைக்கு
இப்படத்தின் ட்ரைலர் நேற்று
ரசிகர்களை வெகுவாக கவ
இந்நிலையில் இவை டூட்ஷி
என்ற ஹாலிவுட் படத்தின் காப்
பேச்சு எழுந்துள்ளது. அந்த ப
ஹீரோ சினிமாவில் பெரிய க
வேண்டும் என்று போரா
இதற்காக பெண் வேஷமிட்
கவர்வார். அதன் பிறகு நட்சத்
இவரை தேடி வரும். அதே
ரெமோ ட்ரைலரும் உள்ளது.
பார்க்கையில் அந்த படத்தின்
காப்பி தான் ரெமோ என
வலைத்தளங்களில் ஒ
எழுந்துள்ளது.



## ...பாராகும் ஸ்ருதி ?

ல் இருந்தே
ப்பாவுடன்
பது தான்.
ர்
ரு வாய்ப்பு
பும் அப்பா
ாக
ாக
யும்
ாக
ாக

# நடிகை சமந்தா இரண்டு முறைத்திருமணம்

நடிகை சமந்தாவுக்கு சென்னையிலும் ஐதராபாத்திலும் இந்து-கிறிஸ்தவ முறைப்படி இரண்டு தடவை திருமணத்தை நடத்த ஏற்பாடுகள் நடப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. நடிகை சமந்தாவுக்கும் தெலுங்கில் முன்னணி நடிகராக இருக்கும் நாகார்ஜீனாவின் மகன் நாக சைதன்யாவுக்கும் காதல் மலர்ந்து திருமணத்துக்கு தயாராகிறார்கள். இவர்கள் திருமணம் எப்போது நடக்கும் என்ற பரபரப்பான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் நிலவு கிறது. திருமண தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்று நாகார்ஜீனா கூறியுள்ளார். வருகிற டிசம்பர் மாதம்நிச்சயதார் த்தத்தையும் அடுத்த வருடம் தொடக்கத்தில் திருமணத்தை யும் நடத்த இரு வீட்டு பெற்றோரும் முடிவு செய்து இருப்ப தாக கூறப்படுகிறது. இந்த திருமணத்தை இரண்டு முறை நடத்தப்போவதாக தெலுங்கு பட உலகில் தகவல் பரவி உள்ளது. சமந்தா கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர். நாக சைதன்யா இந்து. இவர்கள் திருமணம் இந்து முறைப்படி நடக்க வேண்டும் என்று நாக சைதன்யா குடும்பத்தினர் விரும்புகின்றனர். ஆனால் சமந்தா குடும்பத்தினர் கிறிஸ்தவ முறைப்படி நடத்த வேண்டும் என்கிறார்களாம். இதனால் திருமணத்தை எப்படி நடத்துவது என்பதில் குழப்ப நிலை உருவானது. தற்போது இந்து மற்றும் கிறிஸ்தவ முறைப்படி இரண்டு தடவை திருமணத்தை நடத்தலாம் என்று உறவினர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

## கபாலி நாயகிக்கு இப்படி நடந்து போச்சே!

'கபாலி'க்கு பிறகு தன்ஷிகா நாயகியாக நடித்து வரும் படம் 'ராணி'. இதில் போலீஸ் அதிகாரி வேடத்தில் நடிக்கிறார்.

'ராணி' படத்தின் படப்பிடிப்பு ஒரே கட்டமாக மலேசியாவில் நடந்தது. தன்ஷிகா தங்கி இருந்த ஓட்டலில் இருந்து படப்பிடிப்பு தளத்துக்கு சென்றுவர ரூ. 2 கோடி மதிப்புள்ள ஒரு சொகுசு காரை ஏற்பாடு செய்து இருந்தனர்.

கேமரான் தீவு பகுதியில் படப்பிடிப்பை முடித்து விட்டு ஓட்டலுக்கு திரும்ப தன்ஷிகா தயார் ஆனார்.

ஆனால் அப்போது பதட்டத்துடன் அங்கு வந்த சாரதி "காரை காணவில்லை, யாரோ கடத்திச் சென்றுவிட்டார்கள்" என்று கூறியுள்ளார்.

மாயம் ஆன காரை கண்டு பிடித்து தரும்படி படத்தயாரிப்பாளர் அங்குள்ள பொலிஸில் புகார் செய்து இருக்கிறார். காரை மலேசியா பொலிஸார் தேடி வருகிறார்கள். இந்த சம்பவம் படக்குழுவினரை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது

## ...ச்சி தகவல்

யன் நடிப்பில் அக்டோபர் 7ம்
படம் திரைக்கு வரவுள்ளது.
ரைலர் நேற்று வெளி வந்து
வெகுவாக கவர்ந்துள்ளது.
ம் இவை டூட்ஷி (Tootsie)
ட் படத்தின் காப்பி என்று ஒரு
ள்ளது, அந்த படத்தில் வரும்
ாவில் பெரிய கதாநாயகனாக
ம் என்று போராடுகிறார்.
ண் வேஷமிட்டு மக்களை
ன் பிறகு நட்சத்திர அந்தஸ்த்து
வரும், அதேபோல் தான்
ரும் உள்ளது, இதை வைத்து
அந்த படத்தின் அப்புட்டமான
ன் ரெமோ என சமூக
ளங்களில் ஒரு பேச்சு
எழுந்துள்ளது.

# உலக வலம்

# போர்க்களமாகும் தமிழக - கர்நாடக அரசுகள் தீர்வுகள் முயற்சிகள் சாத்தியப்படுமா?

## அரசியல் ஆர்வலர்கள் ஆதங்கம்

காவிரி நீர் பிரச்சினையால் இரு மாநிலங்களும் போர்க்கொடி உயர்த்தியுள்ள நிலையில் இந்த பிரச்சினையானது இன்று அல்லது நேற்று ஏற்பட்ட பிரச்சினையல்ல என்றும் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலிருந்தே இப் பிரச்சினை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தேவைக்கு அதிகமான நீர் தமிழ்நாட்டுக்கு அனுப்பப்பட்டு வருவதும் நிலத்தடி நீர் மாசடையக்கூடும் என்ற நிலையும் மேலும் பெங்கலூர், மைசூர் போன்ற நகரங்கள் விரிவாக்கப்பட்டமையும் இதனால் பெருமளவு நீர் கர்நாடாவிற்கு தேவைப்படுவதன் காரணமாகவே இப்பிரச்சினை பூதாகாரமாக வெடித்தமைக்கு காரணங்களாக கூறப்படுகின்றது.

இவ்வேளையில் இப்பிரச்சினை காரணமாக இரு மாநிலங்களிலும் எற்பட்ட முறுகல் நிலையானது இந்தியாவின் அமைதிக்கு பங்கம் ஏற்படும் சம்பவமாக அமையலாம் என அரசியல் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.



கர்நாடக கலவரத்தின் போது

காவிரி நீர் விநியோகம் சம்பந்தமாக கர்நாடக-தமிழ் மாநிலங்களுக்கு இடையில் ஏற்பட்ட பதற்ற நிலையின் உச்சக்கட்டமாக தமிழகத்தில் முழு அளவிலான கடையடைப்பு இடம்பெற்றதும் 'நாம் தமிழர் கட்சி' தலைவர் சீமான் , வை.கோபாலசாமி, மு.க.ஸ்டாலின் உட்பட்ட பிரமுகர்கள் பலர் பெருமளவானோர் கைது செய்யப்பட்டதும் இந்நிகழ்வு தமிழகத்தில் அரங்கேற்றப்பட்டதும் ஏற்கனவே தெரிந்ததே.

அரசியல் தலைவர்கள் கைது செய்யப்படுவதும் பின்னர் விடுவிக்கப்படுவதும் வழமையான நிகழ்வுகள் தான். அரசியலில் இது ஒன்றும் புதிய விடமல்ல. அதே வேளையில் கர்நாடாவில் உள்ள தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். இது விடயத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலையிட்டு கர்நாடக தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என இலங்கை தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்யும் 07 தமிழ் கட்சிகள் இந்திய பிரதமருக்கு செய்திகள் அனுப்பியுள்ளதும் வரவேற்கத்தக்கதே.

இது விடயத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் அணுகு முறை எவ்வாறு அமையப்போகின்றது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இதே வேளையில் கர்நாடகாவில் பாண்டிபுரம் பகுதியில் வசிக்கும் நூற்றுக்கும் அதிகமான தமிழர்கள் வெற்றுக்குடங்களை ஏந்தியவாறு தமிழகத்தவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட செயலானது தமிழர்களுக்கு எதிராக தழிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது வேதனைக்குரியது என அரசியல் ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையில் இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு நீண்டகாலமாக சிறைவாசம் அனுபவித்து வரும் முருகன், பேரறிவாளன், நளினி ஆகியோரின் விடுதலை குறித்து உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

இது விடயத்தில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா விசேட அதிகாரத்தை பயன் படுத்தி மேற்படி கைதிகளை விடுதலை செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கலைஞர் கருணாநிதி, செல்வி ஜெயலலிதாவிற்கு இடித்துரைத்துள்ளார். ஆனால் நடவடிக்கை எதுவும் மேற்கொண்டதாக தகவல் இல்லை. ஆக ஈழத்தமிழர்களின் நெருப்பில் குளிர் காய்பவர்களாகவே தமிழக தலைவர்கள் மற்றும் இந்திய மத்திய அரசு செயற்படுவதும் நிறுதிட்டமான உண்மை.

இதற்கிடையில் காக்ஷ்மீரின் பாரமுல்லா பகுதியில் தீவிரவாதிகள் நடாத்திய தாக்குதலில் இந்திய தரப்பைச் சேர்ந்த 20 இராணுவ துருப்புக்கள் சாவடைந்த சம்பவமானது இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சீற்றம் அடையச் செய்துள்ளது. இத்தாக்குதலின் பின்னணியில் தீவிரவாத அமைப்புக்கள் செயற்பட்டிருக்கலாம் எனவும் கருத்து வெளியிடப்படுகிறது. இத்தாக்குதல் குறித்து ஐ.நா. செயலாளர் பான்கீ-மூன் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளர்.

காக்ஷ்மீரில் இருந்து ஆறு கிலோமீற்றர் தூரத்திலுள்ள இராணுவ முகாம் ஒன்றிலேயே மேற்படி தாக்குதல் இடம்பெற்றதாகவும் குறித்த இராணுவ முகாமிற்கு வெளியே தீ வைக்கப்பட்டதாகவும் அதனை பார்வையிடுவதற்காக வெளியே வந்த இராணுவத்தினர் மீது தீவிரவாதிகள் வெறித்தனமான தாக்குதல் மேற்கொண்டதாகவும் மேலும் அறியப்படுகின்றது. இத் தாக்குதல் சம்பவத்தை இந்து நாளிதழ் உறுதிப்படுத்தியுள்ளது.

காக்ஷ்மீர் பகுதியில் இடம்பெற்று வரும் தொடர் போராட்டங்களால் இதுவரையிர் 80 இற்கும் அதிகமானோர் மரணமடைந்தமை மனிதநேய ஆர்வலர் மத்தியில் அதிர்ச்சி அலையினை தோற்றுவித்துள்ளது.

தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த தளபதி பர்ஹான்வாணியின் படுகொலைச் சம்பவத்தையடுத்து ஏற்பட்ட வன்முறையானது எழுபதாவது நாட்களை கடந்துள்ளதாகவும் புக்ஷ்வாமா மாவட்டத்தில் தொடர்ச்சியாக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதாகவும் குறிப்பிட்ட மாவட்டம் முழுவதும் பெருமளவான பொலிசார் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் காக்ஷ்மீரில் சுயநிர்ணய உரிமை கோரி நடாத்தப்படும் போராட்டம் தொடரும் என்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர். சிறிகார் உட்பட்ட பல மாநிலங்களில் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் பாகிஸ்தானில் மசூதி ஒன்றில் தொழுகை ஒன்றின் போது நடாத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலின் போது 30 ற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாக இஸ்லாமாபாத் அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலேயே மேற்படி தற்கொலைத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாகவும் வழிபாட்டிற்கு வந்த கூட்டத்திலிருந்த ஒருவர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ததாலேயே மேற்படி அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

அம்பர் தாலுக்கா பகுதியில் உள்ள மசூதி ஒன்றிலேயே மேற்படி தாக்குதல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. மேற்படி குண்டுத் தாக்குதலிற்கு காரணம் குறித்து இதுவரையில் எதுவித தகவலும் இல்லை.

இதற்கிடையில் சிரியாவில் அரச படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட போரை அடுத்து 75000 அகதிகள் உணவு மற்றும் தங்குமிட வசதியின்றி நிர்க்கதி நிலையில் உள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம் சாட்டியுள்ளது. சிரியா, ஜோர்டான் எல்லைப் பகுதியில் இடம்பெற்ற கார்க்குண்டுத் தாக்குதலில் தனது துருப்பினர் 6 பேர் கொல்லப்பட்டதாக குற்றம் சாட்டும் ஜோர்தான் அரசு சிரியாவிற்கான எல்லைப் பகுதியை மூடியுள்ளதோடு சிரியாவிற்கான மனிதாபிமான உதவிகளையும் நிறுத்தியுள்ளதையடுத்தே அகதிகளின் அவல நிலைக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் இஸ்ரேல் பிரதமர் நெதன் ஜாகூவுக்கும் பாலஸ்தீன அதிபர் முஹம்மது அப்பாஸ் இற்கும் இடையிலான முறுகல் நிலையை தவிர்க்கும் வகையில் இரு நாட்டுத் தலைவர்களையும் நேரடியாக சந்திப்பு நடாத்தி பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்துவதற்கான முயற்சியில் ரக்ஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் ஈடுபட்டுள்ள போதும் பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பம் வெகு அரிதாகவே காணப்படுவதாக பரவலாக கருத்துக்கள் தெரிவிக்கின்றன. 2015 ம் ஆண்டு பாரிக்ஷில் நடைபெற்ற ஐ.நாசபைக் கூட்டமொன்றில் இரு தலைவர்களும் ஒரு சில வார்த்தைகள் பரிமாறிக் கொண்டதோடு சரி.

இதேவேளையில் இக்ஷ்ரேலுடன் நட்பாக இருக்க வேண்டியதன் அவசியத்தை பாலஸ்தீனர்களுக்கு அப்பாஸ் உணர்த்த தவறிவிட்டார் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமாவின் வற்பறுத்தலுக்கு அமைவாகவே இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு பாலஸ்தீன அதிபர் முஹம்மது அப்பாஸ் உடன் பேச்சு நடாத்த சம்மதம் தெரிவித்துள்ள போதும் அப்பாஸ் அப்பேச்சுவார்த்தைக்கு சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

எது எப்படி இருந்த போதும் மோதலை தவிர்க்கும் வாய்ப்புக்களை அப்பாஸ் தவறவிட்டார் என்றும் இது விடயத்தில் இரு தலைவர்களும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டு சொந்தக் காழ்ப்புணர்ச்சிகளை கைவிட்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது மத்திய கிழக்கு அமைதிக்கு நிச்சயம் வழிவகுக்கும் என்றும் பலரும் எதிர்பார்க்கின்றார்கள். எதற்கும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆக்கம் - க.கணேசராசா

(18 ஆம் பக்க தொடர்ச்சி)

## வெளிச்சம்...

நடந்தா உயிரையே விட்டு வேன்னு சொல்லி உன் மனுஷி என்கிட்ட சொல்லியிருந்தா. செந்தாமரைக்கு மூணாவது முறையும் ஆம்பிளைப் பிள்ளை தான் பிறந்திச்சு. ஆனா உன் மனைவிக்கு மூணாவதும் செத்துத் தான் பிறந்திச்சி. மயக்கத்திலிருந்த உன் மனுஷிக்கு எதுவே தெரியலை. நான் செந்தாமரைக்கிட்ட பேசினேன். அவள் புருஷனும் ஒரு குடிகாரன்தான். ஏற்கனவே பிறந்த குழந்தைகளையும் காப்பாத்த கஷ்டப்பட்டுக் கொண்ருந்த செந்தாமரை தன் குழந்தையை உன் மனுஷிக்கு தர சம்மதிச்சா. அன்னலட்சுமி பெத்த இறந்த குழந்தையை செந்தாமரைக்கு இடம்மாற்றினேன். இந்த ரகசியம் எனக்கும் செந்தாமரைக்கும் தான் தெரியும். செந்தாமரையின் குடும்பம் சலவைத்தொழில் செய்யிறவங்கன்னு ஊருக்கே தெரியும் .நீ சாதிக்காக கத்தியைத் தூக்கினே. ஆனா உன் மகன் யாருன்னு உனக்கு இப்ப தெரிஞ்சிருக்கும். நம்ம எல்லாருமே ஒரே ஜாதிதான். அது உழைப்பாளின்னுற சாதி. பணம் வசதி படைச்சவங்க சாதியைக் கட்டிக்கிட்டு அழட்டும்.


நமக்கு அதெல்லாம் வேணாம். செத்ததுக்கப்புறம் நம்மளை சுடுகாட்டுக்கு தூக்கிட்டுப் போக நாலு பேரு வேணும். நம்மளைப் பிரிக்கிற இந்த நாசமாயப் போன ஜாதியினால அந்த நாலு பேரும் நமக்கு இல்லாமற் போயிடுவாங்க. நீ ஆவெசத்தோட தூக்கின இந்த கத்தியினால மொதல்ல உன்னோட சாதி வெறி, அகங்காரம் இதையெல்லாம் வெட்டிப் புதைச்சிட்டு புது மனுஷனா வரப் பாரு."


கந்தசாமி சற்று நேரம் அமைதியாக நின்றான். கத்தியை தரையில் போட்டான். பின்பு தலைகுனிந்தவாறு இடத்தை விட்டு நடக்கத் தொடங்கினான்.

அன்னலட்சுமி கண்கலங்க ஓடிச் சென்று தர்யம்மாளின் கைகளைப் பற்றிக் கொண்டாள். தாயம்மா ஆதரவுடன் அவள் தலையை வருடினாள்.

வெளியே மழைவருவதற்காக இருண்டிருந்த மேகக் கூட்டம் மெதுவாகக் கலைய அங்கே இப்போது வெளிச்சம் வரத் தொடங்கியது.

-யாவும் கற்பனை-



# குறை

தெத்துப்பட்டி என்ற ஊரில் சாந்தனு என்ற இளைஞன் இருந்தான். அவனுக்கு நகரத்தில் வேலை கிடைத்தது. அங்கேயே தாங்கி வேலை பார்த்து வந்தான். அவனுக்குத் திருமணம் நடந்தது. தன் மனைவியை நகரத்திற்கு அழைத்து வந்து அவளுடன் குடும்பம் நடத்தினான்.

முதல்நாள் வேலைக்குச் சென்று விட்டு வீடு திரும்பினான். இங்கே யாருமே சரி இல்லை. எல்லாரும் நம்மைப் பார்த்து பொறாமைப்படுகின்றனர். என்னைப் பார்த்தாலே முகத்தைத் திருப்பிக் கொள்கின்றனர். யாரும் என்னுடன் பேசுவது இல்லை என்று குறைசொன்னாள்.

நீ இப் போதுதான் இங்கே வந்திருக்கிறாய். உன்னுடன் பழக அவர்கள் தயக்கம் காட்டியிருக்கலாம். நீ அதைத் தவறாகப் புரிந்து கொண்டிருப்பாய். நாளாக நாளாக எல்லாம் சரியாகி விடும். சிறிது பொறுமையாக இரு என்றான் அவன்.அடுத்த நாள் அவன் வேலை முடித்து வீடு திரும்பினான். "அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் நம்மைக் குறை சொல்லிக் கொண்டிருந்தனர். நான் வருவதைப் பார்த்ததும் பேசுவதை நிறுத்தி விட்டனர். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை!" என்றாள் அவள்.இப்படியே அவள் நாள்தோறும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களைப் பற்றி குறை சொன்னாள். "இனி நம்மால் இங்கே குடி இருக்க முடியாது. வேறு இடம் பாருங்கள்," என்று நச்சரிக்கத் தொடங்கினாள். "நாம் அதிகம் பழகாததால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் குறை தெரியாமல் போயிற்றா? மனைவி சொல்வது போல அவர்கள் பொல்லாதவர்கள்தானா?" என்று குழம்பினான் அவன்.அப்போது பெற்றோர்களிடம் இருந்து அவனுக்கு ஒரு மடல் வந்தது. அதில், "ஊர்த் திருவிழா ஒருவாரம் நிகழ உள்ளது. நீ குடும்பத்துடன் வர வேண்டும" என்று எழுதி இருந்தது. மனைவியிடம் அந்த மடலைக் காட்டினான். "என் பெற்றோர்கள் ஊர்த் திருவிழாவிற்கு நம்மை அழைத்திருக்கின்றனர். எனக்கு அலுவலகத்தில் நிறைய வேலை உள்ளது. என்னால் வர முடியாது. நீ மட்டும் சென்று திருவிழா முடியும் வரை இருந்துவிட்டு வா!" என்றான். அவளும் அவன் சொன்னது போலவே ஊருக்குச் சென்றாள்.

அங்கே ஒருவாரம் தாங்கிவிட்டு வந்தாள். "பயணம் எப்படி இருந்தது? என் வீட்டில் உள்ளவர்கள் உன்னை நன்றாகக் கவனித்துக் கொண்டார்களா?" என்று கேட்டான் அவன். "அங்கே மாடு மேய்க்கும் சுப்பனே என்னை எதிரியைப் போலப் பார்த்தான். மற்றவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இனி என்னை அங்கே போகச் சொல்லாதீர்கள்!" என்று சலித்துக் கொண்டாள் அவள்.

"சுப்பன் மாடுகளை மேய்ப்பதற்காக அதகாலையில் வீட்டைவிட்டுச் செல்வான். இரவில் தான் வீடு திரும்புவான். பகலில் அவனை பார்ப்பதே அரிது. இரவிலும் எப்போதாவது தான் கண்ணில் படுவான். அவன் இவளை எதிரி போலப் பார்த்ததாகச் சொல்கிறாள். "யாரைக் கண்டாலும் அவர்கள் தன்னை பார்ப்பதாகவும், தன்னைப் பற்றிதான் பேசுவதாகவும் நினைப்பதுடன், அடுத்தவர்களை குறை கூறும் இயல்பு இவளுக்கு அதிகம் உண்டு. நல்ல வேளை, இவள் பேச்சை நம்பி அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் சண்டை போடாமல் இருந்தேனே. இந்தக் கெட்ட பழக்கத்தை இவள் விடும்படி செய்ய வேண்டும். அதற்கான முயற்சியில் இறங்க வேண்டும்." என்ற முடிவுக்கு வந்தான் சாந்தனு.

## ஆறு வித்தியாசங்கள்



ஆறு வித்தியாசங்களை கண்டு பிடித்து
தினச்செய்தி
தில்லைக்கட்டி வீதி
சுன்னாகம்



## வாரமொரு குறள்

குறள் 47

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

பொருள்

மற்றவர்களை அவர்களின் வழியில் வாழச்செய்து, தானும் அறத்திலிருந்து விலகாமல், மனைவியுடன் வாழும் வாழ்க்கை, துற வறத்தார் காட்டும் பொறுமையிலும் வலிமை மிக்கது.

# அம்மா

அம்மா...

யான் சிரிக்க அழுகாச்சி காட்டுவாள்
அழுதால் தானும் அழுவாள்
உதைத்தாலும் சிரிப்பாள்
உம்மா கொடுத்தாலும் சிரிப்பாள்

கண் சிமிட்டினால் துள்ளிக் குதித்திடுவாள்
கை அசைத்தால் முத்தம் கொடுப்பாள்
கால் ஆட்டினால் தாலாட்டுவாள்
கால நேரங்கள் இல்லை

யான் கூச்சலிட்டால் விழித்துக்கொள்வாள்
என்னை கிள்ளிப் நகைப்பர் சிலர்-ஆனால்
நான் நித்திரையில் மூழ்கிய பின்னும்..
அவளோ ஆரிரரோப் பாடுவாள்

நித்திரை கலையாமல் இருக்க
நெஞ்சில் மீது ஏற்றி ஊஞ்சல் ஆட்டுவாள்
குளிரில் அணைத்துக் கொள்வாள்
வெயிலில் சேலையை குடையாக்குவாள்

மழையில் தானே குடை ஆவாள்
நான் தவழ்ந்திட
அவ்ளும் தவழ்ந்து நடை பழக்குவாள்
முகம் சுழிக்கும் போதெல்லாம்

முதுகில் ஏற்றி யானைச் சவாரி செல்வாள்
சின்ன சின்ன சண்டையிடுவாள்
மறுநொடியே சிரித்து விடுவாள்
கடை வீதியில் நான் கை காட்டினால்

தன் தேவைகளையும் மறப்பாள்
விழுந்தால் சொந்தங்கள் நூறு
கை கொடுக்கும்-ஆனால்
அரவணைக்க அவள் மட்டுமே வருவாள்

ஆயிரம் பேர் சேவை செய்ய இருக்க
அம்மாவோ கூலி கேட்க மாட்டாள்
வரம் ஒன்று பிச்சையிடு அம்மா
மறுபிறப்பிலும் உன் கருவில் உதித்திட

# அன்னை

மழலை பசிப்புரிந்து
தன் இரத்தம் உறைத்து
பாலாக மாற்றி
உணவாக தந்து
பசிபோக்கும் தெய்வமே!

துன்பம் அடையும் போது
கண்ணீரை துடைப்பதும்
இன்பம் அடையும் போது
இன்னிசை கொடுக்கும் தெய்வமே!

எம்மை தூக்க வைக்க உன் கெட்டு
என் சிரிப்பை ரசித்து
என் தவறை மன்னித்து
தண்டனை கொடுக்காத தெய்வமே!

கடவுளை கண்டதில்லை
காணவும் தேவையில்லை
கும்பிடவும் அவசியமில்லை
நீயே கண் கண்ட தெய்வமே!



# பேக்கரி நடத்தும் 8 வயது சிறுவன்

"இரண்டு பனிஸ் கொடுங்கண்ணா?" என்று பேக்கரிக்குள் நுழையும்போதே குரல் கொடுப்பதுதான் நமது வழக்கம். அங்கு இருப்பவருக்கு நம்மை விட வயதில் அதிகமா, குறைவா என்றெல்லாம் யோசிப்பதில்லை. ஆனால் அமெரிக்காவின் கலிஃபோரினியாவில் உள்ள ஒரு பேக்கரிக்குச் செல்பவர்களை கியூட்டான சின்னஞ்சிறு குரல் வரவேற்கிறது.

அந்தக் குரல் எட்டு வயது ஜலென் பெய்லிக்கு உடையது. வீட்டிலேயே கல்வி கற்றுவரும் ஜலென், சமீபத்தில் அம்மாவின் உதவியுடன் பேக்கரியைத் தொடங்கி தானே உணவுப் பொருட்கள்ளையும் தயாரித்து விற்கும் செய்திதான்" நகரின் முக்கிய பேச்சே. "ஜலென்ஸ் பேக்கரி" என்ற பெயரில் தொடங்கியிருக்கும் தன் கடைக்குத் தேவையான கேக்ஸ், பிஸ்கற்ஸ், சாக்லெட்ஸ், சிப்ஸ் எனப் பலவகை உணவுப் பொருட்களை, தானே தயாரித்து விடுகிறார்.


விளையாடியே நேரத்தை கழிக்கும் பருவத்தில் ஜலெனுக்கு எப்படி வந்த ஐடியா?

"நாங்கள் வாடகை வீட்டிலேயே வசித்துவருகிறோம். அம்மாவுக்கு எப்படியாவது சொந்த வீடு வாங்கவேண்டும் என்பதுதான் கனவு. வீடு வாங்க நிறைய பணம் வேண்டும். அதனால்தான் இப்போதிலிருந்தே அதற்கான முயற்சியைத் தொடங்கி விட்டேன். நிச்சயம் அம்மாவின் கனவை நிறை வேற்றுவேன்" எனச் சொல்லி வியக்க வைக்கிறார் ஜலென்,

நிறைய வேலைகள் இருக்க பேக்கரியைத் தொடங்கியது ஏன் என்று அவரின் அம்மா ஷர்ஹோண்டா மஹன்டம் (Sharhonda Mahan) கேட்டால்,

"சிறுவயதில் இருந்தே ஜலெனுக்கு சமையல் என்றால் பிடிக்கும். அதனால் கடந்த இரண்டு வருடங்களாக பட்டர் பிஸ்கெட்ஸ், பிரெட், கேக்ஸ், சிப்ஸ் போன்ற உணவு வகைகளை தயார் செய்வதைக் கற்றுகொடுத்து வந்தேன். அதைச் சுலபமாக கற்றுக்கொண்ட ஜெலன், தானாகவே தயாரிக்கும் அளவுக்கு நம்பிக்கை வந்ததும் பேக்கரி கடையை ஆரம்பிக்க தீர்மானித்தோம்" என்கிறார்.


உணவுப் பொருட்களைத் தயாரிப்பது சின்ன பையன் தானே என்று லேசாக எடைபோட்டு விடாதீர்கள். ஜலென் தயாரிக்கும் பேக்கரி ஐட்டம்ஸ் தரமானதாகவும் ருசியாகவும் இருப்பதால் ஜலென்ஸ் பேக்கரிக்கு நல்ல வரவேற்பு கிடைப்பதுடன், சுகாதாரத் துறையும் பாராட்டி, அனுமதி வழங்கியுள்ளது. jalensbakery.com என்ற பெயரில் இனையதளத்தையும் தொடங்கியுள்ளார் ஜலென். அதிலும் முன்பதிவுகள் குவிகின்றன.




# சொன்னார்கள் சொன்னார்கள்



"எனக்கு வயதாகிவிட்டது. ஓய்வு தேவைப்படுகிறது. இனி நான் பாடப்போவது இல்லை" என்று அறிவித்துள்ளார் தேன் குரலுக்கு சொந்தக்காரியான பிரபல பின்னணிப் பாடகி எஸ்.ஜானகி.



நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல என உச்சநீதிமன்றம் பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று பாராளுமன்றத்துக்குத் தெரியப்படுத்தினார்.



"தீ விபத்து ஏற்பட்டு மறுநாள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். அவருக்கு இந்த விடயத்தை தெளிவுபடுத்திக் கூறினேன். ஆனால், இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளையும் அவர் முன்னெடுக்கவில்லை" அத்துடன், "இயற்கை அழிவுகளுக்கு மாத்திரம் நிதியுதவி வழங்கும் என்றும் இது செயற்கையான ரீதியில் ஏற்பட்ட இழப்பு என்பதால், நட்ட ஈடு வழங்க முடியாது போகும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது." என்று வடமாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறினார்.



"கிளிநொச்சி, வட்டக்கச்சி பகுதியில், இராணுவம் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள மாகாண விவசாய அமைச்சுக்கு சொந்தமான சுமார் 410 ஏக்கர் விவசாய பண்ணைக்குரிய காணியை, மீளப் பெற்றுக்கொடுக்குமாறு, மாகாண விவசாய அமைச்சினால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது," - மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.



அமைச்சர்கள், அதிமுகவினர் பெருமளவில் குவிந்ததால் ஓ. பன்னீர்செல்வம், பொன்னையன் உள்ளிட்ட சிலரை மட்டும் சசிகலா மருத்துவமனைக்குள் வர உத்தரவிட்டிருந்தார். அவர்களிடம், ஜெயலலிதா நலமுடன் இருப்பதாக வெளியே போய் பேட்டி கொடுத்துவிட்டு அனைவரும் தலைமை செயலகத்துக்குப் போய்விடுங்கள். நிர்வாகிகள் யாரும் சென்னைக்கு வரக் கூடாது என அனைத்து மாவட்ட செயலர்களுக்கும் தெரிவித்துவிடுங்கள் என அடுக்கடுக்கான கட்டளைகளை பிறப்பித்திருக்கிறார் சசிகலா.



ஐக்கிய நாடுகள் சபையின் 71 வது கூட்டத்தொடரில் கலந்துகொண்ட சகல அரச தலைவர்களும் இலங்கையின் தற்போதைய நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து தங்களது திருப்தியை வெளியிட்டுள்ளனர் என்றும் அந்த நல்லாசிகளுடன் இலங்கை உலகில் உண்மையான வெற்றியை நோக்கி முன்னெடுத்துச் செல்வதாகவும் ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



# ஏன் மூக்கில் உள்ள முடியை அகற்றக் கூடாது என உங்களுக்கு தெரியுமா?

ஆரோக்கியம் சார்ந்து நாம் தினமும் காட்டும் அக்கறையை விட அழகு சார்ந்து நாம் அன்றாடம்காட்டும் அக்கறை தான் அதிகமாக இருக்கிறது. அழகாக உடை உடுத்த வேண்டும் மிடுக்காக இருக்கவேண்டும். ஷூ பாலிஷ் செய்ய வேண்டும் முடிக்கு க்ரீம் பயன்படுத்துவது, தாடி ட்ரிம் செய்வது, மூக்கின் முடியை கூட மொத்தமாக அகற்றுவது என நாம் இவற்றை தினமும் செய்கிறோம்.

சமீபத்திய ஆய்வில் தாடியை கிளீன் ஷேவ் செய்வதே தவறு தாடி இருப்பதால் நல்ல கிருமிகள் வளர்கின்றன. இவை முகத்தின் சருமத்திற்கு நன்மை விளைவிக்கின்றன என கண்டறியப்பட்டது.

அதே போல மூக்கின் முடியை முழுமையாக தினமும் அகற்றுவதும் தவறு என கூறுகின்றனர். உண்மையில் மூக்கின் முடி பக்டீரியா தாக்கம் உண்டாகாமல் தடுத்து உதவுகிறதாம்.

அசௌகரியம்!

மூக்கில் முடி வளர்வது அசிங்கமாக, அசௌகரியமாக இருக்கலாம். ஆனால் அதற்காக தினமும் மூக்கில் உள்ள முடிகளை அகற்றுவது சரியான தீர்வல்ல. உண்மையில் இது ஆரோக்கியமற்ற செயல்.

Triangle of death

மூக்கு பகுதி Triangle of death என்றும் கூறப்படுகிறது. மூக்கு நம் உடலின் முக்கியமானஉறுப்புகளில் ஒன்று. மூக்கில் அல்லது மூக்கு வாயிலாக உடலுக்குள் ஏற்படும் தொற்று பெரும் அபாயத்தை உண்டாக்கலாம்.

நோய்க்கிருமிகள்!

மூக்கில் இருக்கும் முடிகளை நீங்கள் சீராக தினமும் அகற்றுவதால் நோய்க்கிருமிகள் எளிதாகமூக்கின் வாயிலாக உடலுக்குள் எளிதாக சென்றுவிடுகிறது.


மூக்கின் முடி! மூக்கில் வளரும் முடியை ஆங்கிலத்தில் என்று கூறுகின்றனர். இது ஒவ்வொருநாளும் மூக்கினை பாக்டீரியாக்கள் தாக்கம் உண்டாகாமல் காக்க உதவுகிறது.

இதற்கு என்ன தான் தீர்வு?

ஆரோக்கியம் ஒருபுறம் இருக்க, அசௌகரியம் ஒரு புறம் இருக்க, தினமும் மூக்கின் முடியை முழுவதுமாக அகற்றுவதுதினமும் ட்ரிம் செய்வது அல்லது வேக்ஸிங் செய்வதற்கு பதிலாக சிறிய கால இடைவேளை விட்டு சிறிதளவில் ட்ரிம் செய்துக் கொள்வது நல்லது.

முழுவதுமாக மூக்கின் முடியை அகற்ற வேண்டாம்.

# iPhone 7 ஒன்றை தயாரிக்க செலவாகும் தொகை குறித்து அதிர்ச்சித் தகவல்



அப்பிள் நிறுவனம் கடந்த வாரத்தின் பிற்பகுதியில் iPhone 7 மற்றும் iPhone 7 Plus எனும் புதிய இரு கைப்பேசிகளை அறிமுகம் செய்திருந்தது. இக் கைப்பேசிகள் மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பை பெற்றுள்ள நிலையில் தற்போது ஒரு அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது ஒரு iPhone 7 கைப்பேசியினை வடிவமைப்பதற்கு செலவாகும் தொகை 224.80 அமரிக்க டொலர்கள் என்பதே அந்த அதிர்ச்சி தகவல் ஆகும்.

இதில் என்ன அதிர்சசி என்று கேட்கின்றீர்களா? ஆம் 224.80 டொலர்கள் செலவில் வடிவமைக்கப்பட்ட கைப்பேசியானது சந்தையில் ஆகக் குறைந்த விலையாக 649 டொலர்கள் நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இதில் மற்றுமொரு அதிர்ச்சி தகவல் என்னவென்றால் இதற்கு முன்னர் அப்பிள் நிறுவனம் அறிமுகம் செய்த iPhone 6S கைப்பேசியினை வடிவமைப்பதற்கு 219.80 டொலர்களே செலவானது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி பார்க்கையில் iPhone 6S வடிவமைப்பு செலவை விட 5 டொலர்களே iPh one 7 தயாரிப்பிற்கு செலவிடப்பட்டுள்ளது.இந்த தகவலை லண்டனை தளமாகக் கொண்டு செயற்படும் ஐ HS Markit எனும் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

# இவ் வாரபலன்

24.09.2016 – 30.09.2016



சோதிடர் :- V.A.சிவராசா, B.A.,B.Phil, Dip.in Edu.
ஜோதிர் வித்யா ரத்னா (அரசு விருதுபெற்ற ஜோதிடர்)
சாமசிறீ தேசமானிய பெயரியல் நிபுணர்.




(அஸ்வினி,பரணி,கார்த்திகை, 1ம் பாதம்)
அட்டமத்துச் சனி இருப்பதனால் ஜாதகத்தில் தற்போதைய திசாபுத்தி நன்றாக இருந்தால் மட்டுமே நன்மை கிட்டும். குரு 6 ல் உள்ளதனால் எதிரிகளால் மனப்பயம் பதகளிப்பும் தக்க வைக்கும். நோய்களுக்கு மருந்தில்லாத மருத்துவமுறைகளை நாடிப் பயன் பெறுதல். இராகு கேது சர்ப்க்கிரகங்களினால் போட்ட முதல் அந்த மாதிரியான லாபத்தைக் கொண்டுவரும். மீள் நியமனம் பெறும் கைங்கரியத்தில் ஈடுபட முயற்சித்தல்.




(கார்த்திகை,2,3,4 ரோகிணி ,மிருகசீரிடம் 1, 2)
குருபகவான் 7ல் உள்ளதால் கைவிட்டிருந்த திருமணப் பேச்சு வெற்றிக்கனியை தேடித் தரலாம். சனிஸ்வரன் கண்டச் சனியாக இருப்பதனால் இரத்த உறவினர்கள் வெளிநாடுகளினின்றும் வந்து சேரலாம். பொருட்கொள்வனவில் கலாவதித் திகதி மற்றும் தரம் தராதரத்தைப் பாருங்கள். இராகுகேது முறையே 4ம் 10ம் இடத்தில் நிற்பதனால் செய்தொழிலில் போதிய கவனம் எடுங்கள்.




( மிருகசீரிடம்3 ,4 திருவாதிரை ,புனர் பூசம் ,1 ,2, 3)
சனீஸ்வரன் 6 ல் உள்ளதால் பொறுப்பின்றிக் கொடுத்தவை இறை செயலால் கைக்கு எட்டுதல். பொருட் கொள்வவிற்காக அடிக்கடி பிரயாண மேற்படல்.குரு 4ல் நிறபது தாயாரின் நோய் நிலைப்பாட்டினால் விடுப்பில் நிற்க நேரிடலாம். இராகு கேது முறையே 3ல் 9ல் காணப்படுவதனால் சகோதரர் மற்றும் பிதாவின் கிடைக்கும். சமரசம் செய்ய வெளிக்கிட்டு உடலிற் காயங்கள் ஏற்படலாம்.




(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)
சனீஸ்வரனின் நிலைப்பாட்டினால் எதிர்பாராத வீழ்ச்சி ஏற்படக்கூடிய கோசரப் பலன் உண்டு. 5ல் சனியினால் நெஞ்சில் சளி நோய் வாட்டி வதைக்கும். 3ல் குருவினால் இயன்றவரை கோதரர்களுக்கு உதவ செல்வதைக் கைவிட்டால் விமோசன முண்டு. சுவீப் அதிஷ்டம் உண்டாகலாம். இராகுகேது என்பன 2ஆம் 8ஆம் நிலையில் காணப்படுவதனால் பொறுப்பின்றி எதையும் கொடுக்க வேண்டாம்.




( மகம் பூரம், உத்தரம். 1,2)
சனீஸ்வரன் 4 ல் நிற்பதனால் நீர் தத்து விபத்து மின்சார ஒழுக்கில் கவன மெடுங்கள். மண விலக்குப் பெறும் யோசனையை தற்காலிகமாக கைவிடவும்.ஜென்மராகு இருப்பதனால் சத்திர சிகிச்சைக்கு இடமுண்டாகலாம். கேது 7ல் நிற்பதனால் பிரிவுத் துயர் சிலரை வருத்தலாம். காதலில் சோதனை , வேதனை தக்கவைப்பதுடன் சந்தேகக் கேடு சந்தோஷக் கேட்டினையும் ஏற்படுத்தலாம்




( உத்தரம் 3 ,4 அத்தம், சித்திரை 1,2)
ஜென்மத்திலே வியாழன் (1) இருப்பதனால் புத்திரர்கள் பற்றிய கவலை, மனச் சஞ்சலம் என்பன வாட்டும். கணக்கு வழக்கில் நம்பகம் அற்றுப் போவதனால் 'வாடிக்கையை முறித்துக் கொள்ளல்.சனி கோசரம் 3 ல் இருந்து நோயை நீக்கச் செய்து தேகம் வலிமையடையும்.பிள்ளைகளின் ஒவ்வாத செயல்களைப் பவ்வியமான முறையில் திருத்த முயற்சிக்கவும். கேது 6ல் உலா வருவதனால் பாதுகாப்பு நடவடிக்கையில் தீவிர கவனமெடுக்கவும்.




(சித்திரை 3 ,4 சுவாதி, விசாகம் 1 ,2 ,3)
ஏழரைச் சனி கடைக்கூறு நடக்கின்ற படியால் கஸ்டங்கள் குறைவடையும். புதிய முயற்சியில் கால் பதிக்கலாம். பங்குத் தொழிலை கைவிட்டு தனித்து இயங்க எண்ணமிடல். வியாழன் 12ல் நிற்பதனால் அவமானம் கௌரவக்குறைவு ஏற்படலாம். சர்ப்பராகு 11ல் இருக்கும் போது நட்ட நிலைப்பாடு நீங்கிவிடும். கேது பெருமான் 5 இல் வீற்றிருக்கும் போது புதிய ஜீவன் ஏற்பட்ட அறிகுறி தென்படல்.




( விசாகம் 4, அனுசம், கேட்டை)
ஏழரைச் சனி ஜென்மச் சனியாக உள்ளதனால் மக்களைப் பற்றிய செய்திகள் கவலையை தரும்.நோய்களால் தெய்வங்களுக்கு விஜயம் மேற்கொள்ள ஆயத்தமாதல். வியாழ கோசரம் இலாப நிலையில் இருப்பதனால் நட்ட நிலைப்பாடு படிப்படியாக மறையத் தொடங்கும்.பத்தில் ராகு" செய்தொழிலில் போதிய கவனம் செலுத்தும் படி உங்களை எச்சரிக்கின்றார்."அலைபாய்கின்ற மனத்தை அடக்கி காரியத்தில் கண் வைக்கும் படி 4ல் ராகு புத்திமதி புகட்டுகின்றார்.




(மூலம், பூராடம், உத்தராடம் 1)
குருபகவான் பத்தில் நிற்பதனால் எதிர்பாராது தொழில் இடம் பதவி மனை மாற்றம் ஏற்படுதல். வெளியூர் பயணம் இடைத்தங்கல் நாடொன்றில் அஞ்ஞாதவாசம் ஏற்படுத்தலாம்.ஏழரைச் சனி இருப்பதனால் மனை அமைக்கும் எண்ணத்தை தற்காலிகமாக கைவிடவும்.பாக்கியதானத்தில் ராகு உலா வருவதனால் புதிய நட்பினை முளையிலேயே கிள்ளி விடுங்கள்.கோசர ரீதியில் கேது பெருமான் 3ல் இருந்து தைரியத்தையும் வீரிய சக்தியையும் தக்க வைப்பார்




(உத்தராடம்2,3,4, திருவோணம், அவிட்டம் 1 ,2)
பத்தில் வியாழன் நீங்கியமை நொந்த உள்ளத்திற்கு ஆறுதலளிக்கும் நிலைப்பாகும்.புதிய முயற்சியில் துணிந்து கால் பதித்து அதிஷ்டசாலியாகலாம். சனீஸ்வரன் இலாபகோசரத்தில் விளங்குவதனால் வெளியூர் பயணம் காலை வாரி விடாது.அட்டமத்துக் கேது ( 8)வின் வலைப்பின்னல் இருப்பதனால் விபத்து பற்றி மிக மிக எச்சரிக்கையாகச் செயற்படவும்.




(அவிட்டம் 3 4, சதயம், பூரட்டாதி, 1 ,2, 3)
அட்டமத்து வியாழன் ( 8) செய்தொழில் தேக சௌக்கியத்தில் பாதிப்பினைத் தரலாம். சனீஸ்வரனின் 10 ஆம் கோசார நிலையினால் குடும்பத்தின் கவின் நிலை கெட்டு சுமூக நிலை தோன்றாது .பிரிவினை தக்க வைக்கலாம்.இராகு 7ல் நின்று இன்ப சுகங்களை அனுபவிக்க விடாது குழப்ப நிலையை ஏற்படுத்தி விடலாம்.ஜென்ம கேது (1) காணாமற்போனவர் உயிருடன் இருக்கின்றார் என்ற தகவலைத் தரலாம்.




(பூரட்டாதி 4, உத்தரட்டாதி , ரேவதி)
குரு 7ல் நிற்பதும் ஆட்சி வீடாகவும் இருப்பதனால் முன்னேற்றப் பாதை திறக்க வழியொன்று பிறக்கும். சனீஸ்வரன் பாக்கிய ஸ்தானத்தில் (09) நிற்பதனால் பிதாவின் நோய்களில் கவனம் எடுக்கவும்.இராகு சட்டராகுவாக (6) விளங்குவதனால் எதிரியின் அட்டகாசம் தணிந்து விடும்.கேது 12ல் நிற்பதனால் எதிர்பாராத சுபகாரியமொன்று ஏற்பட்டு விடாலாம்.







# வட்ஸ் அப்பிற்கு போட்டியாக வரும்

பிரபல இணையத் தேடுபொறி நிறுவனமான கூகுள் "அல்லோ என்ற பெயரில் புதிய செய்தி பரிமாற்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

கூகுள் நிறுவனம் இந்த ஆண்டு மே மாதம் "டியூ" எனப்படும் காணொளி அழைப்பு சேவை வசதி செயலி மற்றும் "அல்லோ" எனப்படும் செய்தி பரிமாற்ற செயலி ஆகியவற்றை கொண்டுவர இருப்பதாக அறிவிப்பு செய்தது.

அதைத் தொடர்ந்து கடந்த மாதம் "டியூ" சேவை முறைப்படி அறிமுகம் செய்யப்பட்டது. ஒரு மாதத்திற்குள் பத்து லட்சம் பேர் அதனை தங்கள் அலைபேசிகளில் பதிவிறக்கம் செய்தனர். அதனைத் தொடர்ந்து கூகுள் தற்போது "அல்லோ" எனப்படும் செய்தி பரிமாற்ற செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த "அல்லோ" செய்தி பரிமாற்ற செயலியானது உள்ளிணைந்த கூகுள் தேடுபொறி வசதியுடன் வெளிவருகிறது. இதன் காரணமாக ஏதாவது ஒரு விஷயத்தை இணையத்தில் தேடுவதற்காக உரையாடல் செயலியிலிருந்து வெளியில் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.


மேலும் கூகுள் உதவு ஒருங்கிணைப்பு வசதியும் இதில் இடம்பெற்றுள்ளது. பயனாளர்கள் தங்கள் கூகுள் கணக்கை இத் துடன் இணைத்துக் கொள்ளலாம்.

இத்துடன் இதில் பல்வேறு தரப்பினரும் பயன்படுத்துவதற்கு ஏதுவான "எமோஜிகள் மற்றும் "ஸ்டிக்கர்களும்" இடம்பெற்றுள்ளன.

ஆனால் வாட்ஸ் அப்பில் இடம்பெற்றுள்ள கோப்புகள் பரிமாற்றம் மற்றும் குரல்வழி அழைப்பு வசதி போன்ற வசதிகள் தற்போது இந்த செயலியில் இடம்பெறவில்லை.

ஆனால் வெகுவிரைவில் குரல்வழி அழைப்பு வசதி "அல்லோ" செயலியில் இடம் பெறு மென கூகுள் நிறுவன அதிகாரி தெரிவித்திருக்கிறார்கள்.

# 2017 ல் பூமியில் விழப் போகும் சீன விண்கலம்



சீனாவின் முதல் விண்வெளி நிலையம் என்ற பெருமையைப் பெற்ற டியான்காங்-1 ( Tiangong-1) என்ற விண்வெளி நிலையம் கட்டுப்பாட்டை இழந்துள்ளதால் 2017 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அது பூமியில் வந்து விழக்கூடும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்த விண்வெளி நிலையம் விண்ணில் ஏவப்பட்டது. டியான்காங்-1 விண்வெளி நிலையத்தை அடிப்படையாக வைத்து 2020 இல் மிகப்பெரிய விண்வெளி நிலையத்தைக் கட்டமைக்க சீனா திட்டமிட்டிருந்தது.

ஆனால், டியான்காங்-1 தற்போது கட்டுப்பாட்டை இழந்து விட்டதால் பூமியில் வந்து விழவுள்ளது. பூமியில் வீழும்போது அது துகள்களாகவே விழக்கூடும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமிக்கு ஒரு விண்கலம் பத்திரமாகத் திரும்புவது என்பது இன்னும் சாத்தியமாகவில்லை. காரணம் பூமியிலிருந்து விண்வெளிக்கு ஏவுவதை விட பூமிக்கு விண்கலத்தைத் திரும்பக் கொண்டு வருவது மிகக் கடினமானது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# விடுதலைப் புலிகளின்...

த்து இன்று 15:30 மணிக்கு நாங்கள் யாழ்ப்பாணத்தில் மனிதாபிமான உணவுப் பொட்டலங்களை விமானம் மூலமாக போடவுள்ளோம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தத் தகவலைப் படித்து ஆடிப்போன இலங்கை உயர்ஸ்தானிகர் பேர்னாட் திலகரட்ண, உடனடியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்கின் அலுவலகத்தில் இருந்தபடியே தொலைபேசி மூலம் கொழும்பிற்கு தகவல் தெரிவித்தார்.

இதற்கு, "எங்களுடைய சுதந்திரத்திற்கும் இறைமைக்கும் விடுக்கப்பட்ட ஒரு பயங்கரத் தலையீடு இதுவாகும்' என இலங்கை அரசு தெரிவித்தது.

" ஒப்பிரேஷன் பூமாலை" தோல்வியில் முடிவடைந்த படியால் இந்த உணவுப் பொட்டலங்களை விமான மூலம் போடுவதே இந்தியாவின் திட்டமாகும். இதனை குறுகிய கால அவகாசத்திற்குள் போடுவதற்கு இந்தியா முன்வந்தது.

ஏற்கனவே இந்தியாவின் உளவுத் துறையினர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் இரண்டாம் ஆம் கட்டித் தலைவர்களுடன் தொடர்பில் இருந்து இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை பெற்றுக் கொண்டிருந்தார்கள். உணவுப் பொருட்களைப் போடும் இந்திய விமானங்களின் மீது இலங்கை விமானப் படையினர் தாக்குதல் நடத்துவார்களாக இருந்தால் இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கியமான நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்களைப் பிடிப்பது என்றும் கடத்துவது என்றும் இந்திய அரசு தீவிர திட்டங்களை வகுத்திருந்தது.

(தொடரும்...)

(சென்ற வார தொடர்ச்சி...)

# நீதி தாமதித்தாலும்...

தான்.முன்பு அதிகார துஷ்பிரயோகம் செய்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இந்திரா காந்தி போன்றோர் தண்டனை பெறவில்லையா? அதே விதமாக எல்லா குற்றவாளிகளுக்கும் தண்டனை கிடைக்கும். இது இயற்கையின் நியதி. நீதி சரியாக கிடைக்கும். என்றோ ஒரு நாள் அனுபவித்தே தீருவார். உப்பு குடித்தால் தாகம் வந்தே தீரும் என்றார் மயில்வாகனம்.

“தங்கள் கடவுளின்ரை சனம் என்று தம்பட்டம் அடித்த ஸ்ரவேலர்கள் செய்த பாவகாரியத் தாலை முக்கியம் யேசுவைக் கொல்லுவித்ததும் சவ அறை மாதிரி வெளிப்பூச்சிலும் தொழிற்பட்டதாலை கடவுள் கோபித்து உங்கள் பொய்யான வழிபாடு எனக்கு வேண்டாம். உங்களின் கோயிலை பபிலோனியன் அடியோடை வந்து இடிப்பான். உங்களையும் சிறைப்பிடிப்பான். என்று சாபம் இட்டார். அது அப்படியே நிறைவேறியது.

சமயம் கடவுள் அன்பு தான் அகங்காரத்திற்கு இடமில்லை. அவர்கள் இன வெறியர்கள். சாதி வெறியர்கள். மற்றவர்கள் பாவிகள் என்பார். சமய வியாபாரிகள் நம்மை அஞ்ஞானிகள் என்ற மாதிரி. கடைசியிலை உலகெல்லாம் திரிந்து வதைபட்டு யேசுவை செய்த வதைக்கு பிராயச்சித்தமாக வதைபட்டனர். சாபம் பொல்லாதது. அவர்கள் ஸ்ரவேலுக்கு திரும்பி வரேக்கை பல சாதி கலப்போட பல வர்ணங்களோட வந்தனர்.

கடவுளின் பாடம் எப்படி? மற்றையது விபச்சாரத்தாலை சோதேம் பட்டணம் அழிந்ததென்று கதையும் உண்டு. எனவே பாவ காரியங்களை மனிதர்கள் கைவிட்டு இறை விசுவாசமாக இருக்க வேண்டும். இது எல்லா சமயத்தினருக்கும் பொதுவான விடயம் என்றார் மாணிக்கம்.

‘ஒரு காலத்திலை யாவா இந்தோனேசியா பர்மா எல்லாம் பரந்த எமது கலாச்சாரம் இன்று தொட்டிலிலேயே ஆட்டம் காணுது. அது மட்த்ல. தமிழ் அரசர் ஆண்டனர். இன்று இந்தியாவிலேயே பணத்தில் தமிழுக்கு இடமில்லை. உலக வரலாற்றில் காலப்போக்கில் ஏற்ற இறக்கம் வரும் ஆண்டவன் ஆளப்படுவான். அடங்கியவன் ஆளுவான். இது இயற்கையே. அதே விதியில் இலங்கையிலும் தமிழர் மிக மிக தாழ்வை சந்தித்துள்ளோம்.

மிக விரைவில் விடிவு வருமென நம்புவோம். அநியாயமாக கொல்லப்பட்ட மனிதரின் பழி பாவம் கொன்றவர்களை சும்மா விடுமா?

என்றோ ஒரு நாள் அனுபவிக்க வேண்டி வரும். சந்நிதி தேரை எரித்தவர்கள் பட்ட பாட்டைப் போல பல மடங்கு அனுபவிப்பர். தொண்டமனாற்றில் தேர் எரித்து விட்டு கதிர்காமத்தில் காவடி எடுத்து பிராயச் சித்தம் தேடினவை. எல்லாம் நீதி உள் கடவுள் கேட்பார். மகிந்தவும் அவருடைய சகாக்களும் இறைவனால் தண்டிக்கப்படுவார். கடவுளின் இயந்திரம் மகிந்தவிற்கு தன்னுடைய கடமையை ஆரம்பித்து விட்டது.பொன்சேகா தான் செய்த பாவத்திற்கு பலவாறு அனுபவிக்கின்றார்.

தமிழரின் தங்கத்தை விற்கப்போய் பட்ட பாடு மகிந்தவின் பாரியாருக்கு தான் தெரியும். கர்மச் சொத்தை விற்கப் போய் தொடரான வேறு பாவங்களும் சேர்ந்தது தான் மிச்சம். அவரின் வம்சம் மானம் கெட்ட விதத்தைப் பார்த்தீர்கள் தானே. என்றார் முத்து தம்பி ஆசிரியர் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு.

அரசன் பிழை விட்டால் தெய்வம் வெகு விரைவில் தண்டிக்கும். இதற்கு உதாரணம். இடியமீன். ஈரானிய ஷா பிரான்ஸ் அரசன் ஆகி யோரின் வரலாறுகளே போதும் என்றார் மயில் வாகனத்தார்.

இன்னும் ஓர் விடயம் பாருங்கோ மகிந்த சிந்தனையில் உருப்பெற்ற ஆட்சியில் அனேகமான சொந்தங்கள் பிரபலமானதும் சொத்து சேர்த்ததும் அதுவும் பலாத்கோரமாக பறித்ததும் தான் நடந்தது. ஒரு விதத்திலை இடியமீன் ஆட்சிதான். அந்த றகர் விளையாட்டு வீரனின் படுகொலைகளுக்கெல்லாம் ஒரு காலம் அவை விலை கொடுக்கவேண்டி வரும். மேலே ஒருத்தர் இருக்கிறார் தானே.? என்றார் பிரசங்கியார் கணபதிப்பிள்ளை.

“ நீர் பைபிள் கதை ஒன்று படித்திருப்பீர் என்று நினைக்கிறேன். அதிலை ஒரு கீரைத் தோட்டக் காரனின் நிலத்தை ஒரு இராணி விலைக்கு கேட்க அவன் தனது சீவனோவியமான நிலத்தை விற்க மறுத்து விட்டான். பிறகு அவனை பொய்க் குற்றம் சாட்டி கொன்று விட்டு அக்காணியை அவள் கைப்பற்ற இறை வாக்காளர் ஒருவர் மூலம்

இறைவன் கூறினார். இவளுடைய பாவ காரியத்தால் இவளுடைய ரத்தத்தை நாய்கள் நக்குமென்று. பன்பு அவளை எதிரிகள் மாடியில் இருந்து தள்ளி விட சிதறிய இரத்தத்தை நாய்கள் நக்கின.

முசோலினியை இறுதியில் கம்பத்தில் கட்டி தொங்க விட்டனர். இப்படி முற்பகல் செய்ததை பிறபகல் கொடுமைக்கா ரம் அனுபவிப்பது கண்கூடு என்றார் மயில் வாகனத்தார்.

ஐயா! எனது தாத்தா இன்னுமொரு பைபிள் கதை சொல்கிறவர் டேவிட் மகாராஜாவிற்கு ஒரு போர் வீரனின் மனைவியிலை மனதாய்ப் போச்சு. பெண்ணாசை மனிதனை எவ்வளவு பாவங்களை கூசாது செய்யப் பண்ணுது பாருங்கோ.

ஒரு போரிலை அவனை முன் னுக்கு விட்டிட்டு அவனை கொல்லப்பட வைத்து பின்பு அவளை அடைகின்றான். அப்போ இறைவாக்கு கூறியது உனது மாளி கைக்கு மேல் இந்தப் பாவம் தொங்கு மென்று. பின்பு இவனது மனைவிமாரை ஒருவன் மேடை போட்டு கற்பழித்தவன். பார் த்தீர்களோ பழி எப்படி தீர்க்கப்பட்ட தென்று.

அரச நிதி இல்லாவிட்டாலும் தர்மம் சும்மா விடாது. கர்ம இரகசியம் என்னும் நூலில் நான் படித்த ஒரு கதை அது கர்ம விதி எப்படி செய்படுகின்றது என்று உதாரணம் மூலம் காட்டுகின்றது.

ஒரு மிக நல்ல மனிதன் இருந்தான்.ஒரு நாள் பாதையால் போகும் போது ஒரு தங்க வியாபாரியை காவற்காரன் கொலை செய்து விட்டு தங்கத்தை எடுத்துக் கொண்டு போவதைக் கண்டு அவனை பிடித்துக் கொண்டு சத்தம் போட்டான். மக்கள் வந்து திரண்டனர். அப்போது திருடன் வெகு சாமர்த்தியமாக நல்ல மனிதனை கட்டிப் பிடித்துக் கொண்டு கொலையாளி கொலையாளி என்று சத்தம் போட்டான்.

அப்போது மக்கள் நல்லவனைப் பிடித்து நீதி விசாரணைக்காக நீதிபதியிடம் ஒப்படைத்தார்கள். நீதிபதி இவனுக்கு மரண தண்டனை விதித்தார். இவனைப் பார்க்க நல்லவனாக தெரிந்ததாலே அவர் அவனை அழைத்து அவனது வரலாற்றைக் கேட்டார்.

அப்போது தனது மனைவியை தொந்தரவு செய்த ஸ்திரிலொலனை கொன்று ஆற்றில் வீசியதாக கூறினான். அப்போ நீதிவான் நீதி பிழையானது. உனது பழி சூழ்ந்த விதத்தை அறிந்தாயா? என்று கூறி அவனுக்கு கிடைத்த தண்டனை சரி என்றார்.

அறம் சூழும் என்று கூற முடியாது. என்றோ ஒரு நாள் கட்டாயம் சூழும். என்றார் மாணிக்கம்.

கடவுள் அதாவது தர்மம் பார பட்சம் பார்ப்பது கிடையாது. எல்லோர்க்கும் நீதி ஒன்று தான். ஒரு சதத்திற்கும் நீதி பிசகாது. நான் சொல்கின்றது மனித அரச நீதியை அல்ல தெய்வ நீதியை சொல்கிறன்.

என்னை பொறுத்த வரையிலும் நான் துன்பம் வரும்போது எனது அல்லது பரம்பரை வினையே காரணமென சந்தோஷமாக கீழ் படிகின்றான். முல்லைத் தீவிலை பெரும்பான்மை இனம் பழி பாவம் இரண்டையும் விதைத்துள்ளது. அது ஆறுதலாய் வளர்ந்து கனி கொடுக்கும். இறைவன் இருக்கின்றான். என்று கூறி மயில்வாகனத்தார் முடிக்க அர்த்த ஜாம பூஜைக்கு பெரிய மணி ஓங்கி ஒலித்தது.



## வெளிச்சம்

ஆக்கம் - பாலர் சங்குப்பிள்ளை

விடிந்ததும் விடியாததுமாக கந்தசாமி கத்த ஆரம்பித்து விட்டான். குசினியில் வேலையாக இருந்த அன்னலட்சுமி எரிச்சலுடன் வெளியே வந்தார்.

‘ கெடைக்கிற காசையெல்லாம் டவுணுக்கு போய் தண்ணிபோட வேண்டியது. கல்யாண வயசில ஒரு கன்னியிருக்காளே! அவளுக்கு கல்யாணத்தைப் பண்ணிவைப்போமென்னிற அக்கறையில்லை. நானொருத்தியா வேலைக்கும் போய் எல்லாத்தையும் பார்க்க வேண்டியிருக்குது

கழுத்துல தாலிய மட்டும் கட்டிட்டு ஆம்பிளைய நீ செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்யாம தினம் தினம் எங்கள பாடய் படுத்துறே.?”

“ ஏய் நான் என்ன சொல்லுறேன். நீ என்ன பேசுறே. உன் அருமை மவன் வாத்தி வேலைக்குப் போனா அதை மட்டும் செய்யணும். அடுத்த தோட்டத்தலிருக்கிற சவரம் பண்ணுற பொன்னுச்சாமி மவளோட இவனுக்கு என்னடி பேச்சி ? ரெண்டு பேரும் ஒரே இடத்தில தான் வேலை செய்யிறாங்களாம். நாம என்ன சாதி அவங்க என்ன சாதி? புல்லு வெட்டுறவங்களாயிருந்தாலும் என்னோட சாதிய நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்.”

“என்னய்யா இந்தக் காலத்தில சாதி. சாதின்னு சாகிறே. போன வருஷம் ரெத்தம் ரெத்தமா வாந்தியெடுத்துக் கிட்டு ஆஸ்பத்திரியில சாகக் கெடந்த உனக்கு ரெத்தம் குடுத்தவன் சாதி பார்த்தாய்யா குடுத்தான்.? நமக்கெல்லாம் மானம் மரியாதை, மனுசத் தன்மை இருந்தாற் போதும் - பாழாய்போன சாதியெல்லாம் தேவையில்லை

“அப்டின்னா. உன் மவன் செய்யிற தெல்லாம் சரின்னுறியா. நாளைக்கு வெள்ளை வேட்டியோட ரோட்டில நடந்து போகப் போறவன் நான். நாலு பேர் நரம்பில்லாத நாக்குல நாலு வார்த்தை சொல்லிட்டா அவமானப்படப் போறவன் நான் தான்.

“இப்ப மட்டும் என்னவாம்? வேட்டி நழுவுறதுக்கூட தெரியாம நாலு காலுல்லத்தானே நடக்கிறே. முதல்ல குடியை நிறுத்திட்டு நல்ல மனுஷனா இருக்க முயற்சி செய். மற்றதைப் பற்றியெல்லாம் அப்புறமா பார்க்கலாம்.”

“ ஓகோ நீயும் அவனோட சோந்திட்டியா. என் உயிரே போனாலும் நீங்க நெனைக்கிறது எதையும் செய்ய விடமாட்டேன் வெட்டி சாய்ச்சிடுவேன்.”

அவன் சத்தம் போட்டவாறே வாசற்கதவை படாரென அடித்து சாத்திவிட்டு பெரெட்டுக் களம் நோக்கி கோபத்துடன் நடக்கத் தொடங்கினான். அன்னலட்சுமி வாய்க்குள் முணுமுணுத்தவாறு மறுபடியும் குசினிக்குள் நுழைந்தாள்.

கந்தசாமி ஒரு குடிகாரன். அன்னலட்சுமியை அவன் கைப்பிடித்த போது அவன் நல்லவனாகத் தான் இருந்தான்.ஆனால் மகன் பன்னீர் செல்வம் பிறந்து அவனுக்கு ஐந்து வயது நடக்கும் போது டவுணில் கூடாதவர்களிடம் சேர்ந்து குடிப்பழக்கம் பழகினான். அவர்களுக்கு கல்யாணம் நடந்து நான்கு வருடம்

கழித்து தான் பன்னீர் செல்வம் பிறந்தான். இடையில் இரண்டு முறை குழந்தைகள் இறந்தே பிறந்தன. அப்புறம் அன்னலட்சுமியின் அண்ணன் சதாசிவம் குடும்பத்துடன் கதிர்காமம் போகும் போது பஸ் விபத்துக்குள்ளானதில் கணவன், மனைவி இருவரும் அந்த இடத்திலேயே இறந்து விட அவர்களின் நான்கு வயதுப் பெண் குழந்தை கற்பகத்தை அன்னலட்சுமியே பொறுப்பெடுத்துக் கொண்டாள். கற்பகம் இப்போது க.பொ.த உயர்தரம் கல்வி கற்கிறாள். பன்னீர் செல்வம் அவள் மேல் பாசத்துடன் இருந்தான். பன்னீர் செல்வம் நன்றாகப் படித்து அவன் விரும்பிய ஆசிரியர் தொழிலையே தேடிக் கொண்டான். அங்கே தான் அவனுடன் ஒன்றாகப் பணி புரியும் தேன் மொழியைச் சந்தித்தான். தேன்மொழி பொன்னுச்சாமியின் மகள்.

கந்தசாமி ஒரு நல்ல தந்தையாக இருந்து இதுவரை செயற்பட்டது கிடையாது. பன்னீர் செல்வம் பாசத்துடன் அவனை அணுகும் போதேல்லாம் அவனை எட்டிப் போய்விடுவான். அன்பாக நாலு வார்த்தை பேச மாட்டான். அவன் ஆசிரியத் தொழிலில் கிடைத்த முதல் மாத சம்பளத்தைக் கூட அவன் தாயிடம் தான் கொடுத்தான்.அவனுக்கு எல்லாமே அம்மா தான். அவனுக்கு சோறூட்டுவது, குளிப்பாட்டிவிடுவது.தூங்க வைப்பது டவுணுக்கு கூட்டிச் சென்று தேவையானதை வாங்கிக் கொடுப்பது எல்லாமே அவன் அம்மா தான். அதனால் தான் தேன் மொழி பற்றி அம்மாவிடம் சொன்ன போது அவள் மறுப்பேதும் சொல்லவில்லை.

ஒரு மாதம் ஓடியது. கந்தசாமி வழமை போல அன்று சனிக்கிழமையான படியினால் விடியற்காலையிலேயே டவுணுக்கு போய் விட்டான். அங்கே கிடைக்கும் சில்லறை வேலைகளைச் செய்து அதில் கிடைக்கும் பணத்தில் நன்றாகக் குடித்து விட்டு இரவு இருட்டியபின் தான் தள்ளாடிய படி வருவான்.

அன்று தன் மகன் பன்னீர் செல்வம் விரும்பிய படி பொன்னுசாமியின் மகள் தேன் மொழியை நிச்சயம் செய்வதற்காக தனக்கு மிகவும் நெருக்கமாகவர்களுடன் புறப்பட்டு விட்டான். பொன்னுசாமி வீட்டில் வைத்து சம்பிரதாயபூர்வமாக நிச்சயம் செய்து விட்டு சாப்பிடுவதற்காக அன்னலட்சமி உட்கார நினைத்த வேளையில் ஆவேசமாக கந்தசாமி அங்கே வந்து சேர்ந்தான். அப்போது அவன் லேசாக குடித்திருந்தான்.

“ஏண்டி இலவெடுத்தவளே. நான் எவ்வளவு சொல்லியும் எதையும் காதுல வாங்காம எனக்கு தெரியாம இங்க வந்து கை நனைக்கப் பார்க்குறியா? டவுணுல கேள்விப் பட்டுத் தான் ஓடி வந்தன். இந்தக் கல்யாணம் நடக்காது.எல்லாரையும் வெட்டிப் போட்டுவன்.”

அவன் கையில் கவ்வாத்துக் கத்தி இருந்தது. கண்களில் வெறியும் உடலில் முரட்டுத் தன்மையும் நிரம்பிக் கிடந்தது. கோபத்தில் அவன் உடல் நடுங்கியது.

“ யோவ் உன் மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்பிட மாட்டேன். என் மகன் விரும்பிட்டான். என் உயிரே போனாலும் நான் இதை நடத்தியே தீருவன் உனக்கு இதில் தலையிடவோ தடுத்து நிறுத்தவோ எந்த தகுதியும இல்லை.உனக்கு மானம், மரியாதை போகுதுன்னா நீ ஒதுங்கிப் போயிடு. நீ எனக்கு நல்ல புருஷனாகவோ இல்லை, என் பிள்ளைகளுக்கு நல்ல அப்பவாகவோ இருந்ததில்லை.”

கந்தசாமி ஆவேசத்துடன் கவ்வாத்துக் கத்தியுடன் பாய்ந்து சென்று அன்னலட்சுமியின் தலைமயிரைப் பிடித்துக் கொண்டு கத்தியை ஓங்கினான். அனைவரும் கத்தினார்கள். அப்போது அங்கிருந்த ஒரு வயதான பெண்மணி ஓடி வந்து அவனைப் பிடித்து தள்ளி விட அவன் தடுமாறிக் கீழே விழுந்து மறுபடியும் துள்ளியெழுந்தான்.

“ஏய் நில்லுடா கந்தசாமி! நில்லுடா! என்னை உனக்கு அடையாளம் தெரியாதோடா? உன் மனுஷிக்கு பிரசவம் பார்த்த தாயம்மாடா. உன் மனுஷியும் கண்ணுசாமியோட மனுஷி செந்தாமரையும் ஆஸ்பத்திரியில அடுத்தடுத்த கட்டில்ல தான் இருந்தாங்க ஏற்கனவே இரண்டு முறை குழந்தை செத்துப் பிறந்ததால இந்த முறையும் அப்படி

(தொடர்ச்சி... 14 இல்)





ஜெ. யோகராஜ்

# மின்னஞ்சல் தொடர்பான அறிவுறுத்தல்களை செல்லிடத் செல்லிடத் தொலைபேசியில் பெற்றுக் கொள்வது எப்படி?

• முதலில் இந்த இணையத்தளத்தோடு (www.way2sms.com) நீங்கள் உங்களது செல்லிடத் தொலைபேசியை பதிவு செய்து கொள்ளவேண்டும்.

• அடுத்து அந்த இணையத்தளத்தில் Mail Alerts Tab பில்login செய்யவும். இங்கு உங்களுக்கு வழங்கப் படுகின்றபயனர் கடவுச் சொல்லைஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.




register here பொத்தானை அழுத்தி பதிவுசெய்துகொள்ளலாம். அதன் பின்னர் உங்களுக்குகிடைக்கும் கடவுச் சொல்லையும், உங்களதுசெல்லிடத் தொலைபேசி இலக்கத்தையும் பயன்படுத்தி இந்த இணையத்தளத்திற்குள் நுழையலாம்.பின்னர் கீழே காட்டப்பட்டுள்ள திரை உங்களுக்கு தென்படும்.




•இங்கு அம்புக்குறியினால் காட்டப்பட்ட MAIL ALERT ஐ தெரிவுசெய்க.


• அதன் பின்னர் உங்களது gmail மின்னஞ்சல் மூலம் உள்நுழையுங்கள்.

• இங்குMail Setting ஐ திறந்து Forwarding and POP/IMAP எனும் Tab ஐ தெரிவு செய்யுங்கள்.

அதற்கான பட விளக்கம் கீழே உள்ளது.




• இங்கு Add a forwarding address எனும் பகுதியில் உங்களது way2sms.com's மின்னஞ்சல் முகவரியைடைப் செய்யுங்கள். அதற்கான படவிளக்கம் கீழேதரப்பட்டுள்ளது.




•இனி Next என்ற பொத்தானை அழுத்துங்கள்.

•அழுத்தப்பட்டவுடன் மீள் பரிசோதிப்பு கோவை இலக்க மொன்று(A verification code) way2sms Email எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கப்படும்.

•அதன் பின்னர் உங்களுக்கு செல்லிடத் தொலைபேசியின் ஊடாக கிடைக்கப் பெறும் அனைத்துமின்னஞ்சல் அறிவுறுத்தல்களையும் gmail மின்னஞ்சல் இணையத்தளத்திற்குச் சென்று சரிபார்த்துக் கொள்ளுங்கள். இந்தசேவை gmail மின்னஞ்சல் பயனர்களுக்கு மட்டுமே பொருத்தமானது. இந்த சேவை ஏதேனுமொருசந்தர்ப்பத்தில் தேவைப்படாதவிடத்து நீங்கள் Forwarding and POP/IMAP tab க்குச் சென்று இந்த சேவையை செயலிழக்கச் செய்யலாம் (Disable Forwarding). அதற்கான படவிளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.




இந்த சலுகை yahoo, ibibo போன்ற மின்னஞ்சல் இணையத்தளங்களுக்கு பொருத்தமானது.




கேள்வி : pendrive அல்லது flash memory என்பதற்கான தமிழ் விளக்கத்தை தருவீரகளா?.


பதில் : pen drive அல்லது flash memory என்பதற்கான தமிழாக்கம் திரள் நினைவகம் என்பதாகும். இந்த நினைவகமானது ஒரு குறுகிய தகவல் களஞ்சியமாக செயல்படும் கருவியாகும். இதன் உருவம் சிறியதாக இருப்பதனால் நடமாடும் தகவல் களஞ்சியமாக கருதப்படுகிறது. இதனை எங்கும் இலகுவாக எடுத்துச் செல்லக்கூடிய வசதி உண்டு.

இதன் கொள்ளவுகள்.4MB,8MB,16MB, 24MB,32MB,64MB,128MB என்று விரிந்து சென்று இப்போது 1GB,2GB, 4GB,8GB என்ற வரிசையிலும் வெவ்வேறு விலைகளில் சந்தையில் காணப்படுகின்றன.

உங்களுக்கு கணினி தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.

yogaraj35@gmail.com

email : yogaraj35@gmail.com




## டெஸ்க் டாப் கம்ப்யூட்டர்களுக்கும் வாட்ஸ் அப்

விண்டோஸ் இயக்கத்திற்கான புதிய வாட்ஸ் அப் செயலி ஒன்றை வாட்ஸ் அப் வெளியிட்டுள்ளது. இதன் மூலம், வாட்ஸ் அப் வாடிக்கையாளர்கள், documents களை தங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளலாம். பி.டி.எப். பைல்களையும் இதன் வழியே அனுப்பலாம். வாட்ஸ் அப் தளத்திற்கு, விண்டோஸ் இயக்கம் ஒரு சிறந்த வழியாகும். ஏற்கனவே, விண்டோஸ் போன் இயக்கத்தில் இந்த வசதி தரப்பட்டிருந்தது.

மேலும் விண்டோஸ் சிஸ்டம் மட்டுமின்றி, மேக் கம்ப்யூட்டர்களிலும் இந்த வசதி தரப்பட்டுள்ளது.

இதனை https://www.whatsapp.com/ என்கிற இணைய தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## you tube பில் மொபைல் டேட்டாவை மிச்சப்படுத்தும் வழி

மொபைலில் நாம் வழக்கமாக பார்க்கும் வலைதள பக்கங்களுக்கு செலவிடும் டேட்டாக்களை விட நாம் பார்க்கும் வீடியோக்களிற்கே அதிக டேட்டாக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனை தடுக்கும் பொருட்டு ஆண்ட்ராய்டு பயனர்களுக்கு யூ-டியூப் Smart offline என்ற ஒரு புது சலுகையை வழங்கியுள்ளது.அதாவது நாம் பார்க்க எண்ணும் வீடியோக்களை டேட்டாக்கள் மலிவான தரத்தில் கிடைக்கும் நேரங்களான இரவில் சேமித்து காலையில் Saved vedios ல் கொண்டு வந்து சேர்க்கிறது. இதனால் பகலில் நாம் குறித்து வைக்கும் வீடியோக்கள் இரவில் டேட்டாவை மிச்சப்படுத்தும் பொருட்டு தக்க சமயத்தில் தானாகவே பதிவிறக்கி தரும். இந்த அம்சம் இன்று முதல் ஏர்டெல் மற்றும் டெலினார் போன்ற நெட்வொர்க்குகளுக்கு மட்டுமே கிடைக்கும். வெகுவிரைவில் அனைத்து நெட்வொர்க்குகளிலும் காணலாம் என கூகுள் நிறுவனத்தினர் கூறியுள்ளனர். Smart offline அம்சத்தினை மொபைலில் கடைபிடிக்க வழி முறைகள் இதோ.

படிமுறை - முதலில் யூ -டியூபில் நாம் offline ல் பார்க்க வேண்டிய வீடியோவை தேர்ந்தெடுத்து அதில் "Save Over night" ஆப்ஷனை தேர்ந்தெடுக்கவும்.

படிமுறை - பின்னர் குறித்து வைத்த வீடியோவானது இரவில் தானாகவே பதிவிறக்கம் செய்யும்.

படிமுறை - இறுதியாக சேமித்த வீடியோக்களை நமது அக்கவுண்டில் saved vedios பக்கத்தில் சென்று பார்த்து ரசிக்கலாம்.

# பெண்ணியல் மருத்துவர்கள் கூறும் பெண்ணுறுப்பு குறித்த 5 முக்கியமான விஷயங்கள்!



லபியாபிளாஸ்டி என்பது பிளாஸ்டிக் சர்ஜரி போன்ற ஒன்றுதான். அதாவது பெண்ணுறுப்பு வடிவம் மற்றும் தோற்றத்தை மாற்றியமைக்கும் அறுவை சிகிச்சை முறை தான் இந்த லபியாபிளாஸ்டி.

இந்த காலத்து உலக பெண்கள் மத்தியில் அழகு என்பது அத்தியாவசியமாக மாறிவிட்டது.

அதன் வெளிபாடு தான் இந்த லபியாபிளாஸ்டி. அனைத்து பெண்களுக்கும் ஒரே மாதிரியான பெண்ணுறுப்பு இருக்காது.அளவு தடிமன் நிறம் என அனைவர் மத்தியிலும் பெண்ணுறுப்பு வேறுப்பட்ட தோற்றத்தில் தான் இருக்கும் என பெண்ணியல் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

எனவே இது ஏதோ பெண்ணுறுப்பு சார்ந்த பிரச்சனையோ கோளாறோ அல்ல என்பதை பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### தோற்றம்

ஒவ்வொரு பெண்ணின் பெண்ணுறுப்பும் வெவ்வேறு மாதிரியான தோற்றத்தில் தான் இருக்குமாம். தோற்றம் அளவு நிறம் போன்றவை கூட மாறுப்பட்டு தான் காணப்படும் ஒரே மாதிரியாக இருக்கும் என யாரும் எண்ண வேண்டாம் என பெண்ணியல் மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

### கருவாய்

பெண்ணின் கருவாய் நீளம் நிறம் தடிமன் என அனைத்தும் ஒவ்வொரு பெண் மத்தியிலும் வேறுப்பட்டு தான் காணப்படுகிறதாம். பிங்க் கரும்பழுப்பு என நிறங்கள் வேறுபடலாம் என பெண்ணியல் மருத்துவர்கள் கூறுகிறார்கள். மேலும் சில பெண்களுக்கு சற்று வெளிப்புறம் வரைகூட நீட்டித்து இருக்கலாம் இது இயல்பானது தான் கூறுகின்றனர்.

### கிளிடோரி (Clitori)

கிளிடோரியின் தலை பகுதி சிலருக்கு சுருக்கங்கள் உடையதாகவும் சிலருக்கு சாதாரணமாக மென்மையாக சிறியதாகவும் கூட காணப்படுகிறது. மேலும் பெண்ணுறுப்பு உதடுகளின் (Labia) நிறம் மற்றும் தோற்றமும் கூட ஒவ்வொரு பெண் மத்தியிலும் தோற்றம் நிறத்தில் வேறுபட்டு தான் காணப்படும் என பெண்ணியல் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

### லபியாபிளாஸ்டி (Labiaplasty)

லபியாபிளாஸ்டி என்பது பெண்ணுறுப்பு தோற்றம் மாற்றியமைக்கும் அறுவை சிகிச்சையாகும். அளவு மற்றும் தோற்றத்தில் வேறுபாடு இருக்கிறது என மேற்கத்திய நாட்டு பெண்கள் அதிகமாக இந்த லபியாபிளாஸ்டி அறுவை சிகிச்சை செய்து கொள்கின்றனர்.

இது இப்போது இந்தியா போன்ற வளரும் நாடுகளிலும் கூட கொஞ்சம், கொஞ்சமாக அதிகரித்துவருவதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் பெண்ணுறுப்பில் ஏதேனும் கோளாறு அல்லது பிரச்சனை என்றால் மட்டும் லபியாபிளாஸ்டி செய்துக் கொள் என பரிந்துரைக்கின்றனர்.

மேலும், லபியாபிளாஸ்டி செய்துக் கொள்ளும் பெண்களில் பலரும் தங்களது பெண்ணுறுப்பை அழகுபடுத்திக்கொள்ளதான் செய்துக் கொள்கின்றனர் என பெண்ணியல் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

### மாற்றங்கள்

வயதாக வயதாக உடலியல் மற்றும் ஹார்மோன்களில் மாற்றங்கள் ஏற்படும் போது பெண்ணுறுப்பிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மேலும், பிரசவித்த பிறகு பெண்ணுறுப்பில் மாற்றங்கள் தென்படுவது இயல்பு இது நான்கைந்து மாதங்களில் அதுவாகவே சரியாகிவிடும்.

### ஒப்பீடுகள் வேண்டாம்

பெரும்பாலும் பெண்கள் மத்தியில் பிறப்புறுப்பு சார்ந்த ஒப்பீடுகள் நிலவுவதாகவும் அது தேவையற்றது எனவும் பெண்ணியல் மருத்துவர்கள்கூறுகின்றனர். அதிலும் சீன பெண்கள் ஐரோப்பிய பெண்களோடு அதிகமாக ஒப்பீடு செய்துக் கொள்கின்றனர்.

### ஆரோக்கியம்

உங்கள் பெண்ணுறுப்பு ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் இருந்தாலே போதுமானது. அதன்தடிமன் அளவு நிறம் நீளம் குறித்து கவலைக் கொள்ள வேண்டாம் என பெண்ணியல் மருத்துவர்கள் கூறுகின்றனர்.




யோகா செய்வது என்பது ஒரு வகையில் தியானம் செய்வது போன்றதுதான். சக்தி பெற முடியும். ஒரு முகப்படுத்துதல் ஞாபக சக்தி உடல் பலம் மனோபலம் மன அழுத்தம் குறைவு என பலநன்மைகளை தருகிறது.

தினமும் செய்து கொண்டு வந்தால் எந்த நோயும் நெருங்காது. உடலின் சகல பிரச்சனைகளுக்கும் காரணகர்த்தா உடல் பருமன். உடல் பருமனை குறைக்கவும் கலோரிகளை எரிக்கவும் அன்றாடம் யோகா செய்தால் போதும். இங்கே கூறப்பட்டுள்ள யோகாக்கள் கலோரிகளை கரைத்து உடலைஸ்லிம்மாக வைத்துக் கொள்ள உதவுபவை.

எல்லாம் செய்ய வேண்டும் என்பதில்லை. உங்களுக்கு எது முடிகிறதோ அதை தவறாமல் தினமும்செய்து பாருங்கள். பலன் கிடைக்கும்

### மகர அதோ முகஸ்வனாசனம்

இது பலகை போன்று தட்டையாக செய்யப்படுவதாகும். உங்கள் தசைகள் அதிக பயிற்சி பெற்று கலோரிகளை கரைக்கும். இந்த நிலையில் 30-5 நிமிடம் வரை இருக்கலாம். எவ்வளவு தாக்குபிடிக்கமுடியுமோ அவ்வளவு தூரம் நிற்கலாம்.

செய்யபப்டும் இந்த யோகாவினால் கால் தொடைஇடுப்பு ஆகிய பகுதிகலில் இருக்கும் அதிகப்படியான கொழுப்பு கரையும். உடல் பருமனை வேகமாக குறைக்கச் செய்யலாம்.

### சூர்ய நமஸ்காரம்

இந்த ஆசனத்தில் பன்னிரண்டு ஆசனங்கள் உள்ளன. இந்த ஆசனம் ஒரு முழுமையான சிறந்த உடற்பயிற்சியாக உள்ளது. இந்த ஆசனத்தை தினமும் காலையில் செய்து வந்தால், உடல் மற்றும் மனம் நன்கு ஆரோக்கியமாக இருப்பதோடு, அனைத்து

### சதுரங்க தண்டாசனம்

இது பார்ப்பதற்கு எளியதாக இருந்தாலும் தம் பிடித்து செய்யப்படவேண்டிய யோகா. உங்கள் கால்கள் இறுக்கமடைந்து முழங்கைகள் 90 டிகிரி கோணத்தில் இருப்பதால் வேகமக கலோரிகள் எரிக்கப்படுகின்றன.

### உத்கடாசனம்

கால் பாதங்களை பதித்து நாற்காலியில் அமர்வது போல் செய்வதே உத்கடாசனமாகிறது. இது இடுப்பு பிடித்துக்கொள்ளும் வலி, மூட்டுகள் சேரும் இடத்தில் வலி முதலிய நோயிலிருந்து நிவாரணம் கிடைக்கும். இதை விதிப்படி செய்தால் கால்களுக்கு பலம் உண்டாகும்.

### அர்த்த பிஞ்ச மயுராசனம்

டால்பின் போன்ற தோற்றத்தில் செய்யப்படுவதால் இந்த பெயர் பெற்றது. இந்த ஆசனத்தால் வயிறு தொடை பகுதிகளுக்கு அழுத்தம் தரப்படுகிறது. இதனால் கொழுப்புகள் அந்த பகுதிகளில் கரையும். இது உடல் பருமனானவர்கல் செய்யும்போது நல்லபலன் தரும்.



உத்கடாசனம்

அன்றாடம் சாப்பிடும் கலோரிகளை எரிக்க இந்த ஆசனங்கள் செய்தால் போதுமானது. செய்வதற்கு 15 நிமிடங்கள் இருந்தால் ஆகும். மிகவும் புத்துணர்வு தரும் ஆசனங்கள் இவையாகும்.



மகர அதோ முகஸ்வனாசனம்



அர்த்த பிஞ்ச மயுராசனம்

# ஆன்மீகம்




# கொக்குவில் மேற்கு அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய இராஜகோபுரத்தின் அடிக்கல் நாட்டு விழா 2016 செப்டம்பர் 16 ஆம் திகதி இடம்பெற்றது.





இந்த நிகழ்வில் நல்லை ஆதீனம் நல்லூர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தகுருக்கள் அவர்களும், வடமாகாண விவசாய அமைச்சர், ஐங்கரநேசன் அவர்களும், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி அவர்களும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

## கணவன், மனைவி பற்றி வேதாத்ரி மகரிஷி



* கணவன், மனைவி உறவுக்கு இணையாக உலகில் வேறெந்த உறவையும் சொல்ல முடியாது. எந்த விஷயத்தையும், பிரச்னையையும் நாசூக்காக கையாளுங்கள். விட்டுக் கொடுத்து வாழுங்கள். சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத் தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.

* கணவனுக்குத் தெரியாமல் மனைவியோ, மனைவிக்குத் தெரியாமல் கணவனோ சம்பாதிப்பதும், சேமிப்பதும் கருத்து வேறுபாடுக்கு இடம் தரும்.

* நானே பெரியவன் என்ற அகந்தையை விடுங்கள். அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டே இருப்பதை விடுங்கள்.

* குடும்பத்தை நிர்வாகம் செய்வது உங்கள் அறிவாகத்தான் இருக்க வேண்டும். எந் நிலையிலும் உணர்ச்சிகள் நிர்வாகம் செய்யக் கூடாது.

* நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள். குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.

* உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.

* மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். அளவுக்கு அதிகமாய், தேவைக்கு அதிகமாய் ஆசைப்படாதீர்கள்.

* எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

* கேள்விப்படும் எல்லா விஷயத்தையும் நம்பாதீர்கள். அற்ப விஷயங்களைப் பெரிது படுத்தாதீர்கள்.

* உங்கள் கருத்தில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். மற்றவர் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ள பழகுங்கள்.

* மற்றவர்களுக்கு மரியாதை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். புன்முறுவல் காட்டவும், அன்புச்சொற்களைப் பேசவும் கற்றுக் கொள்ளுங்கள்.

* பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும், பண்பையும் காட்டுங்கள்.

* அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள். பிரச்னை ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவங்க முன் வாருங்கள்.

* குடும்ப அமைதியே உலக அமைதிக்கு வித்தாகும். வீண் செலவுகளே குடும்ப அமைதியைக் கெடுக்கும். குடும்பத்தில் அமைதி நிலவ சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல், தியாகம் ஆகியவற்றைக் கடைபிடியுங்கள்.

* குடும்பத்தில் அனைவரும் அல்லது பெரும்பாலோர் பொருளீட்டும் திறன் பெற்றிருத்தல் வேண்டும்.


* பிறர் குற்றத்தை பெரிதுபடுத்தாமலும், பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழிவகுக்கும்.

* தனக்கு கிடைத்த வாழ்க்கைத் துணையைப் பற்றி யாரும் குறை கொள்ளத் தேவையில்லை. அவரவர் அடிமனம் தான் அதை தேர்ந்தெடுத்தது.

* மனத்தூய்மை, சுத்தமான உணவு, அளவான உழைப்பு, முறையான ஓய்வு இவற்றுடன் கூடியதாக வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் உடல், மனம் இரண்டிலும் புத்துணர்ச்சி எப்போதும் நிறைந்திருக்கும்.

* உண்மையில் மனிதனுக்கு எதிரி உண்டு என்றால் அது மனதில் எழும் ஒழுங்கற்ற எண்ணமே. உண்ணும் உணவு உடலில் மட்டுமே வேலை செய்கிறது. ஆனால் எண்ணும் எண்ணமோ எங்கும் பாயும் ஆற்றல் கொண்டது.

## கைகள் வைத்திருக்கும் முறைமைகள் கூறும் உண்மைகள்



**V.A.சிவராஜா**

மனிதர்களின் நடத்தைகளுக்கு காரணங்களை எடுத்தியம்பிக் கொண்டிருக்கும் ஜோதிடமானது, தன்னகத்தே யதார்த்த பூர்வமான அரிய கருத்துக்களைக் கொண்டு விளங்கி வருகின்றது.

அந்த வகையில் வியப்பினையும் உண்மையினையும் ஏற்படுத்தும் தன்மையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் வினோத கலையாக 'ஆளை அறிந்து கைகள் வைத்திருக்கும் முறைமையைக் கொண்டு அனைவரின் குணங்கள் நடத்தைகள் எண்ணப்பாங்கினை கண்டுகொள்ள முடியும்.

'ஒருவர் எப்படித் தனது கரங்களை வைத்திருக்கிறார் என்பதனை அவதானிப்பதன் மூலம் நடத்தைகளை அறிந்து கொண்டால் அவரின் உள்ளக் கிடக்கையில் பொதிந்துள்ள விடயத்தை உணர்ந்து உறவுக்கு கை கொடுக்கலாமா அன்றி தூர விலகிச் சென்று விடுவோமா என்பதை தீர்மானம் செய்துவிட முடியும். கைகள் வைத்திருக்கும் முறைமைகளை அவதானித்து பத்து வகையானவர்களை இனம் கண்டுள்ளோம். இவர்களுள் ஒருவரை அன்றி பலரை நாம் அன்றாட வாழ்வில் சந்தக்கின்றோம,பழகுகின்றோம். ஆனால் இவர்கள் இப்படிப்பட்டவர்களா என்பதை அறியமுடிகின்ற போது ஆச்சரியத்தால், வியப்பினால் அதிசயப்படுகின்றோம். இவர்களுள் நீங்களும் ஒருவராக ஏன் இருக்க முடியாது. உங்களையும் பிறரையும் தெரிந்து கொள்ளுங்கள்.

### அமைதி இல்லாதவர்

சிலருடைய கைகள் ஒரு நிமிடமேனும் சும்மா இருக்காது. தங்கள் கைக்குட்டைகளை எடுத்து விரல்களில் சுற்றுவார்கள். சட்டைப்பொத்தானை பிடித்து திருகுவார்கள். நகங்களைக் கடிப்பார்கள். காகிதத் துண்டை எடுத்து சுக்குநூறாக கிழித்துப் போடுவார்கள். இப்படி எதாவது ஒன்றை இடைவிடாது செய்து கொண்டே இருப்பார்கள். இத்தகையவர்கள் உண்மையிலேயே நல்லவர்களாக வல்லவர்களாக சக்திவாய்ந்தவர்களாக காணப்படுவார்கள். ஆனால் தங்கள் சக்தியை எவ்வாறு ஆக்க வழியில் பயன்படுத்துவது என்று தெரியாமல் புரியாமல் திண்டாடிக்கொண்டிருப்பார்கள். பெரும்பாலும் இவர்கள் சிறுவயதில் எவ்விதமான கட்டுப்பாடு சட்டதிட்டங்களும் இன்றி வளர்ந்தவர்களாக இருப்பார்கள். எனவே வயது வந்த பெரியவர்களான பின்னரும் கூட இவர்கள் தங்களைத் தாங்களே ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியாமல் தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை என்ற நிலைப்பாட்டில் தக்க வைக்கப்பட்டிருப்பர். தங்கள் உள்ளத்தில் பொங்கிவரும் மன உணர்ச்சிகளை இவர்களால் கட்டுப்படுத்திக் கொள்ள முடிவதில்லை.

வாழ்க்கையில் தங்களுக்கென ஓர் உறுதியான குறிக்கோளினையும் இலக்கினையும் வைத்துக் கொள்வதில்லை.இன்றைக்கு ஒரு தொழிலில் கால் வைப்பார்கள். அது பலன் அளிக்கப்போகும் சமயத்தில் பொறுமை இழந்து போய் பிறிதொரு தொழிலுக்கு மாறுவார்கள். இப்படியே ஒன்றைவிட்டு ஒன்றாக மாறிக்கொண்டே போவதால் எந்தத் தொழிலிலும் அல்லது வியாபாரத்திலும் தொட்ட குறை விட்ட குறையாக வெற்றி பெறவோ நிலைத்து நிற்கவோ முடிவதில்லை.

தங்களின் தோல்விகளுக்கு காரணமான பலவீனங்கள் எவை என்பதை இவர்கள் மிக நன்றாக உணர்ந்திருப்பினும் அந்தப் பலவீனங்களைப் போக்கிக் கொள்வதற்கான முயற்சியும் மனவுறுதியும் இவர்களிடம் எள்ளவும் காணப்பட மாட்டாது. எந்தெந்த நேரத்தில் எது தேவைப்படுகின்றதோ அதையே செய்து கொண்டிருப்பர். பிறகு தங்கள் தவறுகளை உணர்ந்து வருந்தி கண்ணீர் விட்டு அழ முற்படுவர். இப்படியே இவர்களின் வாழ்நாள் ஓடிக்கொண்டிருந்தால் எதிர்காலம் எவ்வாறு அமைந்து விடுமோ என்று அஞ்சுவார்கள்.

தங்கள் வாழ்க்கை முறைகளை எப்படி வகுத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி பெரியவர்களிடத்தில் சென்று ஆலோசனை கேட்பார்கள். ஆனால் அந்தப் பெரியவர்களின் யோசனைப்படி நடந்து திருந்துவதற்கு இவர்களினால் முடியாதிருக்கும். பழக்க தோஷமோ. அல்லது விதியின் கைப்பாவையாக இருப்பதோ, ஜாதகப் பலாபலனோ இவர்களின் நடத்தைக்கு காரணமாக அமைந்திருக்கலாம்.

(தொடரும்...)

# சந்தர்ப்பவாதிகள்

அத்தியாயம் 21

ஏ.ஜே.ஞானேந்திரன்

கிழமையில நான் சைக்கிளில சந்தைக்கு வெளிக்கிடலாம். "

உமா தொலைக்காட்சிப் பெட்டிக்கு எதிராக உட்காருந்திருந்தாள். அவள் அடிக்கடி பார்க்க விரும்பும் வனவிலங்குகளின் ஆவணமொன்று ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. இந்த நிகழ்ச்சி பார்ப்பதற்காகத்தான் வருடத்திற்கு 7000 ரூபா கட்டணம் கட்டினாயா என்று அம்மா அவளை அடிக்கடி கேட்பதுண்டு. தொலைக்காட்சி நாடகங்கள் அவளுக்குப் பிடிக்காது. வருடக்கணக்காக ஒளிபரப்பாகி, ஜவ்வு மிட்டாய்போல கதையை இழுத்தடித்துக் கொண்டு செல்லும் இந்த நாடகங்களை இவள் பார்க்க விரும்புவதில்லை. ஆனால் வனவிலங்குகளின் வாழ்க்கையைக் காண்பிக்கும் படங்கள் அவளைக் கவர்ந்திழுக்கும்.

அன்று இப்படித்தான் சீற்றா எனப்படும் புலி இனத்தைப் பற்றிய ஆவணப் படமொன்றைப் பார்த்து வியந்து கொண்டிருந்தாள். உடலால் நீண்ட இந்தச் சிறுத்தை வேட்டையாடும் விதம் அவளை மெய்சிலிர்க்கவைத்தது. கடும் வேகத்தில் ஓடும் மான்கூட்டத்திடையே ஒன்றைக் குறிபார்த்து நாலுகால் பாய்ச்சலில் ஓடி அதன் முதுகில் பாய்ந்து மானின் மரணத் துடிப்பு அடங்கும் வரை குரல்வளையைக் கவ்விப்பிடித்துக் கொல்லும் சிறுத்தையின் பலம் அவளை அதிரவைத்தது. கொன்ற இரையை தன் வாயில் கவ்விக்கொண்டு பற்றையை நோக்கிச் செல்வதும், அதே இரையைக் கவ்வியபடி மரத்தில் ஏறுவதும் அவளுக்கு நம்பமுடியாத காட்சிகளாக இருந்தன. இந்தச் சிறுத்தையின் தாடைக்கு இத்தனை பலமா?

அதே சிறுத்தை மூச்சிறைக்க இரையைக் கலைத்து, கவ்விப் பிடித்துக் கொன்று உண்ணத் தயாராகும்போது, சிங்கம் வேகமாகப் பாய்ந்து வந்து அதை விரட்டி விட்டு, காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போன கதையாக, சிறுத்தை கொன்ற மிருகத்தை சுவைத்துச் சாப்பிடுவதைப் பார்த்தபோது, நாட்டில் மட்டுமல்ல காட்டிலும் சந்தர்ப்பவாதிகளுக்குப் பஞ்சமில்லை என்று மனதுள் நினைத்துக் கொண்டாள். சிங்கங்களுக்கு மாத்திரமல்ல, பிணந்தின்னிக் கழுகுகள் கூட்டமாக வந்து சிறுத்தையைச் சுற்றி நிற்க, இரையை அப்படியே விட்டு விட்டு சிறுத்தை ஓடுவதைப் பார்க்கும்போது அவளுக்குப் பாவமாக இருந்தது.

உழைப்பு ஓரிடம் கொண்டாட்டம் வேறிடமா? கேடுகெட்ட மனிதஉகளும் இதைத் தானே செய்து வருகின்றார்கள்.?

குட்டிகளை வேட்டையாடக் கற்றுக் கொடுக்கும் தாயின் சிரத்தை அவளைக் கவர்ந்தது. வயது இரண்டாகியதும், தாமாகவே வேட்டையாடப் பழக்கி விடும் தாய்ச் சிறுத்தையின் பயிற்சி முறை அவளுக்குப் பிடித்திருந்தது.

தன் அப்பாவை விட தன் தாய் தன்னைப் படிப்பித்து ஆளாக்குவதில் அதிக அக்கறை காட்டிய நிகழ்வுகள் அவள் ஞாபகத்திற்கு வந்தன. தான் மனம் தளர்ந்த நேரங்களிலெல்லாம் தன்னை உற்சாகப்படுத்தி, தன்னை ஒரு நல்ல நிலைக்குக் கொணர்ந்து விட்ட தாயை அந்த நேரம் அவள் நினைத்துக் கொண்டாள். அப்படி ஒரு நினைவு வந்தபோது, அவள் பக்கத்தில் வந்து தாய் உட்கார்ந்து கொண்டாள்.

"என்ன உமா நிகழ்ச்சி இன்னும் முடியேல்லைப் போல கிடக்கு.."

"அம்மா இப்பதான் நிகழ்ச்சி முடியுது. உனக்கு உன்ர நாடகம் பார்க்க நேரமாச்சோ? "

"சீ உமா அதுக்கு இன்னும் நிறைய நேரம் கிடக்கு. உனக்குக் குடிக்க எதையாவது கொண்டுவரலாம் எண்டுதான் வந்தனான்.

"சமீபத்தில் ஆரம்பித்த ரெட்டை வால்குருவி என்ற நாடகத்தை அவள் அம்மா ஒழுங்காகப் பார்த்து வருகிறார். அதென்ன இரட்டைவால் குருவி என்று தாய் கேட்டபோது உமாவிற்கு உடன் பதில் தரமுடியவில்லை. அகராதியைத் தேடிய பிறகுதான் கரிக்குருவி என்று நாம் சொல்லும் பட்சியைத்தான் ரெட்டைவால் குரவி என்கிறார்கள் என்று தெரிய வந்தது. அதனுடைய நீண்டவால் அடியில் இரண்டாகப் பிளவுபட்டிருப்பதால்தான் இந்தக் காரணப் பெயர்.

"அது சரி உமா அண்டைக்குப் பெண் பார்க்க வந்தவங்க உனக்கு போன் பண்ணினாங்களா ?"

" அம்மா நீ அதை இன்னமும் மறக்கேல்லையே? "

"என்னடி இது மறக்கிற விஷயமே உமா?"

அம்மாவைப் பார்க்க உமாவிற்குப் பாவமாக இருந்தது. தான் உண்மையை ஒளிக்க கதை நீண்டுகொண்டே போவதை அவள் உணர்ந்தாள். இனி உண்மையைச் சொல்லி விட வேண்டியதுதான்.

அந்த நேரம் சந்தைக்குப் போயிருந்த உமாவின் அப்பா அங்கே வந்தார். வந்ததும் வராததுமாக ஒரு செய்தியைக் காதில் போட்டார்.

"அண்டைக்கு உன்னை பார்க்க வந்தாரே சித்திரவேல். அவருக்கு இருதய ஆப்ரேஷனாம். சித்திரவேலுக்கு தெரிஞ்ச ஒருவன் என் சினேகிதன். அவன்தான் இந்த நியூசைச் சொன்னான் உமா. "

உமா பெரிதாகக் கவலைப்பட்டாள். பெண் பார்க்க வந்து தன்னை ஏமாற்றியவர் என்ற எண்ணம் அப்பொழுது அவளுக்கில்லை. ஆப்ரேஷன் என்ற சொல் அவள் மனதை வருத்தியது.

"எங்கப்பா அட்மிட் செய்திருக்கினம்? "

"ஏன் போய்ப் பார்க்கப் போறியோ? "

"ஏனப்பா போகக் கூடாது? அறிஞ்சு சொல்லுங்கோ. போய்ப் பார்த்திற்று ஆறுதலா இரண்டு வார்த்தை சொல்லிப் போட்டு வாறதில என்னப்பா நஷ்டம்?

அவள் எழுந்து சமையலறைக்குள் நுழைந்தாள். வியப்போடு தாயும் தந்தையும் அவளைப் பின்னால் பாரடத்தார்கள்.

சித்திரவேல் தன் கட்டிலில் இரண்டு தலையணைகளை நிமிர்த்தி வைத்து விட்டு அன்றைய தினசரியின் பக்கங்களில் கண்களை ஓடவிட்டார். கடந்த பத்து நாட்களில் நடந்த சம்பவங்கள் அவர் மனத்திரையில் ஓடின.

தனக்கு சத்திர சிகிச்சை நடந்தது, மகனும், மருமகளும் தன்னை ஓடியோடிக் கவனித்தது அவரைச் சீக்கரமாகக் குணமடைய அருமருந்துகளாகின.

அதிலும் உமா பல தடவைகள் வந்து அவரைக் கவனித்த முறை அவரை வாயடைக்க வைத்தது.

வாழ்கையின் உயிரோட்டமே இவர்களைப் போன்றவர்களால்தான் என்று அப்பொழுது அவர் நினைத்துக் கொண்டார்.


அப்பொழுது அவர் கதவு மெல்லத் தட்டப்பட்டது.

"உள்ளே வரலாமா? " என்று முகத்தில் சிரிப்போடு அறைக்குள் நுழைந்தார் சரன். கட்டிலில் இருந்து எழும்ப முயன்ற சித்திரவேலை, அன்போடு அழுத்தி, கட்டிலில் சாய வைத்தார் சரன்.

"சித்திரவேல் நீ சரிஞ்சு வசதியாப் படுத்துக் கொள். நான் கட்டிலில உனக்கும் பக்கத்தில இருக்கிறன். "

"எப்ப வந்தனி சித்திரவேல், உன்ர சுவிஸ் சினேகிதன் கார்த்தி பாடு எப்படி? "

"அவனுக்கு இப்ப பரவாயில்லை. பியர், விஸ்கிப் பக்கம் தலைவைச்சும் படுக்கக் கூடாது எண்டு டாக்டஉமாஉ சொல்லியிருக்கினம். இவன் பாவி கேட்டு நடக்கணுமே. அவனுக்கு பெண்டாட்டி இல்லாததும் பெரிய கவலை. அருமையான மனுஷன். அநியாயமா குடிச்சுச் சாகப் போறான். "



"சரன் நீ சொல்லியும் அவன் கேக்கிறதில்லையா? "

"நான் எத்தனை தரம் சொல்லிப் போட்டன். ஓமண்ணை இந்தத் தரித்திரத்தை இனித் தொடுறேல்லை எண்டு சொல்லுவான். பிறகு ஒரு கலியாண வீட்டில போய் மூக்கு முட்ட குடிச்சிற்று வருவான். அது இருக்கட்டும். கார்த்தியின்ர பிரச்சினையில் உடன வரேலாமப் போச்சு. இப்ப எப்பிடி இருக்கு உடம்பு? "

"ஐயோ சரன் நான் கொடுத்து வைச்சவன். என்ர மகனும் மருமகளும் என்னைப் பூப் போல வைச்சுப் பார்க்குதுகள். இன்னும் ஒரு

சரன் சிரித்தார்.

"கல்யாண வீட்டில சந்திக்க வேண்டிய நான் கட்டிலில சந்திக்கிறன்."

"இதுதானே நம்மிட வாழ்க்கை. நினைச்சபடி எல்லாம் நடக்குதே. சரி கல்யாண தேதி குறிச்சுப் போட்டம். அடுத்த மாதம் 9ந் தகதி சனிக்கிழமை. "

பூரிப்போடு ஒரு சுபசெய்தியைத் தன்னுடன் பரிமாறிக் கொண்ட நண்பனின் கையை இறு கப் பற்றிக் கொண்டார் சரன். நண்பனின் பூரிப்பு அவர் முகத்திலும் தொற்றிக் கொண்டது.

(தொடரும்...)

## 86வது இடம் இலங்கைக்கு




உலகளாவிய ரீதியில் இணையத்தை பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது. உலக நாடுகளில் இணையம் பயன்படுத்துபவர்கள் தொடர்பில் வெளியான புதிய ஆய்வினை ஒப்பிடும் போதும் அதிக இணைய பயன்பாட்டாளர்களை கொண்ட நாடுகளில் 86வது இடம் இலங்கைக்கு கிடைத்துள்ளது.

196 நாடுகளிலேயே இலங்கைக்கு 86வது இடம் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த நாட்டில் இணையத்துடன் இணைந்துள்ள நபர்களின் எண்ணிக்கை 19 வீதமாகும். கையடக்கதொலைப்பேசிகளில் இணையத்தை பயன்படுத்துபவர்களும் இந்த பட்டியலுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.


உலகின் நிலையான வீட்டு இணைய இணைப்புக்கள் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு 115 வது இடம் கிடைத்துள்ளது. இலங்கையிலுள்ள மக்கள் தொகையில் நூற்றுக்கு 3.1 வீதமானோர் நிலையான இணைய இணைப்பினை கொண்டுள்ள நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது. தொலைப்பேசி மூலம் இணையத்தளம் பயன்படுத்தும் எண்ணிக்கை 16 வீதமாகும். இதில் இலங்கைக்கு 135 வது இடம் கிடைத்துள்ளது. உலகின் அதிகமாக இணையம் பயன்படுத்தும் நாடுகளில் முதல் இடத்தை தென் கொரியா பிடித்துள்ளது. அங்கு 98 வீதம் இணைய பயன்பாடு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# விளையாட்டு

## ஆசிய செவென்ஸ் ரக்பி தொடர்
## இறுதிப் போட்டியில் வீழ்ந்தது இலங்கை



தென்கொரியாவில் இடம்பெற்ற இரண்டாவது ஆசிய செவென்ஸ் ரக்பி போட்டித் தொடரில் இலங்கை அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.தென்கொரியாவில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் ஹொங்கொங் மற்றும் இலங்கை அணிகள் மோதின.இப்போட்டியில் ஹொங்கொங் 36 ற்க்கு 0 என்ற கணக்கில் இலங்கையை வெற்றிக்கொண்டது.




## பதக்கம் வென்ற தினேஷ் பிரியந்த பிரதமரால் கௌரவிப்பு

(கொழும்பு)

றியோ பரா ஒலிம்பிக்கில் இலங்கைக்கு வெண்கலப் பதக்கம் வென்று கொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத் புதன்கிழமை நாடு திரும்பினார்.

அவருக்கு விமான நிலையத் தில் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் பின்னர் கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தினேஸ் பிரிந்த அவரது பயிற்றுவிப்பாளர் ரோஹித்த பெர்ணான்டோ ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் விருந்து உபசாரமும் இடம் பெற்றது.

கடந்த 8 ஆம் திகதி ஆரம்பித்து அண்மையில் நிறைவடைந்த பரா ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான ரி-46 பிரிவு ஈட்டி எறிதலில் தினேஷ் பிரியந்த ஹேரத் பங்கேற்றிருந்தார். இப்போட்டியில் 58.23 மீற்றர் தூரம் எறிந்து தினேஷ் பிரியந்த வெண்கலப் பதக்கம் வென்றிருந்தார்.

இம் முறை பரா ஒலிம்பிக்கில் இலங்கை பெற்றுக் கொண்ட ஒரே பதக்கம் இதுவாகும். இலங்கையின் பெயரை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டியமைக்காக அவருக்கு 2.5 மில்லியன் ரூபா பணம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்டது. இந்த நிதியை இலங்கை பரா ஒலிம்பிக் சங்கத்தின் பிரதான அனுசரணையாளராக திகழும் டயலொக் ஆசியாட் நிறுவனம் வழங்கியிருந்தமை விசேட அம்சமாகும். அத்துடன் விளையாட்டுத்துறை அமைச்சின் விளையாட்டு நிதி மூலம் 1.5 மில்லியன் ரூபாவும் அவருக்கு வழங்கப்பட்டது. அவரது பயிற்றுவிப்பாளருக்கு 2 இலட்சதது 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த தினேஸ் பிரியந்த கடந்த 6 மாத காலம் விடாத பயிற்சியினால் தான் நான் இந்த வெற்றியை பெற முடிந்தது. அதற்காக நான் பல்வேறு தியாகங்களை செய்தேன் என்றும் அவர் தெரிவித்தார். அனுராதபுரம் இப்பலோகம பிரதேசத்தை சேர்ந்த இவர் 2008 ஆம் ஆண்டு இலங்கை இரணுவத்தில் இணைந்த அவர் கிளிநொச்சியில் இடம்பெற்ற யுத்தத்தில் அங்கவீனம் அடைந்த அவர் பரா ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்றார். இந்த பாராட்டு விழாவில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிரி ஜயசேகர, பிரதியமைச்சர் ஹரீஸ், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணசேனஹெட்டியாராச்சி, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் திஸாநாயக்க, இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா , விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் சமன் பண்டார மற்றும் இலங்கை பரா ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் ரொட்ரிக்கோ . டயலொக் ஆசியாட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அமலி நாணயக்கார ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் பரா ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்ட வீர,வீராங்கனைகள் இந் நிகழ்வில் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும். வெண்கலப் பதக்கம் வென்று கொடுத்த தினேஷ் பிரியந்த ஹேரத் கோப்ரல் தரத்திலிருந்து சார்ஜன்ட் தரத்திற்கு தர முயர்த்தப்பட்டுள்ளார்.

## பாகிஸ்தான் அணியில் மீண்டும் உமர் அக்மல்



(பாகிஸ்தான்)

பாகிஸ்தான் - மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான ரி-20 கிரிக்கெட் தொடர் டுபாய் மற்றும் அபுதாபியில் நடை பெற்று வருகிறது.

இந்தப் போட்டிகள் முடிந்த பின்னர் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் செப்டம்பர் 30 அக்டோபர் 2 மற்றும் அக்டோபர் 5 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றது. முதல் இரண்டு போட்டிகள் ஷார்ஜாவிலும் கடைசிப் போட்டி அபுதாபியிலும் நடைபெறவுள்ளது.

இதற்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் உமர் அக்மல், ஆசாத் ஷபிக் ஆகியோருக்கு இடம் கிடைத்துள்ளது. முன்னணி துடுப்பாட்ட வீரர் உமர் அக்மல் பாகிஸ்தான் அணிக்காக கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கடைசியாக இடம்பிடித்திருந்தார்.

அதன்பின் தற்போது தான் அவருக்கு அணியில் இடம் கிடைத்துள்ளது. இங்கிலாந்து தொடருக்கான பயிற்சி முகாமில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதால் உமர் அக்மல அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அதன்பின் தற்போது எந்தவித அசம்பாவிதத்திலும் ஈடுபடாமல் இருப்பதால் அணிக்கு திரும்பியுள்ளார்.

ஆசாத் ஷபிக் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம், ஸிம்பாப்வே அணிக்கெதிராக கடைசியாக இடம்பிடித்திருந்தார். தற்போது உள்ளூர் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் அணியில் இடம் கிடைத்திருக்கின்றது.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடருக்கான பாகிஸ்தான் அணி விபரம் இதோ:

அசார் அலி (தலைவர்), ஷர்ஜீல் கான், பாபர் அசாம், ஆசாத் ஷபிக், சோயிப் மாலிக், சர்பிராஸ் அகமது,உமர் அக்மல், மொகமது ரிஸ்வான், மொகமது நவாஸ், இமாத் வாசிம், யாசீர் ஷா, ரஹத் அலி, மொகமது ஆமீர், வஹாப் ரியாஸ், ஹசன் அலி சோகைல் கான்.

## சங்கக்காரவின் ஒப்பந்தம் ஒரு வருடத்திற்கு நீடிப்பு



இலங்கை அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார மேலும் ஒரு வருடத்திற்கு சரே அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதனை சரே கிரிக்கெட் அணியின் முகாமைத்துவம் நேற்று (23) அறிவித்துள்ளது. கடந்த காலங்களில் சரே அணிக்காக விளையாடிவரும் சங்கக்கார 2017 ஆம் ஆண்டுக்கும் சரே அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். குமார் சங்கக்கார சர்வதேச கிரிக்கெட்டில் 28 ஆயிரம் ஓட்டங்கள் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இவரின் டெஸ்ட் ஓட்டங்களின் சராசரி 57.40 என்பது குறிப்பிடத்தக்கது. சங்கக்கார சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றுள்ள நிலையில், உள்ளூர் கழகங்களுக்கான தொடர்களில் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



தினச்செய்தி

என்றும் உங்களுடன்

# "உலகில் தலைசிறந்த நாடாக ஸ்ரீலங்காவை கட்டியெழுப்புவேன்,"-சிறிசேன சூளுரை

(நியூ யோர்க்)

உலகின் சிறந்த நாடாக, ஜனநாயகம் மற்றும் தேசிய நல்லிணக்கத்துடன் இலங்கையை கட்டியெழுப்புவதே தனது இலட்சியம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா சூளுரைத்தார்.



சென்ற 21ம் திகதி ஐ.நா பொதுச் சபையில் உலகத் தலைவர்கள் முன்னிலையில் ஜனாதிபதி பேசுகையில் -

• மீண்டும் யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்கும், ஜனநாயகம் மற்றும் தேசிய நல்லிணக்கத்துடன் உலகின் மிக உன்னத நாடாக இலங்கையைக் கட்டியெழுப்புவதே எனது எதிர்பார்ப்பு.



• ஐக்கிய நாடுகள் சபையில் உலகத் தலைவர்கள் முன்னிலையில் உரையாற்றிய ஜனாதிபதி -மீண்டும் யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்கும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி, தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு, பல்வேறுநடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன்.

• தேசிய சிந்தனையை அடிப்படையாக கொண்டு, சர்வதேச ஆதரவு, மற்றும் ஒத்துழைப்புடன், ஸ்ரீலங்காவை உலகில் தலை சிறந்த நாடாக கட்டியெழுப்புவதே எனது எதிர்பார்ப்பு.





• எதிர்வரும் 2017 ஆம் ஆண்டை ஏழ்மையில் இருந்து விடுதலை அடையும் ஆண்டாக இலங்கையில் பிரகடனப்படுத்தியுள்ளேன்.

• நாட்டு மக்கள் பயம், மற்றும் அச்சத்துடன் வாழ்ந்த சூழலை அகற்றி, சுதந்திரமாகவும் ஜனநாயகத்துடனும் வாழும் சூழலை கடந்த 20 மாதங்களுக்குள் ஏற்படுத்தியுள்ளேன்.

• அத்துடன் மக்களுக்குப் போதிய சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையை உலகில் உள்ள மிகவும் சந்தோசமான நாடுகளுள் ஒன்றாக மாற்றி, மக்களுக்கு கையளிப்பதே எனது முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். இதற்காக மக்களுக்கு போதிய சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.



• சமூகத்தில் ஏற்பட்டுள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கு அனைவரும் முன் வரவேண்டும்.

• எனது நாட்டில் மீண்டும் ஒரு முறை யுத்தம் நிகழாமல் தடுப்பதற்கு, 30 வருட கால மிலேச்சத்தனமான பயங்கரவாத யுத்தத்திற்கு முகம் கொடுத்த நாடு என்ற வகையில்,நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கும், தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பவும் நான் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன்.



• இதற்கான ஆசிர்வாதத்தை பல நாடுகளில் இருந்து கௌரவத்துடன் எதிர்பார்க்கின்றேன் - எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சென்ற 18 ஆம் திகதி கொழும்பிலிருந்து, 71வது ஐ.நா சபையின் பொதுக்கூட்டத்தில் பங்குபற்ற நியூயோர்க் பயணமானார்.

19ம் திகதி நியுயோர்க் நகரில் உள்ள ஜோன் எவ் கெனடி விமான நிலையத்தில் வந்து இறங்கினார். அவரை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, உதவி அமைச்சர் அஜித் பி.பெரேரா, நியுயோர்க் நகரில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி டாக்டர் ரொஹான் பெரேரா, வாஷிங்டனில் உள்ள இலங்கையின் ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் ஆகியோர் வரவேற்றார்கள்.

ஜனாதிபதி சிறிசேன நியுயோர்க் நகரத்தில் வைத்து அவுஸ்திரேலியாவின் பிரதமர் மல்கொம் ரேன்புல், ஐநா சபையின் செயலர் நாயகம் பான் கீ-மூன், அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெரி, இந்திய வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் எம்.கே அக்பர், மற்றும் நேபாள பிரதமர் புஷ்ப கமால் டால் ஆகியோரையும் ஐநா பொதுச் சபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது புறம்பாகவும், தனித் தனியாகவும் சந்தித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி நியுயோர்க்கில் வழங்கிய விருந்தில் பங்குபற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் அவரது பாரியார் மிஷேல் ஒபாமா ஆகிய இருவரும் வரவேற்று கௌரவித்தார்கள்.

"உலகில் உள்ள நாடு களுக்கு இலங்கை ஒரு முன்மாதிரியான நாடாக அமைந்துள்ளது. இலங்கைக்கு அமெரிக்கா எந்தச் சந்தர்ப்பத்திலும் எல்லா வகையான உதவிகளையும் வழங்க தயாராக உள்ளது," என்று பராக் ஒபாமா கூறினார்.

மேலும் பொதுவாகவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் ஐக்கிய நாடுகள் சபைக்கான விஜ



யம் வெற்றிகரமாகவே அமைந்தது என்றால் மிகையாகாது.

உலக நாடுகளின் தலைவர்கள் மத்தியில் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியின் பேச்சு பெரிய அளவில் வரவேற்கப்பட்டுள்ளது.

உலகில் போதைப் பொருள்களை தடைசெய்ய வேண்டும் என்ற வேண்டுகேள் வரவேற்கப் பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா மக்கள் மத்தியில் மாத்திரம் இன்றி, உலக மக்கள் மத்தியிலும் தடை செய்ய வேண்டும் என்ற அந்த அறைகூவல், மானிடத்தின் மீது மைத்திரிபால சிறிசேன கொண்டுள்ள அக்கறையும், கரிசனையையும், துளாம்பரமாகமாக வெளிக்காட்டுகின்றது. இறுதியில் மைத்திரிபால சிறிசேனவின் அமெரிக்க விஜயம் அவரை மாத்திரம் பெருமைபடுத்தும் ஓர் நிகழ்ச்சியாக அமையாமல், உலகநாடுகள் ஸ்ரீலங்கவை ஒரு முறை நின்று நிதானித்து பார்க்க வைத்துள்ளது என்று கூறிக்கொண்டால் அது உண்மை.

இந்த செய்தி அச்சுக்குப் போகும் வரை இலங்கை ஜனாதிபதி நாடு திரும்பவில்லை.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு செப்ரம்பர் 24, 2016 அன்று வெளியிடப்பட்டது.